விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்
Thamil Naatham

கல்வி ஒளி இலவச இணைப்பிதழ் உள்ளே...

இராகம் 01 | தாளம் 06 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 13 புதன்கிழமை (27.06.2012) | பக்கங்கள்: பதினாறு +8

## பொலிஸார் பார்த்திருக்க இராணுவத்திற்கு எதிராக




# திருமுறிகண்டியில் ஆர்ப்பாட்டம்

### கூட்டமைப்பினர் நடத்தினர்

வவுனியா, கிளிநொச்சி நிருபர்கள்

வடக்கு கிழக்கில் காணி சுவீகரிப்பில் இராணுவமும், அரசாங்கமும் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டி தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் ஏற்பாட்டில் திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்தின் முன்றலில் ஆர்ப்பாட்டமொன்று நேற்று இடம்பெற்றது.

"எமது இடங்களையும் பொதுநிலங்களையும் மீட்டெடுப்பதற்கான கவனஈர்ப்பு போராட்டம்" என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் "எங்கள் நிலம் எமக்கு வேண்டும்" "எங்களுடைய வீட்டுக்கு எங்களை செல்லவிடு" போன்ற பதாதைகள் தாங்கியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் நின்றனர்.

இதன் போது ஏராளமான பொலிஸார் முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தின் முன்றலில் குவிக்கப்பட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் சிறு பதற்றம் காணப்பட்டாலும் எவ்வித அசம்பாவிதங்களும் (2ஆம் பக்கம் பார்க்க)

## சொந்தக் காணிகளில் மீள்குடியேற்றுமாறு கோரியதாலேயே திருமுறிகண்டியில் சிக்கல்



### இராணுவம் எவரையும் தாக்கவோ காயப்படுத்தவோ இல்லை - அரச அதிபர்

முல்லைத்தீவு திருமுறிகண்டி பிரதேசத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள் சிலரை பலவந்தமாக வேறு இடங்களில் மீள்குடியேற்ற முயன்றதாகவும் அதற்கு மறுப்புத் தெரிவித்த மக்கள் படையினரால் கடுமையாக தாக்கப்பட்டு மீண்டும் மெனிக் பண்ணைக்கு திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை மீள்குடியேற்ற அமைச்சும் முல்லைத்தீவு மாவட்ட செயலகமும் முழுமையாக நிராகரித்துள்ளன. சுய விருப்பத்துடனே (2ஆம் பக்கம் பார்க்க)

### இஸட் (Z) புள்ளி விவகாரம் :

## மீண்டும் நீதிமன்றத்தின் உதவியை நாடுகிறது மானியங்கள் ஆணைக்குழு

இஸட்(Z) புள்ளி வழங்குவது தொடர்பாக உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைய புதிய பாடத்திட்டம், பழைய பாடத்திட்டம் என தனித்தனிய இஸட் புள்ளிகளை வெளியிட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆயத்தமாக இருக்கிறது என ஆணைக்குழுவின் துணைப் பேராசியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

எனினும் இஸட் புள்ளிகளை வெளியிடுவது தொடர்பாக உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பில் சில விளக்கக் கோரல்கள் தேவைப்படுகிறது. இது தொடர்பாக மீண்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நீதிமன்றத்தின் (2ஆம் பக்கம் பார்க்க)

## சட்ட ரீதியான உரிமத்தை பெறாத காணிகள் கையகப்படுத்தப்படும்

### காணி சீர்திருத்த அதிகாரசபை

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட காணிகளுக்கு இதுவரை சட்டப்படியான உரிமைகளைப் பெற்றுக் கொள்ளாத காணிகளை காணிச் சீர்திருத்த ஆணைக்குழு கையகப்படுத்த உள்ளதாக யாழ் மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகார சபையின் பணிப்பாளர் விமலராஜ் தெரிவித்துள்ளார்.

1972 ஆண்டு தொடக்கம் 1984ம் ஆண்டுக்கிடைப்பட்ட காலப் பகுதியில் நடமாடும் காணிக் கச்சேரி மூலம் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினரால் காணிகள் வழங்கப்பட்டன. இந்தக் (2ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் 222 பேருக்கு ஆசிரியர் நியமனம்

### நாளை மறுநாள் ஜனாதிபதி வழங்குவார்

கல்வியியற் கல்லூரிகளில் தமது கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்துள்ள 163 ஆசிரியர்களுக்கான நியமனங்கள் நாளை மறுதினம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் வழங்கி வைக்கப்படவுள்ளன.

இந்நியமனக் கடிதங்களைப் பெறவுள்ள சகல ஆசிரியர்களும் அலரி மாளிகைக்கு வருகைதந்து தமது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு (2ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் 4 குடிசை வீடுகள் எரிந்து நாசம்

முல்லைத்தீவு, அலம்பில் பகுதியில் 4 குடிசை வீடுகள் தீயில் எரிந்து சாம்பராகியுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (25) பிற்பகல் அலம்பில் பிரதேசத்திலுள்ள தங்கபுரம் எனும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

சுற்றுப்புற சூழலை சுத்தம் செய்து குப்பை கூளங்களுக்கு தீவைத்த போது (2ஆம் பக்கம் பார்க்க)

## காங்.கடற்பரப்பில் 10 இந்திய மீனவர் ஒப்படைக்கப்படுவர்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை கைது செய்யப்பட்ட பத்து இந்திய மீனவர்கள் நாளை மறுதினம் (29) இந்தியாவிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

மேற்படி 10 இந்திய மீனவர்களுடன் இவர்கள் கைது செய்யப்பட்ட வேளை கைப்பற்றப்பட்ட 2 படகுகளுமே நாளை மறுதினம் காங்கேசன் துறை கடற்கரைக்கு அப்பால் கடற்பரப்பில் (2ஆம் பக்கம் பார்க்க)

## கலாசார மையங்களுக்கு பாதிப்பின்றி வீதி நிர்மாணம்

கலாசார முக்கியத்துவம் வாய்ந்த அடங்களுக்கு எந்தவிதமான பாதிப்பு ஏற்படாதவகையில் வீதி அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்படும் என்று வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் மோகன் மரியதாஸ் தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு தொடக்கம் வடக்கின் வீதி அபிவிருத்தி திட்டம் மிகச்சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது 2012 ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் பிரதான வீதிகளின் புனரமைப்பு பணிகளை நிறைவு செய்யுமாறு (2ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் சிறுநீரக பரிசோதனை நிலையம்



சென்னை காமாட்சி மருத்துமனை யாழ்ப்பாணத்தில் சிறுநீரக பரிசோதனை நிலையங்களை ஸ்தாபிக்க உள்ளது. இது தவிர கொழும்பு மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் இவ்வாறான இந்நிலையங்கள் ஸ்தாபிக்கப்படும் எனவும் இப்பிரதேச மக்களுக்கு வைத்திய சேவைகளையும், சிறுநீரக நோய் பற்றிய விழிப்புணர்வுகளையும் சிறப்பாக வழங்கும் என சென்னை காமாட்சி மருத்துவ (2ஆம் பக்கம் பார்க்க)

## முறிகண்டிச் சம்பவம் குறித்து இராணுவம் விசாரணை

முறிகண்டி மக்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினரா? இல்லையா? என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிக சேகரா கூறினார்.

அத்துடன் மீள்குடியேற்ற நடவடிக்கையில் இராணுவம் சம்பந்தப்படவில்லையென்றும், பொலிசாரும் அரச அதிபருமே சம்பந்தப்பட்டுள்ளனரென்றும் இராணுவப் பேச்சாளர் மேலும் கூறினார்.

# வவுனியா, மன்னார் மதிப்பீட்டு திணைக்களம் யாழ். அலுவலகத்துடன் இணைந்து செயலாற்றும்

வவுனியா, மன்னார் மாவட்டத்தின் மதிப்பீட்டுப் பணிகள் யாழ் பிராந்திய செயலகத்துடன் இணைந்து எதிர்வரும் 1ம் திகதியிலிருந்து செயற்படவுள்ளதாக யாழ் பிராந்திய மதிப்பீட்டுத் திணைக்களக் காப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் இந்த இரண்டு மாவட்டங்களின் செயற்பாடுகள் அநுராதபுரம் பகுதியில் உள்ள ராஜரட்ன பகுதியில் உள்ள காரியாலயத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. இங்கு சென்று சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு மொழிப்பிரச்சினை பிரதானமான காரணியாக இருந்தமையால் கடந்த 13ம் திகதி நடைபெற்ற பிராந்திய மதிப்பீட்டாளர்களுடனான கலந்துரையாடலில் இந்த இரண்டு மாவட்டங்களும் யாழ் பிராந்தியத்துடன் இணைத்துக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டது யாழ் பிராந்தியத்தில் வட மாகாணத்தில் உள்ள அனைவரும் மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ள முடியும். இதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திலும் 5 உதவி மதிப்பீட்டாளர்கள் பயிலுனர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக மதிப்பீட்டுத் திணைக்களத்தின் யாழ் பிராந்திய பணிப்பாளர் எஸ். ஜெகநாதன் தெரிவித்தார்.

# யாழ். மக்கள் குறைகேட்க மாநகரசபையின் முறைப்பாட்டுப்பெட்டி

யாழ்மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் முறைப்பாட்டு பெட்டிவைப்பதற்கு

தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாநரசபை ஆணையாளர் பிரணவநாதன் தெரிவத்துள்ளார்.

இதன்முலம் மாநகர சபைக்குட்டபட்ட பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் தங்கள் பிரதேசத்தில் உள்ளபிரச்சனைகள் குறைபாடுகள் தொடர்ப்பில் முறைப்பாடுகளைச் செய்ய முடியும் என்று அவர் தெரிவித்தார்.

மாநகர சபைக்குட்ட 23 வட்டாரங்களிலும் இந்த முறைப்பாட்டு பெட்டிகள் வைக்கப்படவள்ளது. தற்போது மாநகர சபையினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கு அமைவாக மக்கள் குறைகேள் செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் பட்டுவருகிறது.

## வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக விக்னேஸ்வரன்

வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக மாகாணக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்த விக்னேஸ்வரன் கல்வியமைச்சின் பிரதிச் செயலாளராக வடமாகாண ஆளுனரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆறுனர் தலைமையில் நடைபெற்ற வடமாகாண கல்வி அபிவிருத்தி சம்மந்தமான கலந்துரையாடல் நடைபெற்றபோது இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வரும் எஸ். சத்திய சீலனின் உதவிய இந்தப்பதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நியமனம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் விக்னேஸ்வரன் தனது கடமையை இன்றைய தினம் பொறுப்பேற்றுக் கொள்கின்றார். அவர் வகித்து வந்த மாகாணக் கல்விப்பணிப்பாளர் பதவிக்கு மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளராக கடமை யாற்றிவந்த உதயகுமார் பதில் கல்விப் பணிப்பாளராகச் செயற்பட வுள்ளார் என்று மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

## இதழியல் கண்காட்சி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய மாணவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி ஊடகக் கற்கை மாணவர்களுடன் இணைந்து நடத்தும் "தமிழ் இதழியல் வரலாறு" என்ற தொனிப்பொருளிலான கண்காட்சி வியாழன், வெள்ளிக்கிழமைகளில் (28,29/06/2012) முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை கொக்குவில் இந்துக் கல் லூரி சுப்பிரமணிய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

## சட்ட ரீதியான காணி....... (தொடர்)

காணிகளுக்கான உரிமம் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக சட்டரீதியான உரிமையை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டது.

தற்போது சூழல் மாற்றமடைந்து சுமுகநிலை ஏற்பட்டுள்ளமை யால் மக்கள் அந்தக் காணிக் குரிய உரிமத்தினை பெற்றுக் கொள்ள வேணடும்.

அவ்வாறு பெற்றுக் கொள்ளாத பட்சத்தில் அக்காணிகளை கையகப்படுத்த காணிச் சீர்திருத்த ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என்றும்

இது தொடர்பான விபரங்கள் பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

## முல்லைத்தீவில்...... (தொடர்)

தீ பரவியதன் காரணமாக இத்தீவிபத்து ஏற்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதில் குடிசை வீடுகள் நான்கு முற்றாக தீயில் எரிந்து நாசமாகியதுடன் அவ்வீடுகளில் இருந்த உடமைகளும்' சேதமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன.

## யாழ்ப்பாணத்தில் சிறுநீரக.....(தொடர்)

மனைத்தலைவர் மருத்துவ நிபுணர் ரீ.ஜீ.கோவிந்தராஜன் தெரிவித்தார்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இப் பத்திகையாளர் மாநாட்டில் கருத்துரை வழங்கிய மருத்துவ நிபுணர் கோவிந்தராஜன் மேலும் கூறுகையில்,

இன்று சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவது ஆகிய பிராந்தியத்தில் பெரும் சவாலை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. இதனால் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டுவருகின்றனர். இச் சவாலை எதிர்த்து அதில் வெற்றிபெற நாம் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சிறுநீரக நோய் பற்றிய விழிப்புணர்வுகள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும். அவர்களுக்கான வைத்தியவசதிகள் சிறப்பாக வழக்கப்பட வேண்டும்.

கொழும்பில் ஆகஸ்ட் மாதத்திலும் யாழ்ப்பாணத்தில் செப்டம்பர் மாதத்திலும், மட்டக்களப்பில் அக்டோபர் மாதத்திலும் காமாட்சி மருத்துவமனையின் சிறுநீரக பரிசோதனை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டு செய்யபடவுள்ளன. இச் சிறுநீரக பரிசோதனை நிலையங்கள் [illegible]க்கள் மத்தியில் சிறுநீரக நோய்கள் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதுடன் சிறுநீரக நோயாளர்களுக்கான வைத்தியசேவைகளையும் வழங்கும்.

இந்தியாவைவிட இலங்கையில் மருத்துவ உட்கட்டமைப்பு வளங்கள் வசதிகள் போதுமானதாக இல்லை. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மருத்துவ வளங்கள் வசதிகள் நகரங்களையே மையப்படுத்தி செயற்படுத்வருகின்றன. நகரங்களுக்கு வெளியே கிராமப் பகுதிகளில் வாழும் மக்கள் இம் மருத்துவ வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு செல்ல முடியாத கஸ்டங்களை அனுபவித்து வருகின்றனர். மருத்துவ வசதிகளை அனைத்து மக்களும் பெற்றுக் கொள்ள வழிவகுக்கப்பட வேண்டும்.

## மீண்டும்...... (தொடர்)

உதவியை நாடியுள்ளது. சட்டத்தரணிகள் ஊடாக ஆணைக்குழு இந்த விளக்கக் கோரல்களை நீதிமன்றத்திடம் கேட்டுள்ளது என குறிப்பிட்டார்.

இஸட் புள்ளிகள் வெளியிடும் வேலை எங்களுடையதல்ல, பரீட்சை திணைக்களக்களமே இதனை வெளியிடுகிறது. இந்த விடயம் தொடர்பாகவே நீதமன்றத்திடம் விளக்கம் கோரல்கள் பெறப்படவுள்ளன.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய இஸட் புள்ளிகள் தயார் நிலையிலேயே உள்ளது. நீதிமன்றத்தின் விளக்கக் கோரலையடுத்து உடனடியாக சிறுதும் தாமதமின்றி வெளியிடப்படும்.

அத்துடன் திட்டமிட்டபடி எதிர்வரும் அக்டோபர் மாதம் சகல பல்கலைக்கழகங்களிலும் 2013 ஆம் ஆண்டிக்கான பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுவிடும். அதுவும் தலைமைத்துவ பயிற்சியுடன் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. என இதில் கலந்துகொண்ட உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக் அமைய புதிதாக இஸட் புள்ளிகளை வெளியிடும் போது பல்கலைக்கழக அனுமதிக்காக ஏற்கனவே விண்ணப்பித்த மாணவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க நிலை ஏற்படலாம் என காமினி சமரனாயக்க தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தர பெறுபேறுகளுக்கு அமைய மீள்திருத்தத்திற்கு விண்ணப்பித்திருந்த பிள்ளைகளுக்குரிய பெறுபேறுகளும் பரீட்சை திணைக்களம் இன்று வெளியிட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நேற்று அவசர விஷேட செய்தியாளர் மாநாடொன்று நடைபெற்றது.

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசியர் காமினி சமரனாயக்கா,பேராசியர் சரத் குலதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஏற்கனவே நடைமுறையிலுள்ள இஸட் புள்ளியை ஆய்வு செய்து வெளியிட்ட பேராசிரியர்களில் ஒருவரான பேராசிரியர் சரத் குலதுங்கவும் எந்தவொரு மாணவருக்கும் அநீதி இழைக்கப்பட்டுவிடக் கூடாது என்ற நோக்கிலேயே இதனை தயாரித்ததாக விளக்கமளித்தார்.

## வடக்கில் 222...

(தொடர்)

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் அறியத் தந்துள்ளார்.

நியமனம் பெறும் ஆசிரியர்களில் ஆண்கள் கறுப்பு நிற நீள் காற் சட்டையும் வெள்ளை நிற சேட்டும் கழுத்துப் பட்டியும் (வுநை) அணி வதுடன், பெணகள் தங்களது கல்வியியற் கல் லூரி சீருடையுடன் சமூகமளிக்க வேண்டும்.

இவ் ஆசிரியர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கு கொள்வதற்கான அழைப் புக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட் டுள்ளன என்று அறி விக்கப்பட்டுள்ளது.

இதே வேளை ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வடமாகாணத்திலுள்ள 59 பாட சாலைகளுக்கு தகவல் தொழில் நுட்பப் பாடத்திற்கான ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட உள்ளன. எதிர்வரும் 29ந் திகதி வெள்ளிக் கிழமை காலை ஒன்பது மணிக்கு அலரி மாளிகையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

## காங்.கடற்.... (தொடர்)

வைத்து இந்திய அதிகாரிகளிடம் கையளிக்கப்படும்.

இதேவேளை, இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்த இந்திய மீனவர்கள் எவரையும் கடற்படையினர் தாக்கவில்லை எனவும் அவ்வாறு வெளியாகும் செய்திகள் பொய்யானவை எனவும் தெரிவித்துள்ள இலங்கை கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் பிரசன்ன கோசல வர்ணகுலசூரிய, அத்துமீறி பிரவேசிப்போர் மீது சட்டரீதியான நடவடிக்கைகளை மட்டுமே தாம் எடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## காலாசார.....(தொடர்)

ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததற்கு அமைய முக்கியமான வீதிகள் இரவு பலலாக புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம் பலாலி வீதி, யாழப்பாணம் காங்கேசன்துறைவீதி என்பன தற்போது துரித கதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்தப்புனரமைப்பு வேலைகளுக்காக யாழப்பாணம் காங்கேசன்துறை வீதி எதிர்வரும் 5ஆம் திகதிவரை மூடப்பட்டு அகலிப்பு பணிகள் நடைபெறவுள்ளது இந்த வீதி அகலிப்பு தொடர்பாக பல்வெறு சர்ச்சைகள் எழுந்த போதும் தமிழர்களின் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் கோயில்கள் பாரம்பரி கட்டிடங்களுக்கு எந்தவித பாதிப்பும் எற்படாதவகையில் வீதி அகலிப்பு பணிகள் முன்னெடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

## திருமுறிகண்டியில்....

(தொடர்)

இன்றி ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன் ,சிவசக்தி ஆனந்தன் ,வினோ நோகதாரலிங்கம் ,சிறிதரன் ,சரவணபவன் ,சுமந்திரன் ஆகியோரும் ஜனாநாயக மக்கள் முன்னணியின் சார்பில் மனோ கணேசன் ,கொழும்பு மாநகர சபை உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகச் செயலாளருமான பாஸ்கரா,இடதுசாரி கட்சி பிரதிநிதி சிறிதுங்க ஜெயசூரிய, தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ.ஆனந்த சங்கரி ,வவுனியா நகர சபையின் உப தலைவர் எம்.எம்.ரதன் ,தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்

## சொந்தக்...(தொடர்)

திருமுறிகண்டி பிரதேசத்தைச் சேர்ந்த சில குடும்பங்கள் மெனிக் பாமிலிருந்து மீள்குடியேற்றத்துக்கு அழைத்து வரப்பட்டதாகவும் இவர்களில் 18 குடும்பங்கள் தொடர்பிலே பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்றும் இவர்கள் உரிமை கோரும் காணிகள் அவர்களின் சொந்தக் காணிகள் என்பதை உறுதி செய்த பின் 3 வாரங்களில் அவர்களை மீள் குடியேற்ற நடவடிக்கை எடுப்பதாக முல்லைத் தீவு அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகம் தெரிவித்தார்.

முல்லைத் தீவு மாவட்டத்தின் ஒட்டிசுட்டான் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த திருமுறிகண்டி மக்கள் சிலர் தொடர்பில் [illegible]ந்துள்ள பிரச்சினை தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு அரச அதிபருடன் தொலைபேசியில் தான் கலந்துரையாடியதாகவும் இது தொடர்பில் அறிக்கையொன்றை கோரியுள்ளதாகவும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் டபிள்யூ எம். பந்துசேன தெரிவித்தார். வழமையான மீள்குடியேற்ற நடைமுறையே இங்கும் பின்பற்றப்பட்டதாக கூறிய' அவர் இது தொடர்பில் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளை முழுமையாக நிராகரிப்பதாகவும் தெரிவித்தார்.

## இன்றைய இராசி பலன் (27.06.2012)

நந்தன வருடம் ஆனித் திங்கள் 13ஆம் நாள் புதன்கிழமை
நட்சத்திரம்: அத்தம் பின்னிரவு 2.06 வரை, அதன்பின் சித்திரை
திதி: அட்டமி மாலை 5.01 வரை, அதன்பின் நவமி
சுபநேரம்: 4.25 - 5.55
இராகுகாலம்: 11.55 - 1.25
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம்:** பொருள் செலவு, தெய்வ அனுகூலம், வாக்குச் சித்தி
**இடபம்:** மனமகிழ்ச்சி, வாக்கு விரோதம், பொருட் செலவு
**மிதுனம்:** பணப் புழக்கம், மனக்கஷ்டம், புத்தி சாதுரியம்
**கடகம்:** பிரயாணம், பொருட் செலவு, வாக்கு கலகம்.
**சிங்கம்:** பொருள் நஷ்டம், வீண்செலவு, குறைகேட்டல்
**கன்னி:** முன்கோபம், அதிகாரம், வாக்கு மேன்மை
**துலாம்:** எதிர்பாராத வரவு, உடல் சோர்வு, தூரதேசச் செய்தி
**விருச்சிகம்:** இடமாற்றம், கடன் தொல்லை, யோசனை மிகுதி
**தனுசு:** தொழில் விருத்தி, பொருள் வரவு, இனசனக் கொண்டாட்டம்
**மகரம்:** தொழில் மேன்மை, மனமகிழ்ச்சி, பெரியோர் ஆதரவு
**கும்பம்:** கைப்பொருள் இழப்பு, வழக்கு விவகாரம், குறைகேட்டல்
**மீனம்:** இல்லச் சிறப்பு, நண்பர்கள் ஆதரவு, சிறு தூரப் பயணம்.

# வளிமண்டலம் ஊடாக மனித உடலில் சேரும் பார உலோகங்களால் சிறுநீரகப் பாதிப்புக்கள்

## உலக சுகாதார ஸ்தாபன ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(மர்வின் மரிக்கார்)

வடமத்திய மாகாணம் மற்றும் கந்தளாய், சிராந்துரு கோட்டை, நிக்கவெவ பிரதேசங்களில் வாழும் மக்கள் மத்தியில் ஏற்படுகின்ற சிறுநீரகப் பாதிப்புகளுக்கு பார உலோகங்கள் (Heavy Metals) ஒரு காரணம் என்பது மருத்துவ ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஜெனீவா தலைமையகத்தில் தொற்றா நோய்கள் தொடர்பான உலகளாவிய சிரேஷ்ட ஆலோசகரும், இணைப்பாளருமான பேராசிரியர் சாந்தி மெண்டிஸ் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்ற ஆய்விலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

வடமத்திய மாகாணம் மற்றும் கந்தளாய், கிராந்துருகோட்டை, நிக்கவெல பிரதேசங்களில் வாழும் மக்கள் மத்தியில் சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகமாகும். இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் மத்தியில் இப்பாதிப்பு அதிகரித்து காணப்படுவதற்கான காரணங்களைக் கண்டறிவதற்கான ஆய்வு உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஒத்துழைப்புடன் பேராசிரியர் காந்தி மெண்டிஸ் தலைமையில் ஒரு வருடத்திற்கும் மேலாக இடம் பெற்று வருகின்றது.

இந்த ஆய்வு தொடர்பாக ஊடகங்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான செய்தியாளர் மாநாடு சுகாதார அமைச்சின் மேலதிகச் செயலாளர் பாலித மஹீபால தலைமையில் சுகாதார அமைச்சின் நோய் பரவுதல் தடுப்புப் பிரிவில் நேற்று நடைபெற்றது. இச்செய்தியாளர் மாநாட்டின்போதே மேற்படி தகவல்களை பேராசிரியர் காந்தி மெண்டிஸ் கூறினார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் பேராசிரியர் தொடர்ந்தும் கூறுகையில், வடமத்திய மாகாணம் மற்றும் கந்தளாய், சிராந்துருகோட்டை, நிக்கவெல ஆகிய பிரதேசங்களில் வாழும் மக்கள் மத்தியில் ஏற்படுகின்ற சிறுநீரகப் பாதிப்பு இலங்கைக்கு மாத்திரமுரியதல்ல. மாறாக எல்சவடோர், சீனா, கம்போடியா, பங்களாதேஷம், நிக்கரகுவா உட்பட பத்து நாடுகளில் இவ்வாறான பிரச்சினை இருக்கின்றது. என்றாலும் அந்நாடுகளை விடவும் இலங்கையில் தான் இப்பாதிப்பு தொடர்பாக விரிவான அடிப்படையில் ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றது.

மேற்படி பிரதேசங்களில் வாழும் 15 வயது முதல் 70 வயது வரையானோரிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகளை சிறு நீரகப் பாதிப்பு தொடர்பான ஆய்வுக்கு உற்படுத்தினோம். இவர்களில் 15.9 சதவீதத்தினர் சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதை அடையாளம் காண முடிந்துள்ளது.

சிறுநீரகப் பாதிப்பானது நான்கு கட்டங்களைக் கொண்டது. இவற்றில் முதலிரு கட்டங்களும் ஆபத்தானதல்ல. அவை வெளியே தெரிவதும் குறைவு. ஆனால் ஏனைய இரு கட்டங்களுமே ஆபத்தானவை.

சர்வதேச மட்ட ஆய்வு முடிவுகளின்படி சிறுநீரகப் பாதிப்புக்கு கெட்னியம், ஆசனிக் போன்ற பார உலோகங்கள் பாரிய பங்களிப்பு செய்கின்றன இந்த உலோகங்களை அடிப்படையாக வைத்து இலங்கையில் பாதிப்பு காணப்படும் பிரதேசங்களிலிருந்து பெறப்பட்ட தண்ணீர், உணவு, பொருட்கள், மண் என்பவற்றின் மாதிரிகளை ஆய்வுக்கு உட்படுத்தினோம். இவற்றில் தண்ணீரில் பார உலோகங்களின் பிரச்சினை இல்லை.

ஆனால் உணவுப் பொருட்களில் காணப்படும் பார உலோகங்களின் மட்டம் தற்போதுள்ள அளவை விடவும் அதிகரிக்குமாயின் அது பிரச்சினையாக மாறும். அதே நேரம் நிலத்தில் காணப்படும் பார உலோகங்களின் அளவைக் குறைப்பதும் அவசியம்.

இந்த பார உலோகங்கள் வளிமண்டலத்தின் ஊடாக மனித உடலுக்குள்ளும், நிலத்திலும் சேருகின்றது. இதற்கு வளிமண்டலம் மாசடைவது முக்கிய காரணி என்றார்.

---

# கிளிநொச்சி குளத்து வான் கதவு நிர்மாணம் ரூ.200 இலட்சம் செலவு

கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதான பாதையில் கிளிநொச்சி குளத்திற்கு அருகில் உள்ள ஐந்தடி வான் பாலம் இருநூறு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

மழைக்காலங்களில் கிளிநொச்சி நகருக்கும் கிளிநொச்சி கிழக்கு பகுதிக்கும் இடையேயான போக்குவரத்திற்கு கடந்த காலங்களில் பெரும் சிரமத்தை ஏற்படுத்தி வந்த ஐந்தடி வான் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட பாலம் மூலம் அந்த போக்குவரத்து சிரமத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தனியார் போக்குவரத்துதுறை அமைச்சர் சி.பி. ரட்ணாயக்க, அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார், வடமாகாண ஆளுநர் சந்திரசிறி, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

---

# 2013 ஆகஸ்ட்டுக்குப் பின்னர் யாழில் மின்வெட்டு இல்லை

அடுத்த வருடம் ஆகஸ்ட் மாதத்துக்குப் பின்னால் யாழ்ப்பாணத்தில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது. சுன்னாகம் மின் நிலையம் நாட்டின் தேசிய மின்னமைப்புடன் இணைக்கப்படவுள்ளதாலேயே மின்வெட்டு நீக்கப்படும். தற்போது வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையான எழுபது கிலோ மீற்றர் தூரத்துக்கு இருபது மீற்றர் உயரமான கொங்கிரீட் தூண்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த மின்சார விஸ்தரிப்புத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின்கீழ்தான் தேசிய மின் இணைப்போடு சுன்னாகத்தின் புதிய மின்நிலையத்தோடு தொடர்புகள் ஏற்படுத்தப்படும்.

---

# நாட்டுக்கூத்துக்கள் மக்களை கவர்ந்த காலம் ஒன்றிருந்தது

## ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இமெல்டா சுகுமார்



பாசையூர் புலவர்களின் மூலம் தோற்றம் பெற்ற நாட்டுக்கூத்து நூல்கள் வரலாறு ரீதியாக பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்'' என ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பாசையூர் மதுர கவிப் புலவர் நீ.மிக்கோர்சிங்கம் எழுதிய ''புனித கிறிஸ்தோப்பர்'' என்னும் நாட்டுக்கூத்து நூல் வெளியீட்டு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலவர் மிக்கோர்சிங்கம் எழுதிய இந்த நாட்டுக்கூத்து நூலை அவரது புதல்வர்கள் நூல் வடிவில் வெளியிடுவது மிகவும் பெருமைக்குரிய விடயமாகும். அசாதாரண சூழ்நிலையிலும் கூட, அவரது நூலின் பிரதிகள் தொலைந்தும் அவற்றை வெளிநாடுகளில் உள்ள உறவினர்கள் மூலம் தேடிக்கண்டு பிடித்து அவற்றைத் தொகுத்துள்ளனர். நான் பாசையூர் சென்.அன்ரனீஸ் மகளிர் வித்தியாலயத்தின் பழைய மாணவி. இந்தப் பாடசாலையில் கற்ற காலத்தில் மேடையேறும் நாட்டுக் கூத்துக்களை மக்கள் ஆவர்த்துடன் பார்வையிடுவதை அக்காலத்தில் காணமுடிந்தது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, சின்னத் திரைகளும், கைத்தொலைபேசிப் பாவனைகளும் அதிகரித்து வரும் இக் காலத்தில் இப்படியான நாட்டுக் கூத்துக் கலைகள் நூல் வடிவில் வெளிவருவது மிகவும் பாராட்டத்தக்கது. தூய தமிழில் கருத்துருப் பெற்று எல்லோருக்கும் பிரயோசனமான முறையில் இந்த நாட்டுக்கூத்து நூலை எழுதிய புலவரின் முயற்சி பாராட்டத்தக்கது. அவரது புதல்வர்கள் தங்களின் தந்தையின் பெருமையை வெளிக்கொண்டுவரும் விதத்தில் மேற்கொண்ட செயற்பாடுகள் மிகவும் வரவேற்கத்தக்கது என்றும் தெரிவித்தார்.

பண்டிதர் அழகராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.பல்கலைக் கழக கிறிஸ்தவ, இஸ்லாமியத் துறை விரிவுரையாளர் அருட்தந்தை பிலேந்திரன் அடிகளார், பாசையூர் பங்குத் தந்தை றோய்பேடினன் அடிகளார் மற்றும் வெளிநாடுகளில் வாழ் உறவினர்கள், ஊர் மக்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

---

# செங்கல்பட்டில் இலங்கை அகதிகள் தொடர்ந்து உண்ணாவிரதம்

தங்களை தடுத்துவைத்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழகத்தின் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் உள்ள 10 இலங்கை அகதிகள் தொடர்ந்து 11 நாளாகவும் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுவருகின்றனர்.

கடத்தல் சம்பவங்கள் மற்றும் மனிதக் கடத்தல் சம்பவங்களில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், புலிகள் இயக்க அனுதாபிகளையும் உள்ளடக்கிய சிறிய குழுவினர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 'இந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட 8 இலங்கைத் தமிழர்கள் சில நாட்களுக்கு முன்னர் செங்கல்பட்டு அரசாங்க வைத்தியசாலையில் பொலிஸாரினால் அனுமதிக்கப்பட்டுள்ளபோதிலும், அவர்கள் தொடர்ந்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டுவருகின்றனர்.

இந்த ஒரு வருடத்திற்குள் அவர்கள் மேற்கொள்ளும் இரண்டாவது உண்ணாவிரதப் போராட்டம் இதுவாகும். கடந்த ஏப்ரல் மாதம் இவ்வாறான போராட்டத்தை அவர்கள் மேற்கொண்டிருந்தனர்.

வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சென்று இவர்களை பார்வையிட்ட இந்திய கம்யூனிசக் கட்சியின் மாநில செயலாளர் த.பாண்டியன் தெரிவிக்கையில், "அவர்களின் தேக ஆரோக்கியம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் ஆபத்தான நிலையில் இருப்பதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்'' என்றார்.

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் 29 இலங்கைத் தமிழர்கள், 2 நைஜீரியப் பிரஜைகள், ஒரு தென்னாபிரிக்கப் பிரஜை, ஒரு நோர்வே பிரஜை தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

"இந்த முகாமில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் 3 பேர் உள்ளனர். இலங்கையில் ஏனைய ஆயுதக் குழுவைச் சேர்ந்த சில உறுப்பினர்களும் உள்ளனர். ஆனால் அண்மையில் குற்றச்செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் காரணமாகவே இவர்கள் இங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்'' என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

---

# கல்கிசையிலுள்ள டயர் களஞ்சியசாலையில் தீ



கொழும்பு, கல்கிசையிலுள்ள டயர் களஞ்சியசாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை ஏற்பட்ட பாரிய தீ விபத்துக் காரணமாக ஒருவர் பலியானதுடன், 3 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த தீ விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை தொடர்வதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக தெஹிவளை - கல்கிசை மாநகரசபையின் தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இத்தீ விபத்தைத் தொடர்ந்து காலி வீதியில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டது.

# பலஸ்தீனத்துக்கு ஐ.நா.வில் நிரந்தர உறுப்புரிமை கிட்டுமா?

ஐ.நா.சபையில் பலஸ்தீனத்திற்கு நிரந்தர உறுப்புரிமை கிட்டுமா? பலஸ்தீனத்தை தனியரசாக சர்வதேசம் அங்கீகரிக்குமா? என்ற கேள்வி இன்று நேற்றல்ல, கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாகப் பலஸ்தீன மக்கள் மத்தியில் மட்டமன்றி அரபு உலகம் உள்ளிட்ட முழு உலகத்திடமும் இருந்து வருகின்றது. இவ்வாறான கேள்வி தற்பொழுது எழுவதற்கு மத்திய கிழக்கு அரசியலின் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான ஆய்வு மையத்தின் ஆய்வாளரான ஸ்ரீபன் றொக், "பலஸ்தீனம் அரச ஒழுங்கமைப்பில் காணப்படுவதனால், அதனை அங்கீகரிப்பதில் சர்வதேசம் ஏன் தயக்கம் காட்டி வருகின்றது? ஐ.நா.சபை பலஸ்தீனத்திற்கான நிரந்தர உறுப்புரிமையினை ஏன் வழங்க மறுக்கிறது?" என்ற கேள்வியை தனது ஆய்வுக் கட்டுரையில் எழுப்பியுள்ளார்.

எனவே தொடர்ச்சியாகச் சர்வதேச அங்கீகாரத்தினை, அதாவது ஐ.நா.சபையின்

பலஸ்தீனத்தின் நிரந்திர அங்கத்துவம் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய நாடுகள் தமது ரத்து அதிகாரம் மூலம் பலஸ்தீனத்தின் முயற்சியினை தோற்கடித்தன. பொதுச்சபையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் அமெரிக்காவின் 71 நேச நாடுகள் இத்தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்ததனால் பொதுச்சபையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு பெற முடியாததால்

தற்போதைய சூழலில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நெருங்கி வருவதனால் இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் பலஸ்தீனத்திற்கு எதிராகவும் எந்தவித நடவடிக்கைகளையும் தற்போதைய ஜனாதிபதி ஒபாமா எடுக்க மாட்டார் என்பது வெளிப்படையான உண்மையாகும். ஏனெனில் இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரத்தில் ஒபாமா

இருப்பினும் பலஸ்தீனம் இம்முயற்சியில் சளைக்காது எதிர்வரும் காலங்களில் ஐ.நாவின் சுகாதார நிறுவனம், சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம் ஆகியவற்றின் நிரந்தர அங்கத்துவத்தினை





தற்போதைய கொதிநிலையே காரணம். இதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் பலஸ்தீன மக்களின் ஜனநாயகவழி ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக இஸ்ரேலிய இராணுவம் தாக்குதலை மேற்கொண்டமையும், அமெரிக்காவில் நடைபெறவிருக்கின்ற ஜனாதிபதி தேர்தல் என்பனவும் காரணமாகும். தற்போதைக்கு ஐ.நா.சபை பலஸ்தீனத்திற்கு அங்கத்துவம் வழங்கப் போவதில்லை. அதுவே இறுதியும், நிரந்தரமுமான முடிவாக அமையும் என்று எவராலும் கூறிவிட முடியாது.

1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அன்றைய பலஸ்தீன விடுதலைப் போராட்ட அமைப்பின் தலைவர் மறைந்த யஸிர் அரபாத் பலஸ்தீனத்தின் தனிநாட்டுப் பிரகடனத்தினை வெளியிட்டார், அதனைப் பிறநாடுகள் வரவேற்று அங்கீகரித்தன. அத்துடன் அரபாத்தின் முயற்சிக்கு பலத்த ஆதரவும் வழங்கின. எனினும் அத்தகைய அங்கீகாரமானது பலஸ்தீனம் தனியரசாகப் போவதற்கு வழிவகுக்கவில்லை. ஏனெனில் சர்வதேச அங்கீகாரம் என்பது தனிப்பட்ட நாடுகளின் அங்கீகாரமேயன்றி வேறல்ல. ஐ.நாவில் அங்கத்துவம் பெற்றுக் கொள்வதற்கான முயற்சியாகவே இது கருதப்படுகின்றது. கடந்த ஆண்டு செப்டெம்பர் 23 ஆம் திகதி பலஸ்தீன அதிபர் முகமட் அப்பாஸ் ஐ.நாவிடம் நிரந்தர உறுப்புரிமையைக் கோரியிருந்தார். இது 1967 ஆம் ஆண்டு ஆறு நாள் யுத்தத்தின் பின்னர் காணப்பட்ட காசா, கிழக்கு ஜெருசேலம், மேற்குக் கரைப்பகுதிகளை உள்ளடக்கியதான பலஸ்தீனத்தைக் குறித்து நிற்கிறது. ஆனால் இத்தகைய கோரிக்கையை ஐக்கிய நாடுகள் சபை ஏற்று அங்கீகாரமளிக்கவில்லை.

அங்கத்துவத்தினைப் பெறுவதற்குப் பலஸ்தீனம் தனது முயற்சிகளில் தோற்றுப்போனாலும் தனது இறுதி இலக்கினை நோக்காகக் கொண்டு அது செயற்பட்டு வருகின்றது. பலஸ்தீனத்தின் இந்த விடா முயற்சிக்கும் பல்வேறு காரணங்கள் காணப்படவே செய்கின்றன. ஐ.நா. சபையில் அரசு பெறுகின்ற அங்கத்துவம் அந்த அரசினைச் சர்வதேச சமூகம் அங்கீகரித்தது என்ற அடிப்படையில் அமைகிறது. மேலும் உலக நாடுகளுடன் இராஜதந்திர உறவினைப் பேணுவதற்கும், சர்வதேச நீதிமன்றத்தில் அங்கத்துவம் பெறுவதனூடாக நீர், நில ஆக்கிரமிப்பு, அகதிகள் தொடர்காக இஸ்ரேலுக்கு எதிராக செயற்பட்டு நீதியினைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். பலஸ்தீனம் நீதியினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் பல்வேறு நோக்கங்களை அடைந்து கொள்ள முடியும் என்றும் பலஸ்தீனம் நம்புகின்றது.

பலஸ்தீனத்தின் முயற்சி தோற்கடிக்கப்பட்டது. பலஸ்தீனத்தை ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற அனுமதிக்கப் போவதில்லை என அமெரிக்கா திடசங்கர்ப்பம் பூண்டுள்ளது. கடந்த வருடம் பாதுகாப்புச் சபையில் பலஸ்தீனத்தின் அங்கீகாரம் தொடர்பாக வாக்கெடுப்பு

**எஸ்.எஸ்.திரன்**

இடம்பெற்ற காலப்பகுதியில் சி.என்.என். தொலைக்காட்சி செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் அமெரிக்காவின் ஐ.நா சபைக்கான இராஜதந்திரி ரோபேர்ட் பிகாடோ "பலஸ்தீனம் அரசால் அங்கீகரிக்கப்படுவதற்கான திட்டத்திற்கு அல்லது அது ஐ.நாவின் நிரந்தர உறுப்புரிமையைக் கோருகின்ற திட்டத்திற்கு, பலஸ்தீனத்தின் அரசை அங்கீகரிப்பதற்கான திட்டத்திற்கு அமெரிக்கா என்றுமே ஆதரவு அளிக்காது" என்றார்.

இஸ்ரேலைப் பலவீனப்படுத்தி வருவதாகவும், பலஸ்தீனத்தை பலப்படுத்துவதாகவும் குடியரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் றிகாப் பிக்கர் கடுமையாக விமர்சித்து வருகின்றார். தற்போதைக்கு ஒபாமா, இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரத்தினை அடக்கி வாசிப்பதே சாலப் பொருத்தமாகும். அத்துடன் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி வாகை சூட உதவியாகவும் இருக்கும்.

1998 இன் பலஸ்தீனத்தின் தனிநாட்டுப் பிரகடனம் தோல்வியில் முடிந்தது. அக்காலத்திலே ஐ.நாவின் பொதுச் சபையின் பார்வையாளர் அந்தஸ்தினைப் பலஸ்தீனம் பெற்றது. 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பலஸ்தீனம் ஐ.நாவின் துணைநிறுவனமாக யுனெஸ்கோவின் நிரந்தர, உறுப்புரிமையினை பெற்றுக்கொண்டது.

தற்போதைக்கு ஐ.நா.வின் நிரந்தர உறுப்புரிமையினைப் பெறுவதிலேயே பலஸ்தீனம் தோல்வி கண்டுள்ளது.

பெற எத்தனித்து வருகின்றது. எனவே எதிர்வரும் காலங்களில் ஐ.நாவின் துணை நிறுவனங்கள் பெரும்பாலானவற்றில் பலஸ்தீனம் நிரந்தர அங்கத்துவம் பெறலாம்.

இது பலஸ்தீனத்திற்கு ஐ.நாவின் நிரந்தர உறுப்புரிமையைப் பெறுவதற்குப் பக்க பலமாக அமையும். இன்று அல்லது நாளை இல்லாவிடில் என்றோ ஒரு நாள் பலஸ்தீனம் ஐ.நாவின் நிரந்தர உறுப்புரிமையைப் பெற்றுவிடும்.

அது எப்போது என்றுதான் பலஸ்தீனம் மக்கள் ஏங்குகின்றனர். பலஸ்தீனத்தின் முயற்சிக்கு அமெரிக்கா தடையாகவும், முட்டுக் கட்டையாகவும் இருக்கவும் போகின்றது. கடந்த வருடம் பலஸ்தீனத்திற்கு நிரந்தர உறுப்புரிமை வழங்குவது தொடர்பாக யுனெஸ்கோவில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் அமெரிக்கா கலந்து கொள்ளாததோடு ஆண்டுக்கு யுனெஸ்கோவிற்கு வழங்கி வரும் 60 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்காது மறுத்தமை பலஸ்தீனம் மீதான அமெரிக்காவின் தீவிர எதிர்ப்பினை வெளிப்படுத்தியது. சமகாலத்தில் லிபியா, சிரியா நாடுகளில் பயங்கரவாதத்திற்கு எதிராக போராடிய தனது இஸ்லாமிய எதிர்ப்பினை அமெரிக்கா மத்திய கிழக்கில் காட்டியும் வருகிறது. ஏன் பலஸ்தீனத்தில் சுயநிர்ணய உரிமையினை அமெரிக்கா அங்கீகரிக்கவில்லை? என்ற கேள்வி பலஸ்தீனர்களிடமும் அரபு உலகம் உள்ளிட்ட முழு உலகத்திடமும் காணப்படுகின்றது. அமெரிக்கா இவ்வாறான போக்கினைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமாயின், அமெரிக்காவிற்கு எதிராக இஸ்லாமிய உலகத்தினை தீவிரமாக திசை திருப்பும். ஐ.நாவின் நிரந்தர உறுப்புரிமை பலஸ்தீனத்திற்கு கிட்டுமா? அதன்படி சர்வதேச சமூகம் பலஸ்தீனத்தை அங்கீகரிக்குமா?

# அணு உலைகளும் இயந்திரங்களே!

"அறிவியலின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முனைந்தால், புதியதாகப் பத்துப் பிரச்சினைகள் உருவாகும்" இது ஜார்ஜ் பெர்னார்ட்ஷாவின் கூற்று. உலகெங்கும் அணு சக்திக்கு எதிராக நடக்கும்



AFTER: SATELLITE SHOT OF FUKUSHIMA UNIT 3'S SMOKING RUINS
Following second hydrogen explosion at the Daiichi nuclear plant, 3/14/11.

போராட்டங்கள் இக்கூற்றை மெய்ப்பிக்கின்றன. மின்சாரம் என்னும் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கண்டு பிடிக்கப்பட்ட அணுமின் உலைகள் எதிர்பார்த்தபடி மின்சாரத் தேவையையும் நிறை வேற்றவில்லை என்பது கூடுதல் பிரச்சினை.

கூடங்குளம் அணு மின்நிலை யத்தை மூட வலியுறுத்தி மக்கள் நடத்திவரும் போராட்டம் இதுவரை இத்தேசம் காணாத ஓர் எழுச்சி. தன்னெழுச்சியாக மக்கள் திரண்டு நடத்தும் போராட்டம்.

ஒருபுறம் மக்கள் அணு சக்திக்கு எதிராகப் போராடுவதும் மற்றொருபுறம் மின்சாரம் வேண்டும் அதனால் கூடங்குளத்தைத் திறக்க வேண்டும் என்று கூறி வேறு பகுதி மக்கள் வீதிக்கு வருவதும் இன்று வாடிக்கை ஆகிவிட்டது. இச்சமயத்தில் நாம் ஒரு முக்கியமான அம்சத்தை நினைவில் கொள்ள வேண்டும், "மின்சாரம் வேண்டும்" என்று கேட்கும் உரிமை மக்கள் அனைவருக்கும் உள்ளது. ஆனால் "கூடங்குளத்திலிருந்துதான் மின்சாரம் வேண்டும்" என்று கேட்கும் உரிமை யாருக்கும் கிடையாது.

அணு உலைகள் பற்றியும் அதன் கொடூர விளைவுகள் பற்றியும் நாம் நன்றாக அறிந்திருந்தாலும் இரண்டு அம்சங்களை மட்டும் கருத்தில் கொள்ள வேண்டும். அணு விஞ்ஞானிகள், அணு உலைகளைப் பார்வையிடும் சுற்றுலாப் பயணிகள், அணு மின்நிலையம் வந்தால் இந்த நாடு சுபிட்சமாகிவிடும் என்றும் நம்பும் அதிமேதாவிகள், அணுசக்தி மட்டுமே

நம்முடைய நாட்டை "வல்லரசு" ஆக மாற்றும் என்று நம்பும் தேசபக்தர்கள் எல்லோரும் ஒரு வி'யத்தை மறந்துவிட்டார்கள். இவர்கள் கூறுவதுபோல் அணு உலைகள் பாதுகாப்பானவை என்றால் ஏன் எந்த நாடும் அணு உலை விபத்து

இழப்பீட்டிற்கு ஒத்துகொள்ள மறுக்கிறது? மனசாட்சி உள்ளவர்கள் இந்தக் கேள்விக்கு விடையை அறிந்து கொண்டு பின்னர் அணு உலைகளை ஆதரியுங்கள்.

தொழில்நுட்பத்திலும் பேரிடர் மேலாண்மையிலும் மிகவும் தேர்ச்சி பெற்ற ஜப்பானே புகுீமா விபத்தைக் கையாள முடியாமல் திணறியது. போபால் அனுபவம் பேரிடரை எதிர்கொள் வதில் எமது நிலைமை என்ன என்பதைத் தெளிவுபடுத்தி விட்டது. கால்நூற்றாண்டைக் கடந்தும் நாம் இன்னும் போபாலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியவில்லை. நாம் எப்படிப் "பேரிடர் மேலாண்மை"யை மேற்கொள்ளப்போகிறோம்?

நாம் அனைவரும் அறிந்தபடி ஓர் அணு உலையின் ஆயுள் காலம் சுமார் நாற்பது ஆண்டுகள்தாம். அதற்குப் பிறகு நாம் அதைச் செயல் இழக்கச் செய்ய வேண்டும். ஆனால் நமது நாட்டில் தாராப்பூர் அணு உலை நிறுவி கிட்டத்தட்ட ஐம்பதாண்டுகள் நிறைவடைந்துவிட்டன. ஆனால் நாம் இன்னும் அதைச் செயலிழக்கச் செய்வது பற்றிப் பேசவே ஆரம்பிக்கவில்லை.

அணுசக்தி மோசமானதுதான் என்று ஏற்றுக் கொண்டாலும், மின்சாரத்துக்கு என்னசெய்வது என்ற கேள்வி எழாமல் இல்லை.

பொதுவாகவே நம் எல்லாக் காரியங்களுக்கும் இரண்டு காரணங்கள் இருக்கும். ஒன்று நல்ல காரணம். இன்னொன்று உண்மையான காரணம். அணுசக்தியைப் பொறுத்

தமட்டில் கூறப்படும் நல்ல காரணம் மின்சாரம். உண்மையான காரணம் என்ன என்பது எல்லோரும் அறிந்ததுதான். அணுசக்தியைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பது என்பது

வாதங்களை வைத்தாலும் "மின்சாரம்" என்னும் "நல்ல காரணத்தை" வைத்து இந்த அரசுகள் மக்களை நம்ப வைத்து விடும். நாம் நமக்கு மின்சாரத்தை எவ்வாறு

**அணு உலைகள் வெறும் இயந்திரங்களே! உலகில் பழுதடையாத இயந்திரங்களே இல்லை எனலாம். ஆனால் இந்த இயந்திரம் பழுதானால் விளைவுகள் மிக மோசமாக இருக்கும். கல்பாக்கத்தில் ஒரு விபத்து நடந்தால் நாம் சென்னையில் வாழும் கோடிக் கும் அதிகமான மக்களை எப்படி வெளியேற்றுவோம்? அதற்கு என்ன திட்டங்கள் இருக்கின்றன? அதற்கு எவ்வளவு பணம் செலவு ஆகும்? இந்தக் கேள்விகளுக்கு யாருக்கும் விடை தெரியாது. புகுஷிமாவில் இப்போது நடந்த விபத்தால் ஏற்பட்ட பொருள் செலவு சுமார் ஐந்து லட்சம் கோடி. இது போக அணு உலைகளைச் செயலிழக்கச் செய்ய சுமார் எண்பதாயிரம் கோடி செலவு பிடிக்கும் என்றும் சுமார் நாற்பது வருடங்களாகும் என்றும் உறுதியான அறிக்கைகள் சொல்கின்றன.**

ஈயைக் கொல்வதற்குப் பீரங்கியைப் பயன்படுத்துவதைப் போல. தண்ணீரை நீராவி ஆக்குவதற்கு மட்டுமே அணுசக்தி பயன்படுகிறது. ஆனால் இந்த உலைகளில் வரும் கழிவுகளை என்ன செய்வது என்பதற்கு எந்த

பெறமுடியும் என்பதைப் பார்ப்போம்.

ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் நீடித்து நிலைக்கக்கூடிய ஆற்றல் மூலங்கள் மூலமான மின்சாரத்தை மனித குலம் முழுமைக்கும் அளிப்பதற்கான இயக்கம் கடந்த



நாட்டிடமும் தொழில் நுட்பம் இல்லை. இந்தக் கழிவுகளை நாம் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பாதுகாக்க வேண்டும். நாம் என்ன தான் அணுசக்திக்கு எதிராக

சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதிலும் குறிப்பாக 2012-ம் ஆண்டு, "நீடித்து நிலைக்கும் (மின்) ஆற்றலை அனைவருக்கும் அளிப்பதற்கான சர்வதேச ஆண்டாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சூழலுக்கு இசைந்தும் எந்த ஆபத்தையும் ஏற்படுத்தாமல் மின்சாரத்தைத் தயாரிப்பதற்கு மாற்று வழிகள் இருந்தும் அதிகச் செலவு பிடிக்கும், எதிர்காலத்தின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கும் அணுமின் நிலையங்களை ஆதரிப்பது சாமானிய மக்களின் அறியாமையே. ஆனால் அணுமின் நிலையங்களை அரசியல் கட்சிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் ஆதரிப்பது அறியாமையால் அல்ல. மக்களின் நலனை அடகுவைத்துப் பெரும் பொருளீட்டும் செயலே.

அணுசக்தியின் அறிவியல், பொருளியல், அரசியல் குறித்துப் பொது மக்களிடம் ஏற்படும் விழிப்புணர்வும் ஒன்றுபட்ட எதிர்ப்புக் குரலுமே நமது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பாதுகாப்பாக அமைப்பதற்கு உதவும்.

இருந்தும் நம்முடைய அரசுகள் ஏன் இந்த அணு உலைகளைப் பிடித்துத் தொங்கிகொண்டு இருக்கின்றன என்று ஆராய்ந்தால் நமக்கு ஒரு விஷயம் புலப்படும். அணு உலைகள் மற்றும் பெரிய மின் திட்டங்கள் எல்லாம் பல லட்சம் கோடிகள் முதலீடு உடையவை, இவை அனைத்தும் பெரும் முதலாளிகள் செய்யக் கூடியவை. ஆனால் சூரிய சக்தி, காற்றாலை போன்றவை சின்ன அளவினாலான முதலீடு உள்ளவை.

சிறு, குறுந்தொழில் நடத்துனர்தாம் இதில் ஆர்வம் காண்பிப் பார்கள்.

அரசுகளுக்குப் பெரு முதலாளிகள் மீதுதான் அக்கறை. காரணம் சொல்லத் தேவை இல்லை. இதைத் தான் சங்க இலக்கியத்தில் நான்மணி கடிகையில் சங்கப் புலவன் படியுள்ளான்,

**கல்லில் தோன்றும்**
**கதிர்மணி**
**காதலி சொல்லில்**
**தோன்றும் உயர் மதம்**
**மற்றும்**
**உன் அருளில் தோன்றும்**
**அறநெறி எல்லாம்**
**பொருளில் தோன்றிவிடும்**

(சென்னை "பூவுலகின் நண்பர்கள்" சுற்றுச்சூழலுக்கான அமைப்புச் செயல்பாட்டாளர் கோ.சுந்தர்ராஜன் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி)

## அகச் சிவப்புக் கதிர்களிலிருந்து மின்சாரம்

சூரியனில் இருந்து வெளிப்படும் அகச்சிவப்புக் கதிர்களில் இருந்தும் மின்சாரம் தயாரிப்பதற்கான புது வழியை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதுதொடர்பான ஆய்வை அமெரிக்கா ரைஸ் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மேற்கொண்டிருக்கின்றனர்.

ஆய்வாளர்களில் ஒருவரான, மின்னியல் மற்றும் கணினிப் பொறியியல் பேராசிரியர் நவோமி ஹாலாஸ் கூறுகையில் "தற்போது சூரிய சக்தி மின்சாரம் தயாரிப்பதற்கான சிலிக்கான் பேனல்களில் அகச் சிவப்புக் கதிர்களைக் கண்டுபிடித்து ஈர்ப்பதற்கான வழி இல்லை. எனவே, நாங்கள் அதில் நானோ ஆன்டெனாக்களை செமி கண்டக்டருடன் இணைத்து அகச்சிவப்புக் கதிர்களில் இருந்து மின்சாரம் தயாரிக்க வகை செய்திருக்கிறோம்.

இதன் மூலம், அதிகத் திறன் வாய்ந்த சூரியசக்தித் தகடுகளை உருவாக்கலாம்" என்கிறார்.

பூமிக்கு வரும் சூரிய சக்தியில் மூன்றில் ஒரு பங்கு அகச்சிவப்புக் கதிர்களாகும். ஆனால், இன்று பெரும்பாலான சூரியசக்தித் தகடுகளில் பயன்படுத்தப்படும் பொருளான சிலிக்கானால் அகச்சிவப்புக் கதிர்களின் சக்தியை ஈர்க்க முடிவதில்லை.

அகச் சிவப்புக் கதிர்கள் போன்ற குறிப்பிட்ட அலை நீளத்துக்குக் குறைவாக உள்ள வெளிச்சக் கதிர்கள், மின்சக்தி உற்பத்திக்குப் பயன்படாமல் சாதாரண சூரியசக்தித் தகடுகளைக் கடந்து சென்று விடுகின்றன.

அந்த நிலையைத் தங்கள் கண்டுபிடிப்பு மாற்று கிறது என்கிறார்கள் இந்த ஆய்வாளர்கள்.

தங்களின் கண்டுபிடிப்பைக் கொண்டு, அதிதிறன் வாய்ந்த சூரிய சக்தித் தகடுகளை பெருமளவில் உற்பத்தி செய்ய முடியும்.

அவற்றின் மூலமாக அதிக அளவில் சூரியசக்தி மின்சாரத்தைத் தயாரிக்க முடியும் என்று இந்த ஆய்வாளர்கள் நம்புகிறார்கள். இதுதொடர்பான ஆய்வுகள் தொடர்ந்து முனைப்பாக நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஜூன் மாதம் 27ஆம் திகதி புதன்கிழமை

# எழுவானத்துச் சூரியனைப் போன்றவர்கள் மாணவர்கள்!

"இளைஞர்கள், எழுவானத்துச் சூரியனைப் போன்றவர்கள்" என்று சொன்னார் மக்கள் சீனத்தின் மாபெரும் தலைவர் மாசேதுங். ஏனெனில் அவர்கள் இளமைப் துடிப்பும், வீரியமும் மிக்கவர்கள். அது மட்டுமல்ல, சரியோ, பிழையோ மிக இலகுவாகவே கருத்துக்களால் ஆகர்ஷிக்கப்படக் கூடியவர்களுமாவர். சரியான கருத்துக்களால் மட்டுமல்ல, பிழையான கருத்துக்களாலும் கூட ஆகர்ஷிக்கப்படக் கூடியவர்கள். உலகின் பல நாடுகளில் இடம்பெற்ற ஆயுதப் போராட்டங்கள், கிளர்ச்சிகள், எழுச்சிகள், எதிர்ப் புரட்சிகள் எனப் பல்வகை இயக்கங்களில் உந்து சக்திகளாகத் திகழ்ந்தவர்கள் அவர்களே. அதிலும் குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்களே கிளர்ச்சிகளின் பின்புலமாகத் திகழ்ந்துள்ளனர். பங்களாதேஷில் "முஹ்தி பஹ்னி" என்ற மாணவர் அமைப்பே 1971இல் பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷைப் பிரிக்கும் போராட்டத்துக்கான ஆரம்ப வேட்டுகளைத் தீர்த்தது.

இதேபோன்று சீக்கியப் பிரிவினைவாத இயக்கத்தின் காலிஸ்தான் போராட்டத்திலும் மாணவர் அமைப்பே முக்கிய பங்கேற்றிருந்தது. இதே நிலைமை இலங்கையிலும் இடம்பெற்றதைக் காண முடியும். சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற முக்கிய மூன்று ஆயுதக் கிளர்ச்சிகளுக்கும் பின்புலமாக மாணவர்கள் இருந்திருக்கின்றனர். இலங்கையின் வடக்கில் 1970களில் தோன்றிய தமிழ் மாணவர் பேரவைதான் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப வேட்டுகளைத் தீர்த்தது. 1971இலும் 1980களின் பிற்பாதியிலும் தென்னிலங்கையில் ஜே.வி.பி. மேற்கொண்ட ஆயுதக் கிளர்ச்சிகள், சிறுபிள்ளைகளின் வேளாண்மை போலானது. இதேபோன்றுதான் வடக்கிலும் கிழக்கிலும் வெடித்த ஆயுதப் போராட்டமும் ஆடி அடங்கிப் போய்விட்டது. பேரழிவுகளை மட்டுமே விளைச்சலாகத் தந்துவிட்டு ஓய்ந்துபோன இப் போராட்டங்களிலிருந்து பாரிய பாடங்களை மக்கள் கற்றுக்கொள்ள முடியும். இலக்கு சக்தி என்ன? இயக்கு சக்தி என்ன? எதிரி யார்? நண்பன் யார்? என்பவற்றையெல்லாம் சரிவரப் புரிந்துகொள்ள முடியாமல் நடத்தப்பட்ட கிளர்ச்சிகள் இவை. "மக்கள், மக்கள் மட்டுமே தீர்க்கமான சக்தி" என்பதைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல், ஆயுதங்களில் மட்டுமே நம்பிக்கை வைத்துநடத்தப்பட்ட இந்தக் கிளர்ச்சிகள் எல்லாமே பேரழிவைத்தான் தந்தன. இளைஞர்கள் குறிப்பாக மாணவர்கள் பிழையான கருத்துக்களால் ஆகர்ஷிக்கப்பட்டு தவறாக வழிநடத்தப்பட்டதின் விளைவு இது.

சுதந்திரத்துக்கு முன்னமும் பின்னரும் இன ரீதியான பூச்சாண்டிகள் இரு இனத் தரப்பிலிருந்தும் ஏட்டிக்குப் போட்டியாக உசுப்பி விடப்பட்டுள்ளன. இதற்கு உதாரணமாக 1950 களில் மூன்றாம் வகுப்புத் தமிழ் மாணவர்களுக்குப் போதிக்கப்பட்ட நூலில் காணப்பட்ட ஒரு பாடத்தை காட்ட முடியும். துட்டுகெமுனு - எல்லாளன் சம்பந்தப்பட்ட ஒருநிகழ்ச்சியே என்று கூறி ஒரு பள்ளிப் பாடம் தரப்பட்டிருந்தது.

குறண்டிய நிலையில் துட்டுகெமுனு படுத்திருக்கிறான். துட்ட கெமுனுவைப் பார்த்துத் தாயார் விகாரமாதேவி கேட்கிறார், "ஏன் மகனே குறண்டிய நிலையில் படுத்திருக்கிறாய்?" என்று. "அம்மா! ஒரு புறம் கடல், மறு புறம் தமிழர்கள். அதனால்தான் நீட்டி, நிமிர்ந்து படுக்காமல், குறண்டிய நிலையில் படுத்திருக்கிறேன்" என்று துட்டுகெமுனு பதில் சொல்வான். துட்டுகெமுனு என்ற அவனது பெயர் துட்டகைமுனுவாகத் தமிழில் மாற்றப்பட்டிருக்கும். இப்படித்தான் இன விரிசல்கள் சமுதாயத்தில் மட்டுமல்ல, பாடநூல்களிலும் ஆதிக்கம் செலுத்தின.

இன ஐக்கியம், மனிதாபிமானம், மாற்று இனத்தவனின் அரசியல், கலாசார, பண்பாட்டு விழுமியங்களை மதிக்கும் பண்பும், பாங்கும் மாணவர்களுக்கு ஊட்டப்பட வேண்டும். மொழி, இனம், கலாசாரம், பண்பாடு எல்லாம் மனிதர்களால் உருவாக்கப்பட்டவையே. குறிப்பிட்ட காட்டு நிலப்பரப்புக்குள் ஒரு சமூகக் கூட்டமாக வாழ்ந்த ஆதிமனிதர்கள் தமக்குள் தொடர்பாடல் பரிவர்த்தனையை மேற்கொள்ள பாவித்த பரிபாஷையே மொழியாக உருவெடுத்தது. கால ஓட்டத்தில் அனைத்து மொழிகளுமே கற்பிழந்தன. கட்டில், தொட்டில் என்ற போர்த்துக்கீசச் சொற்களைத் தமிழ் உள்வாங்கிக் கொண்டது. இதைப்போன்று தமிழர்களின் உடையான "வேட்டி" என்ற சொல்லை ஆங்கிலம் உள்வாங்கிக் கொண்டது. மாற்றுமொழிக் கலப்புகள் அனைத்து மொழிகளிலுமே உள்வாங்கப்பட்டன. எந்த மொழியுமே கன்னித் தன்மையோடும், கற்போடும் வாழ்ந்து, வளர்ந்தது கிடையாது.

ஆனால் தாய்மொழி, தனி இனம், சமயம், கலாசாரம் எல்லாம் அனைத்து மக்களினதும் அடிப்படை உரிமைகள். அவை துஷ்பிரயோகத்துக்கோ, அடாவடித்தனத்துக்கோ உள்ளாக்கப்படக் கூடாது. இன, மத, சாதி மோதல்களை உருவாக்கும் விதத்தில் மாணவர்களிடையே நச்சு விதைகள் ஊட்டப்படக் கூடாது. மாணவர்கள், குருத்துக்கள். அவர்கள் மத்தியில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பவேண்டிய கடமைப்பாங்கு பெற்றோர், ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல, சிவில் சமூகத்தினருக்கும் உண்டு. மொழிப் பிரச்சினையால் மக்களை விழி பிதுங்க வைத்த விதி இந்த நாட்டையே சுடுகாடாக்கிவிட்டது. நாளைய சந்ததிக்காவது நல்லதைப் போதிப்போம்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2219506, பக்ஸ்: 021-2219505
e-mail: tnaatham@yahoo.com

# நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் பாடசாலைகளின் கடமைப்பாங்கு!

மிகச் சிறுவயதிலிருந்தே சிறார்கள் மத் தியில் சகிப்புத் தன்மை,நேச உறவு, அடுத்தவர் கருத்தை மதித்தல், வேறுபட்ட கலாசாரங்களை மதித்தல், சகோதரத்துவம் போன்ற குணாம்சங்களை பாடசாலைகளின் கலை, கலாசாரத் திட்டங்கள் ஊடாக விருத்தி செய்ய வேண்டும். பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இதில் முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். உண்மையான ஆசிரியர்கள் எப்பொழுதும் இனரீதியான கருத்துக்களைக் கொண்டிருத்தல் கூடாது. அதாவது தத்தமது இனம், சமயம், பண்பாடு ஆகியவற்றில் ஆசிரியர்கள் பற்று வைத்திருக்கக் கூடாது என்பது இதன் அர்த்தமல்ல.

மாறாக, பொது மனித சம்பிரதாயங்களுக்கு ஏற்பச் செயற்படும்பொழுது நாம் அந்நியர்களின் கலாசாரம், தனித்துவப் பண்புகள் ஆகியவற்றை அடையாளம் கண்டு, அவற்றை ஏற்று அவர்களுக்கு மதிப்பளித்தல் வேண்டும். அதேபோன்று மனித வர்க்கத்தில் இருக்கும் பிரச்சினைகளையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது. சுருங்கக் கூறின், நேச உறவை வலுப்படுத்தி, சகிப்புத்தன்மை கொண்ட உளப்பாங்கினையும், மற்றோர் கருத்தை மதிக்கும் ஜனநாயகப்பாங்கினை உருவாக்குவதிலும் நாம் இதுவரை கல்வி முறைமையில் ஏற்படுத்தியிருந்த விதிமுறைகள் போதுமானதாக அமையவில்லை. இதனை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. எது எவ்வாறாறிருப்பினும், எமது கல்வி முறைமை 21ஆம் நூற்றாண்டுக்குப் பொருத்தமானதாக உள்ளது. அதேபோன்று புதிய சவால்களை ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு வெற்றிகரமான மனி தனை உருவாக்குவதற்கு உறுதுணையாக அது அமையும். அத்துடன் சமாதானம், சமத்துவம், சகிப்புத்தன்மை ஆகிய குணாம்சங்கள் கொண்ட ஒரு மனிதனின் உருவாக்கத்திற்கு தேவையான அடிப்படைகளைக் கொண்டு அமைய வேண்டுமெனப் பலராலும் சுட்டிக் காட்டப்படுகிறது.

பல்வேறு தேசிய, சமய மற்றும் பலதரப்பட்ட வேறுபாடுகளை அடையாளம் கண்டு, அவற்றைச் சம அந்தஸ்துடன் பேணி, சகலருக்கும் பொதுவான சமூகத்தினுள் சம உரிமைகள் இருக்க வேண்டும் என்பதனை ஏற்றுச் செயற்படப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். இல்லாவிட்டால் இவ்வாறு பிழையான வழிமுறைகளைப் பின்பற்றும் மாணவர்கள் சீரான பண்புடையவர்களாக விருத்தியடைய மாட்டார்கள். ஆகவே எதிர்கால சந்ததியினரைச் சீராக்கி, சமூகத்தின் நலனுக்காகச் செயற்படும் முன்னோடிகளென்ற வகையில் ஆசிரியர்கள் மேற்கூறிய மனப்பாங்கினையும் பழக்க வழக்கங்களையும் வளர்த்துக் கொள்ளுதல் அவசியமானதாகும்.

சமூகக் குழுக்களுக்கிடையே புரிந்துணர்வின்மை, அவற்றின் கலாசாரத் தனித்துவங்கள் மதிக்கப் படாமை, சில குறிப்பிட்ட இனங்களின் மேலாதிக்கம் போன்ற இன்னோரன்ன காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மோதல்கள் நிகழ்வதையும், அதனூடாக யுத்த மனோபாவம் மேலோங்கி நிற்பதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இவை மனித வர்க்கத்தின் நிலைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையும். கடந்த முப்பது ஆண்டு கால வரலாற்றில் எமது நாடும் இவ்வாறான கசப்பான அனுபவங்களைப் பெற்று, அதன் தீய விளைவுகளை அனுபவித்து வருகிறது. அபிவிருத்தி பின்தள்ளப்பட்டு, மக்களின் பொதுநலம் புறந்தள்ளப்பட்டிருக்கிறது. மக்களுக்கிடையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதானது, மனித சமுதாயத்தின் அபிவிருத்திக்காகவும் நலனுக் காகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படையான நடவடிக்கையாகும். அது மட்டுமன்றி காலத்தின் தேவையாகவுமுள்ளது. அத்துடன் தேசிய கடமைப்பாங்காகவும் மாறியுள்ளது. ஆகவே இப் பாரிய கடமைப்பாங்கை மேற்கொள்வதில் எமது கல்வி முறை அச்சாணியாக விளங்கும். குடும்பம் போன்ற நிறுவனங்கள் ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்துவது போலவே, பாடசாலைகளும் முறைமை யாக எமது வாழ்க்கையைச் சீர்படுத்துவதில் பெரும் செல்வாக்குச் செலுத்துகிறது.

சமூகத்தில் வாழ்கின்ற மக்கள் சிறு பராயத்திலே தாம் பெற்றுக் கொள்ளும் கல்வி மற்றும் அதன் உள்ளடக்கம், கல்வியின் தன்மை போன்ற அம்சங்கள் மக்களின் ஆளுமையைக் கட்டியெ ழுப்புவதில் அடிப்படையாக அமைகிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு நெருக்கடிமிக்க பிரச்சினைகளுக்கு, இதற்கு முன்னர் நிலவிய கல்வி முறைமையும் ஓரளவு பொறுப்புக் கூற வேண்டும் என்பதனையும் குறிப்பிட்டேயாக வேண்டும். இதற்கமையத் தத்தமது பாடசாலைகளில் பல்வேறு விழாக்கள் ஒழுங்கு செய்யப்படும் சந்தர்ப்பங்களில் பிறமொழி பேசுவோர் பங்கு பற்றுதல், தமக்கு நடப்பான பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தல் போன்றவை இடம்பெற வேண்டும். சில சந்தர்ப்பங்களில் மாற்று மொழியினர் தமது மொழி மூலமாக நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு

**கச்சி முஹம்மது**

சந்தர்ப்பம் வழங்குவதில், இரு பாடசாலைகளிலும் சமாந்தர வகுப்புகளில் உள்ள மாணவர்கள் அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பங்களை ஒழுங்கு செய்தல் போன்றவை இடம்பெற வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தமது மொழி மூலம் பல்வேறு பொழுது போக்கு நிகழ்ச்சித் திட்டங்களை முன்வைக்க ஆவன செய்யப்பட வேண்டும். மற்றும் வாரம் தோறும் நடத்தப்படும் பாடசாலையின் இலக்கிய, விஞ்ஞான, சமய மன்றங்களில் தமக்கு நட்பான பாடசாலைகளின் மாணவர்களை அழைத்து நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அது மட்டுமன்றி இரண்டு பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு இடையிலும், மாணவர்களுக்கு இடையிலும் கிரிக்கெட், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும். இரண்டு பாடசாலைகளின் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொள்ளும் சுற்றுலாக்களையும் ஒழுங்கு செய்யலாம். சிரமதான இயக்கங்களை ஒழுங்கு செய்தல் போன்ற செயல் திட்டங்கள் மூலம் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கிய இனங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கிடையில் சுமுகமாகவும் ஒற்றுமையாகவும் வாழும் பழக்கத்தை ஏற்படுத்தி அதனூடாகச் சமத்துவ உணர்வுகளை உருவாக்க முடியும். அத்துடன் நல்லிணக்க உணர்வுகளை ஊட்டி, அதனுடன் கூடிய அனுபவங்களைச் சிறு பராயத்திலிருந்தே பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும்.

இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களை மேலும் விரிவுபடுத்தி, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையில் மட்டுமன்றி, பாடசாலை அபிவிருத்திச்சங்கம் ஊடாக பிரதேசத்தில் வாழும் பல்வேறு இனங்களைச் சேர்ந்த பெற்றோர் மத்தியில் ஒற்றுமையை வளர்க்கும் நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்யலாம். அதன்மூலம் இப் பிரதேசத்தில் வாழும் பல்வேறு இன மக்களிடையே நட்புறவை வளர்க்க ஆக்கபூர்வமான வாய்ப்பாக இதனைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.



எமது மாண்வர்களுக்கிடையில் சமத்துவ உணர்வையும், சமாதானத்தையும் அடிப்படையாகக் கொண்ட சகவாழ்வையும் விருத்தி செய்ய முடியும். இவை சகோதர இன மக்களிடையே தொடர்பாடலை ஊக்குவிக்கவும், நேச உறவை ஏற்படுத்தவும் வழி வகுக்கும். அத்துடன் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு, நல்லிணக்கம் என்பவற்றை உறுதிப்படுத்தி சமத்துவம், சமாதானம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட நல்லிணக்கம் கூடிய நற்பண்புகளை எமது எதிர்கால சந்ததியினர் மத்தியில் கட்டியெழுப்ப முடியும்.

இதற்காக எமது பண்டைய வரலாற்றில் பல சம்பவங்களை ஆதாரமாகக் கொள்ள முடியும். உதாரணமாக சிங்கள இலக்கியத்தின் பொற்காலமாக விளங்கிய கோட்டே யுகத்தின் பப்பிலியான சுனித்ராதேவி பிரிவேனா போன்ற பௌத்த ஆலயங்களில் தமிழ் மொழி ஏனைய மொழிகளுடன் கற்பிக்கப்பட்டது. அது மட்டுமன்றி பௌத்த மதகுருமார்களும் அம் மொழியினைக் கற்றுத் தேர்ந்தார்கள்.

(7ம் பக்கம் பார்க்க)

# தென்பகுதிகளில் தமிழ் நிர்வாக சேவை அதிகாரிகளை நியமிப்பதால் பிரச்சினை தீருமா?



வடக்கிலுள்ள மாவட்டங்களுக்குச் சிங்களவர்களையும் தென் மாவட்டங்களுக்குத் தமிழர்களையும் அரசாங்க அதிபர்களாக நியமிப்பதானது, தூர திருஷ்டி மிக்க ஒரு கொள்கை" என்கிறார் முன்னர் யாழ்ப்பாணத்திலும், பின்னர் திருகோணமலையிலும் பணியாற்றிய சோமபால குணதீர என்ற சிங்கள நிர்வாக சேவை அதிகாரி, கடந்த வருடம் மன்னாருக்கு சிங்களவர் ஒருவரும், மொனராகலைக்கு தமிழர் ஒருவரும் அரசாங்க அதிபர்களாக நியமிக்கப் பட்டமை தொடர்பாக எழுந்த சர்ச்சை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

1957ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஒரு பயிற்சி நிர்வாக சேவை அதிகாரியாக நியமிக்கப்பட்ட இவர், பின்னர் கிழக்கு மாகாணத்திலுள்ள தென்மை மரவாடி, திருமங்கலம், சம்பூர் ஆகிய காட்டுப் பகுதிகளில் அதிகாரியாகப் பணிபுரிந்தவர். தமிழ்பேசும் மக்களையே பெரும்பான்மையாகக் கொண்ட இப் பகுதிகளில் மொழிபெயர்ப்பாளர்களின் உதவியின்றித் தன்னால் மக்களுடன் தமிழில் உரையாடி முடிந்ததெனவும் தெரிவிக்கிறார்.

தான் தமிழ் பகுதிகளில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் தென் பகுதியில் தமிழர்கள் அரசாங்க அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளார்கள் என்றும் குணதீர தெரிவிக்கிறார். இவர்களில் அம்பாந்தோட்டையில் கடமை யாற்றிய சிவஞானமும், மாத்தறையிலும் காலியிலும் கடமையாற்றிய சிவானந்தனும் குறிப்பிடத்தக்கவர்கள் என்றும் இவர் தெரிவித்துள்ளார்.

இன்றைய காலகட்ட அரசாங்க அதிபர்களுக்கு மாற்றுமொழி குறித்துக் குறைந்த அளவுக்கே புரிதல் இருந்தாலும்கூட, வேற்றுமொழி பேசும் மாவட்டங்களில் அவர்கள் நியமிக் கப்பட்டால் அவர்களால் தாம் கடமை புரியும் மாவட்ட மக்களின் பேச்சு மொழிகளை விரைவாக கற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு உண்டு. இது தனது அனுபவம் என்கிறார் இவர். "ஆழ்கடலில் ஒருவர் தூக்கி வீசப்பட்டால், அவர்கள் வேகமாக நீந்தக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படி இல்லையென்றால், அவர்கள் நீருக்குள் மூழ்கிவிட வேண்டி ஏற்படும். அவர்களால் ஆட்சி புரிய முடியாது" என்றும் கூறித் தனது வாதத்துக்கு வலுச் சேர்க்கிறார் இவர்.

இவர் மேலும் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்

இங்கு பிரச்சினையின் மையப்பொருள் மொழித் திறன். இருதரப்பு இன சௌஜன்யத்துக்கு சிங்கள - தமிழ் நிர்வாக அதிகாரிகளைப் பரிமாற்றிக் கொள்வது ஒரு நல்ல குறியீடாகும். இவ்வாறான பரிமாற்றங்களின் மூலம் மாற்றுக் கலாசார அம்சங்களில் புரிதல் ஏற்படுவதால் வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான இடைவெளிகளை நீக்க முடியும்.

**இங்கு பிரச்சினையின் மையப்பொருள் மொழித் திறன். இருதரப்பு இன சௌஜன்யத்துக்கு சிங்கள - தமிழ் நிர்வாக அதிகாரிகளைப் பரிமாற்றிக் கொள்வது ஒரு நல்ல குறியீடாகும். இவ்வாறான பரிமாற்றங்களின் மூலம் மாற்றுக் கலாசார அம்சங்களில் புரிதல் ஏற்படுவதால் வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான இடைவெளிகளை நீக்க முடியும்.**

கடந்த காலங்களில் வடக்கில் பணிபுரிந்த சிங்கள அரசாங்க அதிபர்கள், வெறும் ஒப்புக் காகவே தமிழ்மொழிப் பரீட்சையில் சித்தியடைந் தார்கள். 1957இல் ஒரு அதிகாரியாக யாழ்ப்பாணத்தில் நான் நியமிக்கப்பட்டபோது ஓரளவுக்கே எனக்குத் தமிழ் தெரியும். நிர்வாக அதிகாரிகளுக்கான தமிழ் மொழிப் பரீட்சையில் சித்தி பெறுவதற்குப் பத்துவருட கால அவகாசம் வழங்கப் பட்டிருந்த போதும், நான் தமிழ் மக்கள் மத்தியில் பணியாற்றியதால், ஆறு மாத காலத்துக்குள் இரண்டு தமிழ் மொழிப் பரீட்சைகளிலும் என்னால் சித்திபெற முடிந்தது.

முன்முயற்சி ஊடாகப் பெற ப்படும் தலைமைத்துவப் பயிற்சி சமூகங்களுக்கிடையில் குறிப்பிடத்தக்க புரிந்துணர்வையும் இணக்கப் பாட்டினையும் ஏற்படுத்தும்.

எனது அனுபவத்தை எடுத்துச் சொல்வதானால், வடக்குடனும் கிழக்குடனும் நான் கொண்டி ருந்த நேரடியான தொடர்பே பெரும்பாலான தமிழ் மக்கள் மீது நான் அக்கறையும் இரக்கமும் கொள்வதற்குக் காரணமாக அமைந்தது.

இந்த அக்கறையும் ஈவிரக்கமும் 'இலங்கையில் இனத்துவ மோதலும் தேசிய ஒருமைப்பாடும்' என்ற எனது ஆங்கில நூலில் பிரதிபலித்துள்ளன.

இவ்வாறு ஓய்வுபெற்ற நிர்வாக சேவை அதிகாரியான சோமபால குணதீர குறிப்பிட்டுள்ளார்.

"ஆனால் கடந்தகால ஆட்சியாளர்களின் குறும் சிங்கள தேசியவாத நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டதாலேயே தமிழ் சிறுபான்மையின மக்கள் இன்னமும் சந்தேகக் கண்ணோடு பார்க்க வேண்டிய நிலைமைகளை ஏற்படுத்தியிருப்பதை யாரும் மறுக்கமுடியாது. 1950களில் கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், 1961இல் இடம்பெற்ற சிங்கள எதிர்ப்புப் போராட்டம், 1971இல் கொண்டுவரப்பட்ட பல்கலைக்கழக அனுமதிக்கான மொழிவாரித் தரப்படுத்தல், 1956இல் சிங்களம் மட்டும் சட்டம் போன்றவை தமிழ்க் குறுந்தேசிய வாதத்துக்கு உரமூட்டியதை மறுக்க முடியுமா?" என்று கேள்வி எழுப்புகிறார் தமிழ் புத்திஜீவியான கந்தையா ஸ்ரீரங்கநாதன்.

**- அருள் -**

---

## கழுகுக் கண்கள்

கொழும்பிலும், வெளியிடங்களுக்கான பஸ்களிலும் பயணித்த கழுகுக் கண்களுக்கு 2 சில சம்பவங்களைப் பதிவு செய்யக்கூடியதாக இருந்தது. பயணிகளிடம் இருந்து கூடுதலாக பஸ் கட்டணத்தை அறவிடும் சூறையாடலைப் பெரும்பாலும் தனியார் பஸ் நடத்துநர்களே மேற்கொள்கின்றார்கள். இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களின் நடத்துநர்கள் இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுவது மிகவும் குறைவாக இருப்பதை கழுகுக் கண்கள் அவதானித்தது.

9 ரூபா அல்லது 19 ரூபாவுக்கான ஒரு ரிக்கெட்டை பஸ் பயணி எடுத்தால் அவருக்கு நூற்றுக்கு 99% நிச்சயமாக மிகுதிப் பணமான ஒரு ரூபா கிடைக்காது. இந்த பஸ் நடத்துநர்கள் தங்கள் கையில் சிறிதளவு சில்லறைக் காசை மட்டுமே வைத்துக்கொண்டு மற்ற சில்லறைக் காசை தங்கள் கையில் இருக்கும் தோல் பையில் வைத்து மறைத்து விடுவார்கள். மிகுதிப் பணத்தைக் கேட்கும்போது சில்லறைக் காசு இல்லை, சற்றுப் பொறுத்திருங்கள், இறங்கும்போது தருகின்றேன் என்பார். பெரும்பாலானோர் இறங்கும்போது அவசரத்தில் அந்தப் பணத்தை வாங்காமலே சென்று விடுவார்கள். சிலர் இறங்கும்போது என்னுடைய மிச்சக்காசைத் தாருங்கள் என்று கேட்டால் வேண்டா வெறுப்போடு பஸ் பயணிக்கு ஏதோ ஒரு உதவி செய்வதைப் போன்று மிச்சக் காசைக் கொடுத்துவிட்டு தனது வருமானம் பறிபோய் விட்டதே என்ற ஆத்திரத்தில் சரி, சரி நேரம் போகின்றது இறங்குங்கள் என்று கத்துவார்கள்.

பஸ் எவ்வளவுதான் வேகமாகச் சென்று கொண்டிருந்தாலும் வீதியில் ஓரிருவர் நின்றுகொண்டு கைகாட்டி பஸ்சை நிறுத்தச் சொன்னால் பஸ் சாரதி உடனே பிரேக் போட்டு பஸ்சை நிறுத்துவார். பஸ் திடீரென நின்றதனால் பஸ்ஸில் நின்று கொண்டிருந்த பெண்களும் வயோதிபர்களும் நிலை தடுமாறி கீழே விழுந்து காயமடைந்த பல சம்பவங்களையும் நாம் அவதானித்திருக்கின்றோம்.

பயணிகளை ஏற்றும்போது காட்டும் அக்கறை பஸ் நடத்துநருக்கோ பஸ் சாரதிக்கோ பயணிகள் பஸ்ஸில் இருந்து இறங்கும் போது இருப்ப தில்லை. இதனால் எத்தனையோ பேர் பஸ்ஸில் இருந்து தாங்கள் இறங்க முன்னரே சாரதி பஸ்ஸை நகர்த்துவதால் கீழே விழுந்து காயமும் அடைந்துள்ளார்கள்.

பஸ்ஸில் சன நெருக்கம் அதிகமாக இருக்கும் மாலைப் பொழுதில் எப்படியாவது வீட்டுக்கு நேரத்துடன் சென்றுவிட வேண்டும் என்ற ஆவலில் பெண்கள் பஸ்ஸில் தொத்திக்கொண்டு ஏறும் போது அவர்களுக்கு உதவி செய்வதைப் போன்று நடித்துக்கொண்டு சில பஸ் நடத்துநர்கள் அந்தப் பெண்களின் அங்கங்களை தொட்டுத் தடவி கட்டியணைத்து பஸ்ஸில் ஏற்றும் சம்பவங்களையும் நாம் அவதானித்துள்ளோம். இந்தக் கேவலமான செய்கையில் பஸ் நடத்து நர்கள் மட்டுமன்றி, பஸ்களில் பயணிக்கும் சில காமுகர்களும் ஈடுபடுவதுண்டு.

இவ்விதம் பல்வேறு துன்பங்களை அனுபவித்துக் கொண்டே மாலைப் பொழுதில் எங்கள் காரியாலயங்களை விட்டு பெண்கள் வீடு திரும்புகின்றார்கள்.

சில பஸ்களுடன் போட்டி போட்டுக்கொண்டு வேகமாகச் சென்று ஆட்களைக் கூடுதலாக ஏற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் பயணிகள் இறங்கவேண்டிய இடத்தில் நிறுத்தாமல் சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸை நிறுத்தும் சுயநலம் மிக்க பஸ்சாரதிகளும் இருக்கின்றார்கள்.

இந்த பஸ் நடத்துநர்களின் கொட்டத்தை அடக்க வேண்டுமாயின் தனியார் மற்றும் இலங்கைப் போக்குவரத்து சபை பஸ்களை நிர்வகிக்கும் அமைப்புக்கள் திடீர் சோதனைகளை பஸ்களில் நடத்தி தவறிழைக்கும் நடத்து நர்களை தண்டிக்க வேண்டும்.

---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

**நல்லிணக்கத்தைக்.........**

சிங்களவர், தமிழர் முஸ்லிம், பறங்கியர், மலே போன்ற சமூகங்களின் கலாசார அம்சங்களையும், சமூக நிறுவனங்களையும் விருத்தி செய்வதில் பங்குபற்றிய விதம் பற்றி மாணவர்களுக்கு எடுத்துரைக்கலாம். எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின்போது ஒவ்வொரு சமூகமும் பங்கு பற்றிய விதம் பற்றிய அறிவையும் நிகழ்ச்சித் திட்ட ங்கள் மூலம் மாணவர்களக்கு எடுத்துரைப்பது பாடசாலைகளின் முக்கிய கடமையாக அமைய வேண்டும். பாடசாலைகளில் நடைபெறுகின்ற பல்வேறு விழாக்களின் போது, முறைசாரா கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் மாணவர்களுக்கு எடுத்துரைப்பது பாடசாலைகளின் முக்கிய கடமையாக வேண்டும். கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலமும், விவாத அரங்குகள் மூலமும் எமது நாட்டின் அரசியல் விடுதலைக்காகவும், கலாசார மறுமலர்ச்சிக்காகவும், சமூக நல்லிணக்கத்துக்காகவும் வாழையடி வாழையாகப் பணி புரிந்து செயலாற்றிய தமிழ், சிங்கள, முஸ்லிம், மலே, பறங் கிய சமூகத் தலைவர்கள் பற்றிய அறிவைப் புகட்டுவது பாடசாலைகளின் மற்றுமோர் பாங்காகும். இவ்வாறான வேலைத் திட்டங்கள் மூலம் எமது எதிர்கால சந்ததி யினரை மனிதாபிமான- மிக்க, சகிப்புத்தன்மை கொண்ட, பிறரின் கலாசார தனித்துவத்தை மதித்து நடக்கும் நல்லிணக்கத்துக்கு உகந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும். இப் பணியை எமது பாடசாலைகள் முறையாகப் பொறுப்பேற்று, வெற்றிகரமாக அமுல் செய்வது காலத்தின் தேவையாக உள்ளது.

# இலங்கை

# இனங்களுக்கி

# அமைதி ஏற்படுத்

## 1. அறிமுகம் (Introduction)

இலங்கையர்களாகிய நாம் நீண்டகால இனமுரண்பாட்டை வரலாறாகக் கொண்டுள்ளோம். இன முரண்பாடுகளிலிருந்து இனங்களை விடுவித்து, இணக்கப்பாட்டினை ஏற்படுத்தி, இழப்புக்களை ஈடுசெய்து, மீளவும் அமைதியான இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையுள்ளது.

சமூகங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றுவது என்பது இயல்பானதே. தினசரி வாழ்வில் நாம் பல்வேறுபட்ட முரண்பாடுகளை சந்திக்கின்றோம், இதுபோல, ஒரு தேசத்தில் வாழ்கின்ற சமூகங்களுக்கிடையிலும் முரண்பாடு தோன்றுவதும் தவிர்க்க முடியாததே. இலங்கையில் வேறுபட்ட பண்பாடு மற்றும் கலாச்சாரங்களைக் கடைப்பிடித்து வருகின்ற இனங்கள் வாழ்கின்றபோது அவைகளுக்குள் முரண்பாடு தோன்றுவதென்பது தவிர்க்க முடியாததே.

இலங்கையில் தமிழ், சிங்களம், முஸ்லிம் பறங்கியர் மற்றும் வேறு இனத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். குடித்தொகைப் பரம்பலின் அடிப்படையில் சிங்களவர்கள் பெரும்பான்மையினராகவும், ஏனையவர்கள் எண்ணிக்கையிற் சிறுபான்மையினராகவும் காணப்படுகின்றனர். சுதந்திரத்தின் போது, அரசியல் அதிகாரம் பெரும்பான்மையினராகக் காணப்பட்ட சிங்களவர்களிடம் சென்றடைந்தமையால் சிறுபான்மையினர் குறிப்பாக தமிழர் - இலங்கைத் தேசியத்தில் இருந்து தங்களைத் தூரவிலக்கிக் கொண்டனர். காலப்போக்கில் இவ்விரிசல் மோசமடைந்து, இனப்பிரச்சினையாக மாறியுள்ளது.



இக் கட்டுரையானது, இனங்களுக்கிடையில் இணக்கத்தை உருவாக்குவது பற்றியும், இவ் இணக்கத்தினூடாக நிரந்தரமான அமைதியை உருவாக்குவது பற்றியும் ஆராய்கிறது. இதற்காக காலனித்துவத்தின் போது இலங்கை தேசியமாக ஒன்றித்திருந்தும் பின்னர் பிரிந்து கொண்டது பற்றியும், இனப்பிரச்சினைக்கு காரணமான உண்மைக் காரணிகள் பற்றியும் முதலில் ஆராய்கின்றது. இன முரண்பாட்டின் வரலாற்றினைப் படிப்பினையாகக் கொண்டு, அதன் வழிகாட்டலில், இனங்களுக்கிடையில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு "சமநிலை முரண்வாதம்" என்ற அணுகுமுறையைப் பரிந்துரையாக முன்வைக்கின்றது.

இனங்களுக்கிடையில் அமைதியைக் கட்டியெழுப்புவதே நாட்டின் இன்றைய சவாலாக உள்ளது. இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, "ஒரு நாட்டிற்குள் ஒரு தேசியத்தைக்" கட்டியெழுப்பும் சவாலானது அரசுக்கு மட்டுமன்றி இலங்கையர் அனைவர் முன்னிலையிலும் பொதுவாக முன்வைக்கப்படுகின்றது.

### 2. இலங்கையில் இனங்களின் பல்வகைமையும், இலங்கைத் தேசியமும் (Multi Cultural & Sri lankan Nationalism)

### 2.1 இலங்கைக் குடியரசின் பல்வகைமைச் சமூகம் (Multi Cultural & Society of Srilankan Republic)

இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், மலேயர், பறங்கியர் என்ற பல்லினங்கள் நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றன. இவர்களுள் சிங்களவர்கள் பெரும்பான்மையினராகவும் ஏனையோர் சிறுபான்மையினராகவும் காணப்படுகின்றனர். மதரீதியாக பல்வகைமையைக் நோக்குகையில், இலங்கையில் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமயங்களைப் பின்பற்றுவோர் காணப்படுகின்றனர். சிங்களவர்களில் பெரும்பாலானோர் பௌத்த சமயத்தையும், குறைந்தளவான ஏனையோர் கிறிஸ்தவ சமயத்தையும் பின்பற்றுகின்றனர். தமிழர்களில் பெரும்பாலானோர் இந்துசமயத்தையும், ஏனையோர் கிறிஸ்தவ சமயத்தையும் பின்பற்றுகின்றனர். முஸ்லீம்கள் அனைவரும் இஸ்லாமிய சமயத்தைப் பின்பற்றுகின்றனர். கலாசாரப் பல்வகைமையைப் பொறுத்தவரை பௌத்த, இந்து, கிறிஸ்தவ, ஸ்லாமிய, கலாசாரங்கள் காணப்படுகின்றன.

### 2.2 இலங்கைத் தேசியத்திற்கான ஒற்றுமை (Unity SriLankan Nationalism)

இலங்கையின் வரலாற்றில் 1505ல் போத்துக்கேயரின் வருகையைத் தொடர்ந்து காலணித்துவக் காலம் ஆரம்பிக்கின்றது. 1815ல் முழு இலங்கையும் பிரித்தானியரின் ஆதிக்கத்திற்குள் வந்தபின்னர் இலங்கையில் தேசிய ஒற்றுமையை நாம் அவதானிக்கின்றோம். பிரித்தானியக் காலணித்துவத்தில் அனைத்து இலங்கையரும் தங்கள் இனத்திற்கப்பால் "இலங்கையர்கள்" என்ற தேசியத்தின்" அடிப்படையில் ஒன்றிணைந்திருந்தனர். காலனித்துவத்தில் இருந்து இலங்கையர்களாக சுதந்திரம் பெறுதற்காக 1919ல் தேசியக் காங்கிரஸை அமைத்து போராட்டங்களையும் மேற்கொண்டார்கள்.

எனினும், காலணித்துவத்தின் பொழுது இலங்கையர்களின் ஒற்றுமையைக் குலைப்பதற்காக பிரித்தானியர்கள் பிரித்தாளுந் தந்திரத்தை பயன்படுத்தினர். இது இலங்கையர்களுக்குள் இனரீதியான பிரிவேற்படுவதற்கு வழிவகுத்தது, 1931ல் டொனமூர் யாப்புக்கான வரைபின்போது ஒவ்வொரு இனத்தவரும் தத்தம் நலன்கருதிய யோசனைகளை முன்வைத்ததுடன், இனரீதியான பிரதிநிதித்துவ முறையையும் சிபார்சு செய்தனர். 1947ல் சோல்பரியாப்பு அறிமுகப்படுத்தப்பட்டபொழுதும் இந்நிலை நீடித்தது. அத்துடன் சிங்களவர்களும், தமிழர்களும் தங்களுக்கென்று தனியான அரசியற் கட்சிகளையும் நிறுவிக் கொண்டனர்.

இவ்வாறு, இலங்கை அரசியலானது காலப்போக்கில் இனரீதியான முரண்பாட்டு அரசியலாக மாற்றம் பெற்றது. இவ்வரசியல் முரண்பாடு குடிமக்களின் சாதாரண அமைதி வாழ்க்கையை அதிகம் பாதித்தது. இனங்களுக்கிடையில் வெறுப்பையும், எதிர்ப்புத் தன்மையையும் நாளுக்கு நாள் அதிகரித்தது. மிகப்பெரும் ஆயுதமோதலுக்கும், இனங்களின் அழிவுக்கும் காரணமாகியது. இவ்வாறானதொரு சூழமைவுக்குள் இருந்து இனங்களுக்கிடையில் அமைதியை ஏற்படுத்துவது பற்றிச் சிந்திப்பதற்கு முன்னர், இனப்பிரச்சினைக்கான காரணிகள் வரலாற்றில் ஆராய்தல் நன்றே.

### 2.3 இனமுரண்பாட்டிற்கான வரலாற்றுக் காரணிகள் (Historical issues for Conflict)

இனங்களுக்கிடையில் மிகப்பெரிய இனரீதியான முரண்பாட்டை தோற்றுவித்த காரணிகளை பாரபட்சமின்றி ஆய்வுக்குட்படுத்துதல் இணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான முதற்படியும், கட்டாயமான நிபந்தனையுமாகும்.

முரண்பாடுகளிற்கான காரணங்களை வரலாற்று ரீதியாக ஆராயும் பொழுது அதற்கான கால இடவெளிகளை நிர்ணயிப்பது கடினமாகும். எனினும், சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து 1970 வரையான காலப்பகுதியை ஒரு பகுதியாக நோக்க முடியும். இக் காலத்தில் தமிழ் சிங்கள இனத்தவர்களினது உயர்சமூக குடிகழுக்கிடையில் இடம்பெற்ற முரண்பாடுகளாக அடையாளம் காணப்படுகின்றன. 1970 - 1980 வரையான காலப்பகுதியில் தமிழர்கள் அரசியல் ரீதியான எழுச்சி நிலையை அடைந்த காலம். இதே காலப்பகுதியில் தென்னிலங்கையிலும்

**இனங்களுக்கிடையில் அமைதியைக் கட்டியெழுப்புவதே**
**இன்றைய சவாலாக உள்ளது. இனங்களுக்கிடையில் நல்லி**
**ஏற்படுத்தி, ஒரு நாட்டிற்குள் ஒரு தேசியத்தைக் கட்டியெ**
**சவாலானது அரசுக்கு மட்டுமன்றி இலங்கையர் அ**
**முன்னிலையிலும் பொதுவாக முன்வைக்கப்படுகி**

அடையாளம் காணப்படுகிறது. 1980 - 2009 வரையான காலப்பகுதி இன முரண்பாட்டின் தீர்வைப்பெற இனங்கள் ஆயுத வழியில் முயற்சித்த காலப்பகுதியாகும். 1980களில் தமிழர்கள் ஆயுதவழியில் இன விடுதலைக்கான போராட்டத்தை ஆரம்பித்தனர். இக் காலப்பகுதியில் பல ஆயுதக் குழுக்கள் வடக்கில் தோற்றம்பெற்றன. 1990 களிலிருந்து விடுதலைப் புலிகள் அமைப்பு தனியொரு அமைப்பாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. 2009ல் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், மீண்டும் அரசியற் கட்சிகளின் தலைமையில் இன முரண்பாடுகளுக்குத் தீர்வுகாணும் அணுகுமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றை நடுநிலையான பார்வையில் ஆராய்கின்ற பொழுது, இனப்பிரச்சினைக்கான காரணங்களை பின்வரும் அடிப்படையில் தொகுத்து ஆராயலாம்.

சுதந்திரம் பெற்றிருந்த சிறிதுகாலத்துக்குள், சிங்கள அரசியற் தலைவர்கள் சிறுபான்மையினருக்கு வழங்கிய உறுதி மொழிகளை மீறும் வகையில் 1948ம் ஆண்டு 18ம் இலக்க பிரஜாவுரிமைச் சட்டத்தை நிறைவேற்றினார்கள். இச்சட்டத்தினால் சுதந்திரம் பெறமுன்னர் "இலங்கையர்" என்ற வகையில் உரிமைகளை அனுபவித்து வந்த மில்லியன் அளவான மலையகத் தமிழர்களின் குடியுரிமை பாதிக்கப்பட்டது. அரசாங்க வேலைகளைப் பெறுதல், கடவுச்சீட்டு, பயண அனுமதிப் பத்திரம், குடியுரிமைச் சான்றிதழ், நிவாரண அட்டை, வாக்காளர் அட்டை, வர்த்தக நிலையங்களைப் பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களைப் பதிவுசெய்தல் மற்றும்

சமத்துவமின்றி நடத்தப்படுவதாகக் கூறி, தங்கள் மொழியுரிமையையும், சமத்துவத்தையும் வலியுறுத்தி சத்தியாக்கிரகப் போராட்டத்தை 57 நாட்கள் முன்னெடுத்தனர். இதன்பொழுது அவர்களுக்கெதிராக அவசரகாலச்சட்டம் பயன்படுத்தப்பட்டது.

இவைகளைத் தவிர 1956, 1957, 1958, 1961, 174, 1983, 1987 போன்ற காலப்பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைகளின் போது சிறுபான்மையினர் குறிப்பாக தமிழர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். இதன்போது நியாயமான முறையில் நீதியைப் பெற முடியாமற் போன சிறுபான்மையினரை அச்சமடையச் செய்துள்ளதுடன், உளவியல்ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், அவசரகாலச்சட்டம்,



# ...யில்

# ...டையே

# ...துவது எவ்வாறு

பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்வற்றின் ஏற்பாடுகள் தமிழர்களை வெகுவாகப் பாதித்திருக்கின்றது. 1980 காலப்பகுதிகளிலிருந்து யுத்த குற்றங்களுடன் கைதுசெய்யப்பட்டவர்கள் இன்னமும் விசாரனைகளின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். யுத்தகாலப்பகுதியில் காணாமற் போனவர்களுக்கு இன்னமும் எதுவித தீர்வும் கிடைக்கவில்லை. அத்துடன், தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களைத் தங்கள் மீதான இன அழிப்புச் சம்பவங்களாகவே அவர்கள் கருதுகின்றனர். (உ-ம்: யாழ் செம்மணி விவகாரம் பிந்துனுவ புனர்வாழ்வு முகாம் படுகொலை (2000), மிருசுவில் படுகொலை (2001)

* வாய்ப்புக்களும், வளங்களும்
* அடையாளங்களும் கலாச்சாரங்களும்
* அரசு, ஆட்சி, அரசியல்

2.3.1. வாய்ப்புக்களும், வளங்களும் (Resources)

சுதந்திர இலங்கையில் பெரும்பான்மையினருக்கே வாய்ப்புக்கள் அதிகமாகக் கிடைக்கப்பெற்றன. வளங்கள், வாய்ப்புக்களைப் பங்கிடுவதற்கான தேசியக் கொள்கைகள் அவர்களுக்குச் சாதகமாகக் காணப்பட்டன. இதனாற் சிறுபான்மையினர் பாதிக்கப்பட்டமையையும், சமத்துவமானதேசிய இனமாக அவர்கள் கையாளப்படாமையுமே இனப்பிரச்சினைக்கு மையக் காரணங்களாகும்.

**நீதி, சமத்துவம், கௌரவம்**

சுதந்திரத்தின் பின்னர் அரசாங்கம் அமுல்படுத்திய திட்டங்கள், கொள்கைகள் தமக்கு அநீதி இழைக்கும் வகையில் உருவாக்கப்பட்டதாக சிறுபான்மையினர் எண்ணுகின்றனர். காலனித்துவதத்தின் பின்னர் தேசத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளின்போது சிறுபான்மையினர் அநீதிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். சுதந்திரமடைந்த பொழுது நடைமுறையிலிருந்த சோல்பரி யாப்பு சுதந்திர இலங்கைக்குப் பொருத்தமானதாக அமைந்திருக்கவில்லை. "ஒரு தேசத்தைக்" கட்டியெழுப்புவதற்கேற்ற அணுகுமுறைகளை இவ்யாப்பு கொண்டிருக்காததுடன், சிறுபான்மையினருக்கு நீதி மறுக்கப்பட்ட பொழுது அதனைத் தடுக்கக்கூடிய அளவுக்கும் பலம் பெற்றிருக்கவில்லை.

**...நாட்டின்**
**...ணக்கத்தை**
**...ழப்பும்**
**...வர்**
**...து.**

சொத்துக்களை மாற்றிக்கொள்ளுதல் போன்றவற்றிற்குத் தங்கள் குடியுரிமையை உறுதிசெய்வதற்காக அவர்கள் சிங்கப் பெயர்களைச் சமர்ப்பிக்க வேண்டிய சூழலுக்கு முகம்கொடுத்தனர்.

அதேபோன்று, மலையக மக்களைப் பாதிக்கக் கூடிய வகையில் 1949ம் ஆண்டு 48ம் இலக்கப் பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச் சட்ட அம்மக்களின் வாக்குரிமையைப் பறித்தது. இவைபோன்ற 1956ம் ஆண்டு 33ம் இலக்க அரச கரும மொழிகள் சட்டம் சிங்க மொழியை மாத்திரம் "அரச கரும மொழியாகப்" பிரகடனஞ் செய்தபோது தமிழ்மொழி பேசுவோரை வெகுவாகப் பாதித்தது. இதனால் தமிழர்கள் தாங்கள் இந் நாட்டிற்



மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள் அனைத்தையும் சிறுபான்மையினருக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளாகக் கருதப்படுகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர்களால் சரியான முறையில் நீதியைப் பெற்றுக்கொள்ள முடியாமையே இனங்களுக்கிடையில் முரண்பாடு நீண்டு செல்லக் காரணங்களாகும். நீதி, சமத்துவம், கௌரவம், மறுக்கப்பட்டதனால் ஏற்பட்ட தாக்கம், வெறுப்பு என்பன சிறுபான்மையினரைப் பெரும்பான்மையினருடன் இணக்கத்திற்கு வருவதை தடை பண்ணும் காரணிகளாக அமைகின்றன.

**காணி**

இனத்துவம், பிரதேசம் ஆகிய அம்சங்களைக் கொண்டதோர் முரண்பாட்டின்போது காணிக்கு முக்கியத்துவங் கொடுப்பது மிகவும் இயல்பானது. தமிழர்கள் தாம் பெரும்பான்மையாகவுள்ள தமிழ்பேசும் பிரதேசங்களில் தங்கள் தன்னாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு முயற்சிக்கின்றனர். வரலாற்று ரீதியாக தாங்களே பூர்வீகக்குடிகள் என்று கூறுகின்றனர்.

முஸ்லீம்களும் கிழக்கு மாகாணத்தில் தமக்கு தனியானதொரு அலகை வேண்டி நிற்கின்றனர். சிங்களவர்களைப் பொறுத்தவரையில் இவ்விரண்டையும் அவர்கள் ஏற்க மறுக்கின்றனர். காலனித்துவம் வரை முழுநாட்டிலும் வசித்த காரணத்தினால் தாங்களே முழு நாட்டிற்கு உரித்துடையவர்கள் என்று அவர்கள் கருதுகின்றனர்.

இலங்கையின் பல்வகைக்கேற்ற வகையில் முன்னர் ஆட்சிசெய்த அரசாங்கங்கள் கொள்கைகளை வகுக்கத் தவறியமையையும், இனங்களின் கலாசார அடையாளங்களைச் சமனாகப் பாதுகாக்கத் தவறியமையுமே இனங்களின் பிரிவுக்குக் காரணமாகும்.

ஜே.பி.ஏ.ரஞ்சித்குமார்,
மாமுனை - செம்பியன்பற்று,
வடமராட்சி கிழக்கு

# இந்து கோவில்களில் திருடப்பட்ட சிலைகள் உரியவர்களிடம் ஒப்படைப்பு

யாழ். குடாநாட்டிலுள்ள இந்து கோவில்களில் திருடப்பட்ட சாமி சிலைகள நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக யாழ்.பொலிஸ் நிலையத்தினால் கோவில்களின் நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என யாழ்.பொலிஸ் நிலைய உப பரிசோதகர் எஸ். விக்கிரமாராட்சி தெரிவித்தார்.

யாழில் கடந்த காலங்களில் இந்து கோவில்களின் சாமி சிலைகள் முதல் கொண்டு சாமியின் வாகனங்கள் திருடப்பட்டு விற்பனைக்காக வெளி மாவட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு வந்தன.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக விசேட குற்றத் தடுப்பு பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையின் காரணமாக சில இந்து கோவில்களில் திருடப்பட்ட பித்தளை மன்றும் ஜம்பொன்னாலான பிள்ளையார், நடரேஸ்வரர் சிலைகள் உரிய கோவில் நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

மீசாலை வடக்கு வேம்பிராய் கலட்டி விநாயகர் கோவில் குருக்களிடம் திருடப்பட்டு இருந்த சாமி சிலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முல்லைத்தீவு கற்பகப் பிள்ளையார் கோவிலிருந்து 50 இலட்சம் பெறுமதியான சாமி சிலைகள் மற்றும் வாகனங்கள் திருடப்பட்டமை தொடர்பாக கோவில் நிர்வாகத்தினர் தங்களுடைய சாமி வாகனங்கள் திருடப்பட்டமை தொடர்பாக முறையிட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மாதமொன்றுக்கு 25 முறைப்பாடுகள்

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் மாதமொன்றுக்கு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக 25 முறைப்பாடுகள் கிடைப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜா தெரிவித்தார்.

பிரதேச சபைகளின் அனுமதியில்லாத கட்டிட அமைப்புக்களுக்காகவும் பொலிஸாருக்கு எதிராகவும் காணி விவகாரம் தொடர்பாகவும் மற்றும் அரச நிர்வாகத்திற்கு எதிராகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்ட முதலே அதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு நடவடிக்கைக்கான கட்டமைப்புக்கள் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

# பாதுகாப்பு தடைச்சட்டத்தின் கீழ் கைதான நபர் குற்றமற்றவர்

## யாழ்.மேல் நீதிமன்றம் தீர்ப்பு

பாதுகாப்பு தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட நபரொருவரை குற்றமற்றவர் என யாழ். மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

2009ஆம் ஆண்டு மே 17ஆம் திகதி ஓமந்தையில் வைத்து கைதுசெய்யப்பட்ட புதுக்குடியிருப்பு, கோம்பாவிலைச் சேர்ந்த ஒருவருக்கே குற்றமற்றவர் என்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட குறித்த நபருக்கெதிராக இரண்டு வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன. இதற்கமைய அந்நபரின் வாக்கு மூலங்கள் கடந்த மே 31ஆம் திகதி நிராகரிக்கப்பட்டிருந்தன. இந் நிலையிலேயே யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, குறித்த நபர் குற்றமற்றவர் எனத் தீர்ப்பு வழங்கினார். இருந்தபோதிலும் குறித்த நபர் மீது வவுனியா நீதிமன்றத்திலும் வழக்கு பதிவாகியிருப்பதால் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறும் ஜே.விஸ்வநாதன் பணித்தார்.

# கலந்தாய்வரங்கு

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்திலுள்ள அமெரிக்க தகவல் கூடத்தில் "சுற்று சூழல் பிரச்சினைகளும் மனித வாழ்வில் அதனால் ஏற்படும் தாக்கங்களும்" என்ற எண்ணக் கருவில் கலந்தாய்வரங்கு ஒன்று எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இக் கலந்தாய்வரங்கில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் யாழ். அமெரிக்க தகவல் கூட இணைப்பாளர் ஜெறின் கிருசாந்தினியுடன் 021222 0665 இலக்கத்தடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# பன்றிக்கோட்டு பிள்ளையார் இன்று அலங்கார உற்சவ நிறைவு



பன்றிக்கோட்டு பிள்ளையார் என அழைக்கப்படும் யாழ் வண்ணார்பண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 17 ஆம் திகதியன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று (27.06.2012) மாலை இடம்பெறவிருக்கும் வைரவப் பெருமானுக்குரிய விசேட பூசை வழிபாட்டுடன் அலங்கார உற்சவம் நிறைவுபெறுகிறது.

# யாழில் மதுபோதையில் பயணிகளுக்கு இடையூறு விளைவித்த 4 பேர் கைது

## தலா ஐயாயிரம் ரூபா அபராதம்

யாழ்.பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மதுபோதையில் போக்குவரத்து பயணிகளுக்கு இடையூறாக செயற்பட்ட நான்கு பேரை இன்று திங்கட்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இன்றைய தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட போது நான்கு பேருக்கும் தலா 5000 ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாத சிறைத் தண்டனையும், கட்டாய ஒரு வார சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

குறித்த நான்கு பேரும் மது போதையில் போக்குவரத்து பயணிகளுக்கு தொல்லை கொடுப்பவர்கள் எனவும் இவர்களினால் யாழ். நகரில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதாக யாழ்.பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

# முகப்புத்தகம் குறித்து இதுவரை 360 முறைப்பாடு

முகப்புத்தகம் எனப்படும் பேஸ்புக் (facebook) இணையம் குறித்து இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 360 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதென இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

முறைப்பாடுகளில் அதிகமானவை போலி பேஸ்புக் கணக்குகள் தொடர்பானவை என அப்பிரிவின் தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் ரொசான் சந்திரகுப்த குறிப்பிட்டுள்ளார்.

விசேடமாக பேஸ்புக் கணக்கில் பலாத்காரமாக உள்நுழைதல் குறித்தும் அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனால் பேஸ்புக் கணக்கு வைத்திருக்கும் பாவனையாளர்கள் தங்களுடைய கணக்குகளை பாதுகாப்பாக பேண வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# திருமணமான மகளை பாலியல் தொந்தரவு செய்த தந்தை மீது வழக்குப் பதிவு

திருமணமான தனது மகளை வீட்டில் நிர்வாணப்படுத்தி பாலியல் தொந்தரவு மேற்கொண்டதாக தந்தையொருவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கொழும்பு கொம்பனித் தெருவைச் சேர்ந்த இந்நபருக்கு எதிராக பொலிஸார் குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்தனர். தான் திருமணமான பெண் எனவும் தனது தந்தை மதுவுக்கு அடிமையானவர் எனவும் மேற்படி பெண் கொம்பனித் தெரு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

தமது வீட்டில் வைத்து தனது தந்தை தன்னை நிர்வாணப்படுத்தி பாலியல் ரீதியாக தொந்தரவு செய்ததாக அப்பெண் தெரிவித்துள்ளார்.

இச்சந்தேக நபர் தண்டனைச் சட்டக்கோவையின் 345 ஆவது பிரிவின் கீழ் தண்டிக்கப்படக் கூடிய குற்றம் புரிந்துள்ளதாக நீதிமன்றில் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டார். அவருக்கு எதிரான தீர்ப்பை ஜூலை 16 ஆம் திகதி அறிவிப்பதாக நீதவான் கனிஷ்க விஜேரட்ன தெரிவித்தார்.

# குவைத் தினாரைத் திருடிய இலங்கை சாரதி மாயம்

சுமார் 60,000 குவைத் தினார் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக குவைத்தில் சாரதியாகப் பணிபுரியும் இலங்கை பிரஜை மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது குறித்து குவைத் ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இரு ஊழியர்கள் பணியாற்றிய 570,000 தினார் பணம் இருந்த கார் ஒன்று தொடர்பாடல் வர்த்தக நிலையங்களில் பணம் வசூலித்துவிட்டு குவைத் விமான நிலைய தொடர்பாடல் வர்த்தக நிலையத்தில் பணம் வசூலிக்கச் சென்றுள்ளது.

காரில் இருவர் பணியாற்றியுள்ளனர். ஒருவர் சாரதி (இலங்கையர்) மற்றையவர் பண வசூலிப்பாளர்.

விமான நிலையத்திற்கு முன்புறம் காரை நிறுத்திவிட்டு சாரதியை பாதுகாப்புக்காக அமர்த்திவிட்டு பணியாளர் பணம் வசூலிக்கச் சென்றுள்ளார். காரில் 570,000 தினார் பணம் இருந்துள்ளது.

பணம் வசூலித்து திரும்பிய ஊழியர் அதிர்ச்சியடைந்தார். அதற்குக் காரணம் காரும் சாரதியும் திடீரென காணாமல் போனமையாகும்.

பின்னர் தனது நிறுவன அதிகாரிகளுக்கு தகவல் வழங்கி அதன் மூலம் குவைத் விமான நிலைய பாதுகாப்பு பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டு சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது.

காரையும் சாரதியையும் கண்டுபிடிக்க முடியவில்லை. செய்மதி ஊடாக கண்டுபிடிக்க முயற்சித்த போதும் அது கைகூடவில்லை.

அதன் பின்னர் கார் ஒரு மறைவான இடத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது காரில் இருந்த பணத்தில் 60,000 குவைத் தினார் காணாமல் போயுள்ளமை தெரியவந்தது.

இலங்கை சாரதியான அப்துல் அமீர் பணத்துடன் தப்பிச் சென்றுள்ளதாக சந்தேகிக்கப்படும் நிலையில் குவைத் பொலிஸார் அவரை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அப்துல் அமீர் ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த குவைத் முகவரியை கண்டுபிடித்துள்ளனர் பொலிஸார்.

# போரில் கணவனை இழந்த இலங்கை பெண்களுக்கு மலேசியா நிதியுதவி

இலங்கையின் வடக்கு கிழக்கில் போரின் போது கணவன்மாரை இழந்த பெண்களுக்கு உதவும் முகமாக மலேசிய அரசாங்கம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. இந்த நிதி மலேசிய தமிழ்ப் பேரவையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி வடக்கு கிழக்கில் கணவன்மாரை இழந்த 1700 பெண்களுக்கான வாழ்வாதார திட்டங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக நியூ ஸ்ரெய்ட் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

மலேசியாவின் எல்லைகள் துறை பிரதி அமைச்சர் எம்.சரவணன் இந்த நிதியை நேற்றுக் கையளித்தார்.

இது சிறிய தொகை நிதியாக இருந்தாலும் சிறந்த ஆரம்பம் என்று நிகழ்வின்போது அவர் குறிப்பிட்டார்.

நிகழ்வில் உரையாற்றிய மலேசிய தமிழ்ப் பேரவையின் பணிப்பாளர்களில் ஒருவரான எஸ்.பி பதிஇ இலங்கையின் வடக்கு கிழக்கில் தேர்ந்தெடுக்கப்பட்ட 1700 பெண்களின் சிறிய பொருளாதார முயற்சிகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை இந்ததிட்டத்தை முன்னெடுத்து செல்லும் வகையில் ஐக்கிய நாடுகள் மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட மலேசிய அரசாங்கம் தொண்டர்களையும் அனுப்பி வைக்கவுள்ளதாக பிரதி யமைச்சர் சரவணன் குறிப்பிட்டார்.




# பெண் விடுதலைக்காக முதலை கண்ணீர் வடிக்கும் ஆண்கள்

பெண்கள் விடுதலையின் பேரால் உலகத்தில் அநேக இடங்களில் அநேக சங்கங்களும், முயற்சிகளும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருவது யாவரும் அறிந்ததே. இம்முயற்சிகளில் ஆண்களும் மிகக் கவலையுள்ள

விடுதலை கிடைக்கவே கிடைக்காது என்பதை மாத்திரம் உறுதியாய் நம்பலாம். ஏனெனில், ஆண்மை என்னும் பதமே பெண்களை இழிவு படுத்தும் முறையில் உலக வழக்கில் உபயோகப்படுத்தப் பட்டு வருகின்றது என்பதைப் பெண் கள் மறந்துவிடக்கூடாது. ஆண்

ஆண்களுக்கும் யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

பெண்கள் விடுதலை பெறுவதற்கு இப்போது ஆண்களைவிடப் பெண்களே பெரிதும் தடையாயிருக்கிறார்கள். ஏனெனில், இன்னமும் பெண்களுக்குத் தாங்கள்

சிறிதாவது ஆண்களுக்குக் கஸ்டத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் இந்தக் காரியத்தில், அதாவது பெண்கள் பிள்ளை பெறுவ தில்லை என்கின்ற காரியத்தில் ஆண்களுக்கு எவ்வித கஸ்டமும் கிடையாது என்பதோடு ஆண்க ளுக்கு இன்பமும் உண்டு என்ப தையும் தெரிவித்துக் கொள்ளு கிறோம். எப்படியெனில் ஒரு மனிதன்தான் பிள்ளை குட்டிக் காரனாயிருப்பதனாலேயே

வர்கள் போலக் காட்டிக்கொண்டு மிகப்பாசாங்கு செய்து வரு கிறார்கள். ஆண்கள் முயற்சி யால் செய்யப்படும் எவ்வித விடுதலை இயக்கமும் எவ்வழி யிலும் பெண்களுக்கு உண்மை யான விடுதலையை அளிக்க முடியாது. தற்காலம் பெண்கள் விடுதலைக்காகப் பெண் மக்களால் முயற்சிக்கப்படும் இயக்கங்களும் யாதொரு பலனையும் கொடுக்காமல் போவதல்லாமல் மேலும் மேலும் அவை பெண்களின் அடிமைத் தனத்திற்கே கட்டுப்பாடுகளைப் பலப்படுத்திக் கொண்டே போகும் என்பது நமது அபிப்ராயம்.

அன்றியும் ஆண்கள், பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன் பெண்கள் என்றும் விடுதலை பெறமுடியாத கட்டுப்பாடுகள் பலப்பட்டுக்கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவ தாகவும் ஆண்கள் காட்டிக்கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைக ளால் எலிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது நரிக ளால் கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? என்பதை யோசித் தால் இதன் உண்மை விளங் கும். அப்படி ஒருக்கால் ஏதா வது ஒரு சமயம் மேற்படி விசயங்களில் விடுதலை உண்டாய்விட்டாலும் கூட ஆண்களால் பெண்களுக்கு

மையால் தான் பெண்கள் அடிமை யாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சுதந்திரம், வீரம் முதலிய குணங்கள் உலகத்தில் ஆண் மைக்குத் தான் உரிதாக்கப் பட்டுவிட்டது. ஏன்? ஆண்மை க்குத்தான் அவைகள் உண்டு என்று ஆண்மக்கள் முடிவுகட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதை மாத்திரம் பெண்கள் நன்றாய் உணரவேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறோம்.

**ஆண்கள், பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன் பெண்கள் என்றும் விடுதலை பெறமுடியாத கட்டுப்பாடுகள் பலப்பட்டுக் கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவ தாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல.**

எனவே, பெண் மக்கள் அடிமையானது ஆண் மக்களாலேயேதான் ஏற்பட்டது என்பதும், அதுவும் ஆண்மையும் பெண் அடிமையும் கடவுளாலேயே ஏற்படுத்தப்பட்டதாக எல்லா ஆண்களும் கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும், அதோடு பெண் மக்களும் இதை உண்மையென்றே நினைத்துக் கொண்டு வந்த பரம்பரை வழக்கத்தால் பெண் அடிமைக்குப் பலம் அதிகம் ஏற்பட்டிருக்கின்ற தென்பதும் நடுநிலைமைப் பெண்களுக்கும்

முழுவிடுதலைக்கு உரியவர்கள் என்கின்ற எண்ணமே தோன்றவில்லை. தங்களுடைய இயற்கைத் தத்துவங்களின் தன்மையையே தங்களை ஆண்களுக்கு அடிமையாகக் கடவுள் படைத்திருப்பதன் அறிகுறியாய்க் கருதிக் கொண்டிருக்கிறார்கள். எப்படியெனில், பெண் இல்லாமல் ஆண் வாழ்ந்தாலும் வாழலாம் ஆனால் ஆண் இல்லாமல்

பெண் வாழமுடியாதென்று ஒவ்வொரு பெண்ணும் கருதிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் கருதுவதற்கு என்ன காரணம் என்று பார்ப்போமேயானால் பெண்களுக்குப் பிள்ளைகள் பெறும் தொல்லை ஒன்று இருப்பதால் தாங்கள் ஆண்கள் இல்லாமல் வாழ முடியும் என்பதை ஊர்ஜிதப் படுத்திக் கொள்ள முடியாதவர் களாயிருக் கிறார்கள். அன்றியும் அப்பிள்ளை பெறும் தொல்லையால் தங்களுக்குப் பிறர் உதவி வேண்டியிருப்பதால்



அங்கு ஆண்கள் ஆதிக்கம் ஏற்பட இடமுண்டாய் விடுகின்றது. உலகத்தில் மற்றெல்லாத் தாவரங்கள், ஜீவப்பிராணிகள் முதலியவை இயற்கை வாழ்வு நடத்தும் போது மானிட வாழ்க்கையில் மாத்திரம் இயற்கைக்கு விரோதமாகவே அதாவது பெரும்பாலும் செயற்கைத் தன்மையாகவே வாழ்வு தன்மை நடத்தி வருகின்றபோது இந்த விடயத்திலும் இயற்கைக்கு விரோதமாய் நடைபெறுவதில் ஒன்றும் முழுகிப் போய்விடாது.

பெண்களின் அடிமைத்தன்மை பெண்களை மாத்திரம் பாதிப்பதில்லை. அது மற்றொரு வகையில் ஆண்களையும் பெரிதும் பாதிக்கின்றது. இதைச் சாதாரண ஆண்கள் உணருவ தில்லை. ஆனால் நாம் அந்த இடத்தில் அதைப்பற்றிச் சிறிதும் கவலை கொள்ளவில்லை. பெண்களைப் பற்றியே நாம் கவலை கொண்டு சொல்லுகின் றோம். தற்கால நிலைமையில் பெண்கள் விடுதலைக்குப் பெண்கள் வேறு எவ்விதமான முயற்சி செய்தாலும் அது

யோக்கியமாகவும் சுதந்திர மாகவும் நடந்து கொள்ளப் பெரிதும் முடியாமலிருக்க வேண்டியவனாய் விடுகிறான். அன்றியும் அவனுக்கு அனாவ சியமான கவலையும் பொறுப்பும் அதிகப்படவும் நேரிடுகின்றது. மற்றபடி இதனால் ஏற்படும் மற்ற விடயங்களையும் முறைகளையும் மற்றொரு சமயம் பார்ப்போம்.

# உடல்மெலிந்த பெண்ணா நீங்கள்?

பொதுவாக உடலில் இரும்பு, பாஸ்பரஸ், கால்சியம், மக்னீசிய சத்துக்களும் வைட்டமின்களும் தாதுப் பொருட்களும் போதுமான அளவு இருந்தால்தான் உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

இச்சத்துக்கள் குறையும்போது உடல் பலவீனமடைகிறது. இவற்றைப் போக்க மருந்து மாத்திரைகள் உண்பதை விட உணவில் அதிகளவு காய்கறி பழங்கள் கீரைகள் சேர்த்துக்கொள்ள வேண்டும். மதிய உணவில் மோர் சாப்பிடவேண்டும்.

* வாரம் ஒருமுறை மீன் சாப்பிடுவது நல்லது. அதுபோல் இரவு படுக்கைக்குச் செல்லும் முன் பாலில் சிறிது சுக்கு தட்டிப்போட்டு காய்ச்சி அருந்த வேண்டும். வாழைப்பழம், கொய்யாப்பழம் சாப்பிடலாம்.

* நோயினால் பாதிக்கப்பட்டு உடல் பலம் குறைந்தவர்கள் அருகம்புல்லை நன்கு சுத்தம் செய்து அரைத்து நீரில் கொதிக்க வைத்து வடிகட்டி பனைவெல்லம் கலந்து காலை மாலை டீ காஃபிக்கு பதிலாக அருந்தி வந்தால் உடல் பலவீனம் நீங்கும்.



* பச்சை பயறை நீரில் ஊறவைத்து முளை கட்டிய பின் அதனை லேசாக அவித்து சாப்பிட்டு வந்தால் இளைத்த உடல் தேறும்.

* பாதாம் பருப்பை ஊறவைத்து அரைத்து பாலில் கலந்து இரவு படுக்கைக்குச் செல்லும் முன் அருந்தி வந்தால் உடல் பலம் பெறும்.

* சோற்றுக் கற்றாழை மடலை எடுத்து அதன் மேல் தோலை நீக்கி, உள்ளிருக்கும் சதைப் பகுதியை நன்கு நீர் விட்டு அலசி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் இளைத்த உடல் தேறும்.

* தூதுவளை பொடியை தேனில் கலந்து 1 ஸ்பூன் அளவு காலை வேளையில் சாப்பிட்டு வந்தால் நன்கு பசியைத் தூண்டும். இளைத்த உடல் தேறும். இதை உடல் பலவீனமான குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சாப்பிடலாம்.

* கொண்டைக் கடலை 10 எடுத்து இரவு சுத்தமான நீரில் ஊறவைத்து மறுநாள் காலையில் நீருடன் சேர்த்து கடலையை மென்று சாப்பிட்டு நடைபயிற்சியோ உடற்பயிற்சியோ செய்து வந்தால் மெலிந்த உடல் தேறும். சோர்வு நீங்கும்.

* தேவயான அளவு பேரிச்சம் பழம், தேன் இவற்றோடு கற்கண்டும் சேர்த்து லேகியப்பதமாகச் செய்து வைத்துக்கொண்டு தினமும் காலை மாலை 1 தேக்கரண்டி சாப்பிட்டு வர மெலிந்த தேகம் பருக்கும்.

* முருங்கை இலைக் கொத்தின் ஈர்க்குகளை எடுத்து சிறிதாக நறுக்கி அதனுடன் சின்ன வெங்காயம், மிளகு, பூண்டு சேர்த்து சூப் செய்து அருந்தி வந்தால் கை, கால் உடல் அசதி நீங்கும். உடல் பலம் பெறும். உடலைத் தேற்ற சிறந்த டானிக் இது.

* உடல் பலவீனமடைந்து தேறாமல் நோஞ்சான் போல் உள்ளவர்களின் உடல் பல மடைய தூதுவளை, பசலைக் கீரை சிறந்த நிவாரணி. இவற்றைப் பக்குவப்படுத்தி உண்டு வந்தால் உடல் பலமும், தேக ஆரோக்கியம் கிடைக்கும்.

* முதல் வாரத்தில் தூதுவளைக்கீரை, அடுத்த வாரத்தில் பசலைக்கீரை.. அதேபோல் அடுத்த வாரத்தில் தூதுவளைக் கீரை என மூன்று மாதங்கள் சாப்பிட்டு வந்தால் உடல் பலவீனம் நீங்கி தேக ஆரோக்கியம் கிடைக்கும்.

# நாட்டார் பாடல்களில் மீனவர்களின் இதய தாபங்கள்

ஏலோலம்... ஓவேலம்
ஏலடிஏலம்... ஏலச்சிலாமாய்...
கள்ளச் சிலாமாய்...
கலம்பக்கயிறு... மூட்டான்
கயிறு... முப்பிலிக் கயிறு...
வளஞ்சி இழுடா... வடிவா
இழுடா... சவியா இழுடா...
சாஞ்சி இழுடா...
மல்லிகமுல்ல... மருக்
கொழுந்து... நேத்து வடிச்ச...
ஆத்துக் கெழுத்தி...
ஏலோலம்... ஓவேலம்...
ஏலடிஏலம்... ஏலச்சிலாமாய்
கள்ளச்சிலாமாய்...



கலம்பக்கயிறு... கடலப்பார்ரா...
அள்ளிப்போகுது... ஏலோலம்...
ஓவேலம்...
(கரைத்தண்டையல் ஏ.எம் மீராலெவ்வை, நிந்தவூர் - 01)

ஏலேய ஏலே... ஏலேய் ஏலே...
ஏலோலாவலை...
ஓவேலாவ்லை... ஐயோட
வலை... ஆடாடோவலை...
ஓடாதே ஓடாதே... கோழிக்
குஞ்சே...ஓட்டங்கள் காட்டாதே
கோழிக் குஞ்சே... எட்டுப்
பணம் வித்த காலத்திலே...
கட்டி வளத்தேனே கோழிக்
குஞ்சே... ஏலேலாய்வலி...
ஓவேலாய் வலி... ஏலேலாய்
ஓவேலாய்... எங்கட ஊரில்
பஞ்சமாம்... ஏழச் சனங்களும்
மிச்சமாம்... சந்திக்குச் சந்தி
கூட்டமாம்... சாகிற கிழவிக்கு
ஓட்டமாம்... ஏலேலாய்வலி...
ஓவேலாய் வலி... ஏலேலாய்
ஓவேலாய்...
(பாடல் உதவி : கரைவரைத் தண்டயல் முகம்மது காசீம், சாய்ந்தமருது)

மேற்சொன்ன இரு அம்பாப் பாடல்களின் மூலம் இவர்களின் வாழ்வியல் பண்பாடு, உழைப்பு என்பன சிறப்பாக வெளிப்படுவதைப் பார்க்கலாம்.

### நாட்டார் பாடல்களில் இதய தாபங்கள், ஒழுக்கப் பண்பாடுகள்

கடலே இரையாதே
காற்றே நீ வீசாதே
நிலவே எறியாதே - என்ர
நீலவண்டார் வந்து சேரு
மட்டும்
நடவாக் கிடாமாடும்
நானுமிந்தப் பாடுபட்டால்
காயாப் புழுங்கலும் என்
கண்மணியும் என்ன பாடோ?
மாடும் வயசாளி
மச்சானும் நோயாளி
வெயிலும் கடும்
வேகம் - மச்சான்ட
வேலயெல்லாம் எப்பிடியோ!
பொழுது கிளம்பி
பூமி இந்தச் சூடுசுட்டால்
வெள்ளாமவெட்டும் - மச்சான்ட
மேனி என்ன சூடுசுடும்!

### நாட்டார் பாடல்களில் உள்ள தாலாட்டுப் பாடல்களும் இம்மக்களின் பண்பாட்டுக் கோலங்களும்

ஓரோரோ... ஓரகண்டே - நீ
ஓராட்டக் கேளாயோ...
கண்ணே நீ... கண்ணுறங்கு என்ர
கண்மணியே நீயுறங்கு
பாலுக்கோ நீயழுதாய் - நீ
பசிக்கிதெண்டோ நீயழுதாய்
கண்ணே நீ கண்ணுறங்கு-என்ர
கண்மணியே - நீயுறங்கு
மானீன்ற கண்டோ... நீ
மயில்பொரிச்ச... நற்குஞ்சோ
வாடாத பூவோ நீ
வதங்காத மல்லிகையோ
சாதிகுலமோ... நீ
சந்தனப்பூ மேனியரோ
வருக்கப் பலாப்பழமோ... நீ
வங்கிசத்தின் பெருமகனே...
ஓரோரோ... ஓரகண்டே... நீ
ஓராட்டக் கேளாயோ
(உதவி : மீ மீரா உம்மா நிந்தவூர் - 01)

### நாட்டார் பாடல்களும் இம்மக்களின் உணவுகளும் பண்பாடும்

சீனேட்டரிசியிம்
செல்ல இறால் ஆணமும்
பொத்துவில் ஊரும்
பொருந்தினதோ வன்னிமைக்கு?

கீச்சான் பொரிச்சிருக்கு
கிளி இறைச்சி ஆக்கிரிக்கு
எள்ளும் பொரிச்சிருக்கு
எங்கிட
எளய மச்சான் திண்ணை
யிலே...

### நாட்டார் பாடல்களில் ஒப்பாரிப் பாடல்கள்

என்னைப் பெத்த அம்மாவே
என்னை பெத்த அருமை
யென்ன
பேரிட்ட நோர்த்தியென்ன
என்னை வளர்த்த அருமை
யென்ன
குழந்தையிலே பார்த்த
அம்மா - நான்
கோபுரமா நான்நிக்க நீ
பார்க்கலயே
மழலையாய்ப் பார்த்த அம்மா
மலராய் நான்நிக்க நீ
பார்க்கலயே - நான்
மலைபோல நிக்கையிலே -
என்னை
மயங்கவிட்டுப் போனீங்களே
(பாடல் உதவி : நாகம்மாள் - காரைதீவு)

### நாட்டார் இலக்கியத்தில் உள்ள பழமொழிகளும் பண்பாடும் வாழ்வியலும்

ஆயிரம் உளி பட்டால்தான்
ஒரு சிவலிங்கம் உருவாகும்

ஏத்திறவன் ஏமாளியென்டா
எருது மச்சான் முறை
கொண்டாடும்

அடுக்களைப் பூனை அம்பலம்
ஏறுமா?
ஆண்டி மகன்
ஆண்டியென்றால்
நேரமறிந்து சங்கூதுவான்

இப்பழமொழிகளின் மூலம் இம்மக்கள் தங்களின் ஒழுக்கங்களையும் பண்பாட்டு விழுமியங்களையும் தங்கள் முதியவர்கள் மூலம் வெளிப்படுத்தி வந்துள்ளார்கள் என்பதை சிறப்பாக நாம் அறிந்து கொள்ளலாம்.

## மீனவர்களின் 'அம்பா' ப் பாடல்

**முடிவுரை**

படிப்பறிவில்லாத ஈழத்து நாட்டுப்புற மக்களின் மண்ணின் சிறப்பும் அவர்களின் வாழ்வியலும், பண்பாட்டு அம்சங்களும், அவர்களின் நாட்டார் இலக்கியப் பாடல்களின் வாயிலாக வெளிப்பட்டு நிற்கின்றன.

இவர்களின் இலக்கியங்கள் அவர்களின் பண்பாட்டுக் கோலங்களை தெளிவாகவும், உயிர்த்துடிப்போடும்



சொல்லிச் சொல்லி எங்களையெல்லாம் வியப்புறச் செய்கின்றன.

எங்கள் முதுசமாக இருக்கும் வளம் கொழிக்கும் இவ்விலக்கியச் செல்வங்களை, ஈழத்தில் இதுவரை முழுமையாக யாரும் ஆய்வுக்குட்படுத்தவில்லை என்பது பெரும் குறையே.

இக்குறை நீங்க இலங்கைப் பல்கலைக்கழகங்கள் விரைவில் சிறப்பான ஆய்வுகளை மேற்கொண்டு, நூல்களை வெளியிட முன்வரல் வேண்டும்.

பல்கலைக்கழகங்களில் பட்டங்களை மட்டும் பெற்றுக் கொள்வதினாலோ, அப்பட்டங்களின் மூலம் பெருமை பேசிக்கொள்வதினாலோ எங்கள் இலக்கிய முதுசொங்களாக சொல்லப்படும் ஈழத்து வாய்மொழி இலக்கியங்கள் ஒருபோதும் வளராது; வளம் பெறாது. இவ்வுண்மை பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கும், கலாநிதிகளுக்கும் நன்கு புரியும்.

இலக்கியத்தின் ஆணிவேராகக் கருதப்படும் நாட்டார் இலக்கியங்கள் அழிந்து சிதைந்து விடாமல் பாதுகாத்து அவற்றை கிராமங்கள் தோறும் சென்றுகள ஆய்வு செய்து சேகரித்து நூலுருவாக்கித்தர பல்கலைக்கழகங்கள் பேராசிரியர்கள், கலாநிதிகள், ஆய்வாளர்கள் முன்வருவார்களா?

**எஸ். முத்துமீரான்**

# மரண தண்டனைக் கைதி முமுமியா அபு ஜமால்



முமியா அபு ஜமால் 1954ஆம் ஆண்டு ஏப்ரல் 24 அன்று ஃபிலடெல்பியாவில் பிறந்தார். 1981 டிசம்பர் 9 இல் கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். அப்போது அவர் ஒரு வாடகைக் கார் ஓட்டுநராக இருந்தார். ஃபிலடெல்பியா பொலிஸ் அதிகாரி டேனியால் ஃபாக்னரைக் கொலை செய்தார் என்றே அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அவரது வழக்கு விசாரணைக்கு வந்து 1982 ஜூலை 3 அன்று மரண தண்டனை என தீர்ப்பு வழங்கப்பட்டது.

பென்சில்வேனியா உச்ச நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்த மேல்முறையீடு 1989ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நிராகரிக்கப்பட்டது. அமெரிக்க உச்ச நீதிமன்றம் அவரது வழக்கை மறு பரிசீலனை செய்ய மறுத்து விட்டது. அமெரிக்க மாநில நீதிமன்றங்களில் தாக்கல் செய்வதற்காக தண்டனைத் தீர்ப்பிற்குப் பிறகான நீதி முறையீட்டை முன்வைப்பதற்காக மனுவொன்று இப்போது தயாரிக்கப்பட்டு வருகிறது.

முமியா ஆபிரிக்க - அமெரிக்கப் பத்திரிகை யாளராகவும் போராளியாகவும் இருந்தார். கறுப்பினப் பத்திரிகையாளர்கள் சங்கத்தின் பிலடெலிப்யாக் கிளயின் தலைவலரா அவர் இருந்தார்.

பிலடெல்பியா பத்திரிகையின் 1981 ஜனவரி மாத இதழ் 1981ஆம் ஆண்டில் கவனிக்கப்பட வேண்டிய மனிதர்களில் ஒருவராக" அவரது பெயரைக் குறிப்பிட்டது. 1970 - 1981 கால கட்டத்தின்போது, நஃனல் பப்ளிக் ரேடியோ, மியூச்சுவல் பிளாக் நெட்வேர்க் ஆகியவற்றில் அவரது செய்தி ஒலிபரப்புகள் மூலமாகவும் டபிள்யு யூ.ஹெச் ரேடியோ நிலையத்திலும் மற்ற பல நிலையங்களிலும் அன்றாடச் செய்தி அறிக்கைகளை அவர் ஒலிபரப்பியது ஆகிய வற்றின் விளைவாகவும் "குரலற்றவர்களின் குரலாக இருப்பவர்" என அறியப்பட்டவராகவும், பரந்த புகழ் பெற்றவராகவும் ஒரே பத்திரிகையாளராகவும் இருந்தார்.

பதின்மூன்று ஆண்டுகளாக ஹன்டிங்டன் சிறையில் அவர் மரண தண்டனைக்காகக் காத்திருக்கிறார்.

மரண தண்டனைச் சிறைப் பகுதியிலிருந்துகொண்டு, கடந்த ஐந்தாண்டுக் காலமாக தொழில்முறைப் பத்திரிகையாளராக அவர் பணியாற்றி வருகிறார்.

அமெரிக்கா, ஐரோப்பா, முழுவதிலும் பல பத்திரிகைகளிலும் அவருடைய கருத்துரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மரண தண்டனைச் சிறை வாழ்க்கையும் மக்லெக்ஸி வழக்கின் தாக்கமும் என்பது குறித்த அவருடைய கருத்துரை, 1991 ஜனவரியில் வெளிவந்தது.

# வாழ்க்கையில் செய்வன திருந்தச் செய்

“செய்வன திருந்தச் செய்” என்பது பண்டு தொட்டு நிலவிவரும் அருமையான மகுட வாசகம். மூத்தோர் கள், இளையோர்களுக்குப் புத்திமதி கூறும்போது இதனைக் கூறிவைக்க மறப்பதில்லை. செய்வதைச் சரியாய்ச் செய்யுங் கள், செவ்வையாகச் செய்யுங்கள், ஒழுங்காய்ச் செய்யுங்கள் என்று பெரியவர்கள் கூறுகின்ற ஒவ்வொரு தடவையும், கேட்கின்ற இளையோர்களுக்குக் காதுகளில் அவை கொடூரமாக ஒலித்தாலும், அருமருந் தன்ன அந்த வார்த்தைகள் அர்த்தமுள்ளவை, வாழ்விப்பவை, நலந்தருபவை என்பதை மறந்துவிடல் ஆகாது. அதனால் தான் “மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்” என்கின்றனர்.

எந்தச் செயலும், திரும்பத் திரும்பச் செய்யப்படுவதால், செம்மை பெறுகின்றது. செயலில் தேர்ச்சி பெறுவது என்பது ஓரிரு நாட்களில் நடந்தேறி விடுவதில்லை. பல நாட்கள் செல்லலாம். முயற்சியும், பயிற்சியும், [illegible]டும், மன ஒருமைப்பாடும், முதிர்ச்சியும் தேர்ச்சியும் ஒருங்கிணைந்து காணும் பட்சத்திலேயே, செயல்களும் கருமங்களும் சிறக்கின்றன. ஊதியம் பெறுவதில் உள்ள ஆர்வமும், ஆதங்கமும், பொறுப்பேற்ற கருமத்தைச் செவ்வனே செய்ய வேண்டும் என்பதில் இருத்தலும் அவசியம்.

எடுத்த கருமத்தை, எமது திறமைகளையெல்லாம் வெளிப்படுத்தி, செவ்வை யாகவும் இனிதாகவும் செய்து முடிப்பதே மனித தர்மம். “செய்யுந் தொழிலே தெய்வம்” என்பார்கள். அத்தொழிலில் நாம் காட்டும் திறமை தான், செம்மையாக மிளிர்கிறது.

உண்மை, செம்மை, அழகு ஆகிய இம்மூன்று பண்புகளும், எமது செயல்களிலும் செயற் பாடுகளிலும் பரிணமிக்க வேண்டும். இம் மூன்றும், எம் வாழ்க்கையில் இடம்பெறச் செய்தலே மனிதனின் குறிக்கோள் ஆகும்.

“என் கடன் பணி செய்து கிடப்பதே” என்கிறார், ஒரு மெய்ஞ்ஞானி. அந்தப் பணி உண்மையாகவும் செம்மையாக வும், அழகாகவும் ஆற்றப்பட வேண்டும் என்ற தொனிப்புத்தான் குறித்த மகுடவாசகத்தின் உயிர்ப்பு.இன்று பெரும் பாலும் செய்யப்படுகின்ற பணிகளிலும் கருமங்களிலும் இந்த “உயிர்ப்பு” காணப்படுதல் அரிதாகிவிட்டமை தெளிவாகத் தெரிகின்றது. அதனாலேயே, எடுத்த காரியங்கள் பெரும்பாலும் முற்றுப்பெறுவதில்லை. சிலவேளை முற்றுப் பெற்றாலும் அவை திருத்தமாகவும், திருப்தியா கவும் அமையப் பெறுவதில்லை.

செய்யும் பணிகள் திருத்த மாகச் செய்யப்பட வேண்டும், செம்மையாக ஆற்றப்பட வேண்டும், ஒழுங்காக மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற விழுமிய எண்ணம் பணியாளர்கள் மத்தியில் அருகிவிட்டமையே பொதுப்பணித்துறைகளில் ஏற்பட்டுள்ள சீர்கேடுகளுக்கும், விரயங்கள் மற்றும் ஊழல்களுக்கும் பிரதான காரணமாகும். தமது திறமையையும் நேர்மையையும் செய்யும் தொழில்களில் வெளிப்படுத்துபவர்களே போற்றுதலுக்குரியவர்கள். திறமைகளை முழுமையாக வெளிப்படுத் தாமல், பொதுச் சொத்துக் களை நேர்மைக்கும் நீதிக்கும் புறம்பான முறையில் விரயம் செய்தும், விரயத்திற்கு உடந்தையாக இருந்தும் அலட்சியம் புரிபவர்கள், நம்பிக்கைக்கு இரண்டகம் செய்தவர்கள் என்போர் சமுதாயத்திற்கும் தேசத்திற்கும் தெரிந்து கொண்டே துரோகம் இழைத்தவர்கள் ஆவர்.



எடுத்துக்கொண்ட கருமத்தையோ, செயலையோ ஒழுங்காகவும் செம்மையாகவும் செய்யாதவர் பிறரையும் ஏமாற்றித் தம்மையும் ஏமாற்றிக் கொள்கின்றனர். கிடைக்கப் போவது துன்பங்கள் துயர்களையே என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

அற்ப சுகத்திற்காக, பொய் வாழ்க்கை வாழ்ந்து, உண்மையான இன்பத்தை விட்டு விலகி, ஈற்றில் மீளாத் துன்பத்தில் மூழ்கின்ற வாழ்க்கை யையே, தற்காலத்தில் பெரும்பாலும் காணக்கூடியதாக உள்ளது. வேதனைக்குரிய இந்நிலை மையை மாற்றியமைப் பதற்கு மனித விழுமியங் களை வாழ்க்கையில் பேணிவருவதே சிறந்த வழியாகும்.



சகல சீவராசிகளிலும் மனிதன் உயர்ந்தவன். பரிணாம வளர்ச்சியின் உச்ச ஸ்தானத்தில் மனிதன் உள்ளான். ஆன்மிக வளமும், மகத்தான ஆற்றல்களும் ஒருங்கே கொண்டிருப்பவன். இவற்றைக் கொண்டு வாழ்வில் அரும்பெரும் சாதனைகளை நிகழ்த்தக் கூடியவன். அவ்வாறிருந்தும், மனிதர்கள் அவ்வாறு செய்யாமலும், தம்திறமைகளை உணராமலும் இருந்து வருகின்றனர். முயற்சி திருவினையாக்கும், முயற்சி யின்மை துன்பத்தைத்தரும் என்பது வள்ளுவர் வாக்கு.

ஒருவனுக்குத் தரப்பட்டுள்ள பணியை முயன்று, திறமையுடன், ஒழுங்காக ஆற்றி வந்தால், அதுவே மிகப் பெரிய “தவம்” என்பது வள்ளுவர் கூறும் கருத்து. செய்வன திருந்தச் செய்தால் அதுவே தவம். தவத்தின் நோக்கம் இவ்வுலகில் வாழும் சகலரும் நலம் பெறவேண்டும், நன்மை அடைய வேண்டும் என்பதாகும்.

“தவம் செய்வார் தங்கருமஞ் செய்வார்” என்கிறது திருக்குறள்.

வயல்வெளிகள், தொழிற்சாலைகள், பாடசாலைகள், மருத்துவ நிலையங்கள், அலுவலகங்கள், வியாபாரத் தலங்கள் மற்றும் சேவைத்தலங்கள் அனைத்திலும் பணிபுரிபவர்கள் சமுதாய நன்மைக்காகத் தமது முழுத் திறமைகளையும் ஒன்று சேர்த்துப் பணிபுரிபவர்களாக மிளிர வேண்டும். முயற்சி, அர்ப்பணம், தியாகம் என்பவற்றை உறுதுணையாகக்கொள்ள வேண்டும். “செய்வன திருந்தச் செய்” என்ற வாசகம் தாரக மந்திரமாக விளங்கட்டும். நமது நாடும், சமுதாயமும் முன்னேற, நாம் ஆற்றும் பணிகளைச் செம்மையாகச் செய்வோம்.

மனிதன் நேர்மையான வாழ்க்கை வாழ்வதற்கு ஒரு தொழிலைச் செய்தே ஆக வேண்டும். ஒரு தொழிலை வாழ்க்கைத் தொழிலாக ஏற்றுக் கொண்ட பிறகு, சிறிது பெரிது என்றோ, சிறப்பு சிறப்பில்லாதது என்றோ சஞ்சலப்படுவது முறையல்ல. ஏற்றுக் கொண்ட தொழிலிடம் ஈடுபாடு வேண்டும், செம்மையாக அத்தொழிலைச் செய்ய வேண்டும். கடுமையாக உழைக்கின்றவர்கள், தத்தம் பணிகளைச் செவ்வையாகவும் திருத்தமாகவும் செய்கின்ற வர்கள் வாழ்க்கையில் முன்னேறுவது மட்டுமல்ல, உற்சாகமாகவும் மகிழ்ச்சி யாகவும் இருக்கிறார்கள்.

செய்வன, திருத்தமாகச் செய்யப்படும்போது, எல்லோருடைய நல்லெண் ணத்தையும் சம்பாதிக்க முடிகின்றது. அவர்களின் அன்பையும் நல்லுறவையும் பெறமுடிகின்றது. வாழ்க்கையில் மகிழ்ச்சியும் திருப்தியும் உற்சாகமும் ஏற்படுகின்றன. தொழிலிலிருந்து வருவாயும் அதிகமாகக் கிடைக்கின்றது. பலர் தம்மிடம் மறைந்து கிடக்கின்ற நிறைந்த ஆற்றல்களை அறிந்து கொள்வதில்லை. தமது ஆற்றல்களை உணர்ந்து கொள்ளும் பட்சத்தில், இன்னும் சிறப்பாகத் தொழிலைச் செய்ய முடியும்.

வேறுசிலர் வேண்டுமென்றே தமது தொழிலைச் செவ்வனே செய்யாது, காலத்தைக் கடத்துகின்றனர். இது அபத்தமான செயல், தன்னையும் ஏமாற்றிப் பிறரையும் ஏமாற்றுவதாக அமைகின்றது.

“செய்வன திருந்தச் செய்” என்பது பொருள் பொதிந்த கூற்று. வாழ்க்கையில் அதனைப் பின்பற்றி நன்மை பெறுவோமாக.

கலாநிதி
குமாரசாமி சோமசுந்தரம்
(மனித வாழ்க்கை விழுமியங்கள்)

# பரிணாம வளர்ச்சியில் மனிதன்

பரிணாம வளர்ச்சி மூளை யின் படிப்படியான வளர் ச்சியோடு தொடர்புடைய தாகும். உயர்வகைப் பாலூட்டிக ளில் மூளையின் துரித வளர்ச்சி யைக் காணலாம். இந்த உண் மையை வலுப்படுத்தும் பிற சான்றுகள் பல உள்ளன.

குளம்புகளுள்ள விலங்குகளில் பெரும்பாலானவை மிக வேகமாக வளர்கின்றன. மற்றோர் புறமோ, ஊனுண்ணிகளோ பல மாதங்கள் தமது தாயையோ தந்தையையோ சார்ந்து இருக்க வேண்டியவைய- ாய் உள்ளன.

உயர்வகைப் பாலூட்டிகளில் ஒன்றான ஓராங்-உடாங் பிறந்த வுடன் மல்லாக் காகப் படுத்தே முதல் ஒரு மாதத்தைக் கழிக் கிறது. பிறகு மெல்ல மெல்ல நடக்கக் கற்றுக்கொண்டு மூன்று வயதாகையில் யாரையும் சார்ந்திருக்காமல் தானாகவே நடமாடக் கூடியதாகிறது. பத்து அல்லது பதினொரு வயதில் முழு வளர்ச்சியடைகிறது. மனிதக் குழந்தையோ தான் பிறந்த ஒரு ஆண்டு முடியும் தறுவாயிலேயே எழுந்து நடக்க ஆரம்பிக்கின்றன.



பரிணாம வளர்ச்சியில் உள்ள கீழ்நிலை விலங்குகளை ஒப்பிடு கையில் உயர்நிலைப் பாலூட் டிகள் முழு வளர்ச்சியடைய அதிக காலம் எடுத்துக் கொள்கி ன்றன. ஆனால் அவற்றின் உடல் உறுப்புகளின் வளர்ச்சியைப் பொறுத்த மட்டில் மிகவும் கடை- சியாக முழு வளர்ச்சியடைவது மூளைதான். மனிதனைப் பொறுத் தமட்டில் இந்த வேறுபாடு இன்னும் அதிகமாக உள்ளது. அவனது மூளை வளர்ச்சியடை வதற்கு அவன் பிறந்த பின் நீண்டகாலம் பிடிக்கிறது. அதே சமயம் உடலின் பிற உறுப்பு களைவிட அது வேகமாக வளர்ச் சியடைகிறது.

மனிதனது மூளையின் அளவும் எடையும் அதிகரிப்பதற்கு முக்கிய காரணம், கைகளையும் கால் களையும் கட்டுப்படுத்தும் மூளைப் பகுதியையும் நாக்கையும் உதடு களையும் கட்டுப்படுத்தும் பகுதி யையும் இணைக்கிற நரம்பு மண்டல வளர்ச்சியாகும். மூளை யின் இந்த இரண்டு பகுதிகளின் அளவு விகிதம் மனிதனின் இதர உறுப்புகளை இயக்கும் பகுதிகளின் அளவு விகிதத்தை விட அதிகமானதாகும்.

மனிதனல் லாத உயர்வகைப் பாலூட்டி களின் மூளைகளில் உள்ள இதேபோன்ற பகுதிக ளைவிட அளவில் மிகவும் பெரியதாகும்.

# அமெரிக்காவில் பயங்கர காட்டுத் தீ: 11 ஆயிரம் பேர் வெளியேற்றம்

அமெரிக்காவில் உள்ள கலேராடோ பகுதியில் மிக அடர்ந்த காடுகள் இருக்கின்றன, மேலும் இது சுற்றுலா தளமாகவும் விளங்குகிறது.

தற்போது இந்த காட்டுப் பகுதியில் சுமார் 2,500 ஏக்கர் அளவுக்கு பயங்கரமாக தீப்பற்றி எரிவதாக கூறப்படுகிறது, இதனால் அந்த பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சி அளிக்கிறது.

எனவே அந்த பகுதியை சுற்றியுள்ள 11 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தீயை அணைக்கும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர், கடந்த 23ஆம் திகதி மட்டும் அமெரிக்காவில் பல்வேறு இடங்களில் காட்டுத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



# பர்தாவை அகற்றாததால் பெண்ணுக்கு கல்லூரியில் அனுமதி மறுப்பு

பர்தாவை அகற்றாத காரணத்தினால் லண்டன் கல்லூரியில் முஸ்லிம் பெண் ஒருவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

லண்டனில் மான்செஸ்டரின் வேலி ரேஞ்ச் பகுதியில் வசிப்பவர் அப்துல் (வயது 40). இவர் ஒரு தொழிலதிபர், இவரது மனைவி மஷரூன் ரபிக் (வயது 40).

இவர்களுக்கு அவைஸ் (வயது 18), மற்றும் இப்ராகிம்(வயது 12) என்ற இரண்டு மகன்கள் உள்ளனர். இதே பகுதியில் உள்ள கல்லூரியில் அவைஸ் படிக்கிறான்.

இந்த கல்லூரியில் பெற்றோர் சந்திப்பு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த கூட்டத்துக்கு அழைக்கப்பட்டதால் மஷரூன் ரபிக், பர்தா அணிந்து வந்தார்.



இவரை தடுத்த கல்லூரி காவலர்கள் பர்தாவை அகற்றினால்தான் கல்லூரிக்குள் அனுமதிப்போம், என்றனர்.

கடைசி வரை மஷரூன் ரபிக் பர்தாவை அகற்ற மறுத்ததால் அவர் கல்லூரிக்குள் அனுமதிக்கப்படவில்லை.

இதுகுறித்து மஷரூன் ரபீக், பிரிட்டனில் பிறந்து வளர்ந்த நான், கல்லூரிக்கு அடிக்கடி வருகிறேன். இருப்பினும் என்னை பர்தாவை அகற்றச் சொல்லி வருத்தமடைய செய்துள்ளனர் என தெரிவித்துள்ளார்.



இஸ்ரேலின் ஜெருசலம் நகரில் கூட்டறிக்கை வெளியிடும் முன்னதாக கலந்தாலோசித்த ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேடன்யகூ.

# தப்பியோடிய லிபியாவின் முன்னாள் பிரதமர் கைது



லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபி, பொதுமக்களின் போராட்டத்தின் போது படுகொலை செய்யப்பட்டார்.

அவரது ஆட்சி வீழ்ந்ததை தொடர்ந்து பிர-தமராக பதவி வகித்த அல் பக்தாதி அலி அல் மக்மூத் பக்கத்து நாடான துனிஷியாவுக்கு தப்பி சென்று அங்கு தஞ்சம் புகுந்தார்.

கடாபி கொல்லப்பட்டதும் லிபயாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து அவரது ஆட்சியில் அநியாயம் செய்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படடுள்ளனர். அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து நீதிமன் றத்தில் விசா ரணை நடக்கிறது.

இந்நிலையில் துனிஷியாவில் தஞ்சம் அடைந்து இருந்த முன்னாள் பிரதமர் மக் மூத்தை விசாரணைக்காக தங்களிடம் ஒப்படைக்கும்படி அந்நாட்டு அரசிடம் லிபியா கோரிக்கை விடுத்தது.

அதை ஏற்றுக்கொண்ட துனிஷியா நேற்று அவரை லிபியாவ-'டம் ஒப்படைத்தது. மக் மூத்தை அரசு ஹெலிகாப்டர் மூலம் துனி' நகரில் இருந்து லிபியாவுக்கு அனுப்பி வைத் தனர்.

அதன் பின்பு அவரை லிபியா அரசு கைது செய்து திரிபோலியில் உள்ள சிறையில் அடைத்தது. இந்த தகவலை தற்போதைய இடைக்கால அரசின் இராணுவ அமைச்சக அதிகாரி மொகமது அல்-அகர்வால் தெரிவித்துள்ளார்.

# உலக பார்வை

## உலகில் அதிகளவு சம்பாதிக்கும் மொடல்கள்: பிரேசிலின் அழகி முதலிடம்



உலகிலேயே அதிக அளவில் பணம் சம்பாதிக்கும் மொடல்களில் பிரேசில் நாட்டைச்சேர்ந்த மொடல் அழகி கிஷேல் புன்ட்சென் (Gisele bundchen) முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

பிரபல பத்திரிக்கையான ஃபோர்ப்ஸ் உலகிலேயே அதிக அளவில் பணம் சம்பாதிக்கும் பெண் விளம்பர மொடல்களின் பெயர்களை வெளியிட்டுள்ளது.

இதில் ஆண்டிற்கு 45 மில்லியன் அமெரிக்கன் டொலர்களை சம்பாதிக்கும் கிஷேல் புன்ட்சென் முதலிடத்தில் உள்ளார். இவர் பிரேசிலின் மொடல் தேவதை என்று அழைக்கப்படுகிறார்.

அதேபோன்று இங்கிலாந்து நாட்டின் கனவுக்கன்னி கேட் மோஸ் ஆண்டிற்கு 9.2 மில்லியன் டொலர் சம்பாதிப்பதால் அவர் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளார்.

ரஷ்ய நாட்டின் நட்டாலியா ஒடியன்னவா ஆண்டிற்கு 8.6 மில்லியன் அமெரிக்க டொலர் சம்பாதிப்பதால் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

## தனது மகன்களை 15வது மாடியிலிருந்து கீழே தள்ளி கொலை செய்த தாய்



தனது இரண்டு மகன்களையும் 15வது மாடியிலிருந்து கீழே தள்ளி தாயே கொலை செய்தது அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவைசேர்ந்தவர் கலினா ரியாப் கோவா. இவருக்கு ஏழு மற்றும்நான்கு வயதில் இரண்டு மகன்கள் இருந்தனர்.

மாஸ்கோவில் உள்ள குடியிருப்பில் எட்டாவது மாடியில் இவர் வசித்து வந்தார். இவரின் கணவர், இவரை ஏமாற்றி விட்டு சென்று விட்டார்.

இந்தமன வருத்தத்தில் இருந்த கலினா இரண்டு மகன்களை வளர்க்க சிரமப்பட்டார். இந்நிலையில் நேற்று முன்தினம், அவர் இரண்டு குழந்தைகளையும் 15வது மாடிக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த பால்கனி வழியாக கீழே தள்ளி விட்டார்.

இதில் இரண்டு குழந்தைகளும் பலத்த காயமடைந்து பலியாயின. இதையடுத்து கலினா கைது செய்யப்பட்டார்.

இது குறித்து கலினா குறிப்பிடுகையில், என் குழந்தைகள் தற்போது சொர்க்கத்துக்கு சென்று விட்டனர் என்றார்.

புத்த துறவிகளை தாக்கிய தேனீக்கள்: 19 பேரின் நிலை கவலைக்கிடம்

தாய்லாந்து நாட்டில் உள்ள புத்த மடாலயத்தில், தேனீக்கள் கொட்டியதால் 76 புத்த துறவிகள் காயமடைந்துள்ளனர்.

தாய்லாந்து நாட்டின் சியாங்மாய் என்ற இடத்தில் புத்த மடாலயம் உள்ளது. இந்த மடாலயத்தை சுற்றியுள்ள மரங்களில் தேன் கூடுகள் அதிகளவு உள்ளன.

புத்தர் கோவிலை சுற்றி சுத்தம் செய்வதற்காக சென்ற 76 புத்த துறவிகளை, ராட்சத தேனீக்கள் பறந்து வந்து தாக்கின. இதில் சில துறவிகள் சுயநினைவை இழந்து விட்டனர்.

இவர்கள் மூன்று மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்றனர். இதில் லேசான காயமடைந்த 34 பேர் முதலுதவி சிகிச்சைக்கு பிறகு, மடாலயம் திரும்பினர். மற்றவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தேனீக்கள் கொட்டியதால் சிலருக்கு அலர்ஜி ஏற்பட்டுள்ளது. 19 துறவிகளை நிறைய தேனீக்கள் கொட்டியுள்ளதால் அவர்களது நிலை கவலைக்கிடமாக உள்ளது.

வழக்கமாக துறவிகள் நடமாடும் இந்த இடத்தில் தேனீக்கள், நேற்று ஏன் திடீரென தாக்கின என்பது தெரியவில்லை என மடாலய நிர்வாகி தெரிவித்துள்ளார்.

## புத்த துறவிகளை தாக்கிய தேனீக்கள்: 19 பேரின் நிலை கவலைக்கிடம்

தாய்லாந்து நாட்டில் உள்ள புத்த மடாலயத்தில், தேனீக்கள் கொட்டியதால் 76 புத்த துறவிகள் காயமடைந்துள்ளனர்.

தாய்லாந்து நாட்டின் சியாங மாய் என்ற இடத்தில் புத்த மடாலயம் உள்ளது. இந்த மடாலயத்தைசுற்றியுள்ள மரங்களில் தேன் கூடுகள் அதிகளவு உள்ளன.

புத்தர் கோவிலை சுற்றி சுத்தம் செய்வதற்காக சென்ற 76 புத்த துறவிகளை, ராட்சத தேனீக்கள் பறந்து வந்து தாக்கின. இதில் சில துறவிகள் சுயநினைவை இழந்து விட்டனர்.

இவர்கள் மூன்று மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்றனர். இதில் லேசான காயமடைந்த 34 பேர் முதலுதவி சிகிச்சைக்கு பிறகு, மடாலயம் திரும்பினர். மற்றவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தேனீக்கள் கொட்டியதால் சிலருக்கு அலர்ஜி ஏற்பட்டுள்ளது. 19 துறவிகளை நிறைய தேனீக்கள் கொட்டியுள்ளதால் அவர்களது நிலை கவலைக்கிடமாக உள்ளது.

வழக்கமாக துறவிகள் நடமாடும் இந்த இடத்தில் தேனீக்கள், நேற்று ஏன் திடீரென தாக்கின என பது தெரியவில்லை என மடாலய நிர்வாகி தெரிவித்துள்ளார்.

# மோட்டார் சைக்கிள் விபத்து:

## அமைச்சர் மகன் மரணம்



தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் ராஜுவின் மகன் தமிழ்மணி, மோட்டார் சைக்கிள் விபத்தில் பரிதாபமாக உயிரிழந் துள்ளார். அவரின் இறுதிச்சடங்கு நேற்று நடைபெற்றது.

பி.ஏ பட்டதாரியான தமிழ்மணி சென்னையில் அமைச்சர்களுக்காக அரசு குடியருப்பில் வசித்து வந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் தனது உறவினர் திருமணத்திற்காக மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். நள்ளிரவு 12 அளவில் சென்னை பாரிமுனையில் சென்ற போது வேகத்தடையில் ஏறி இறங்கும் போது தவறி விழுநதார். இந்த விபத்தில் தமிழ்மணி ஹெல்மட் அணிய வில்லை என்பதால் தலையில் பலத்தகாயம் ஏற்பட்டது. சென்னையில் உள்ள பெரிய வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டும் அவர் பரிதாபமாக உயிரிழந்தார். இவருக்கு தமிழக அமைச்சர்கள் முதல்வர் ஜெயலலிதா ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர். தமிழ்மணியின் இறுதிச்சடங்கு சொந்த ஊரான மதுரையில் நடைபெறுகின்றது.

# தமிழகத்தில் தலை தூக்கும் மாவோயிஸ்ட்கள் கும்பல்

கோவையில் சீனியர் மாவோயிஸ்ட் ஒருவரின் வீட்டில் சமீபத்தில் ரகசிய கூட்டம் நடந்து ள்ளது. மாவோயிஸ்ட் விவேக் கைதான-தால் தமிழகத்தில் தலைமை இல்லாமல் மாவோயிஸ்ட்கள் தவிக்கும் தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி கிராமங்களில் முற்போக்கு சிந்தனையுடைய இளைஞர்களை மூளைச் சலவை செய்து அவர்க ளை மாவோயிஸ்ட் இயக்கத்தில் ஒரு கும்பல் சேர்த்து வருகிறது. தேனி மாவட்ட மலைப்பகுதியில், இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்த வழக்கில் தலைமறை வாக இருந்த மாவோயிஸ்ட் விவேக், சென்னையில் சமீபத்தில் கைது செய்யப்பட்டார். இதனால் மாவோயிஸ்ட் இயக்கத்தினரின் செயல்பாடுகள் முற்றிலும் முடக்கப்பட்டுள்ளன. இந்த தொய்வு நிலை குறித்து கோவையில் உள்ள சீனியர் மாவோயிஸ்ட் சிவஞானம் என்பவரது வீட்டில் சமீபத்தில் ரகசிய ஆலோ சனைக் கூட்டம் நடந்தது. சிவஞானம் தீவிர மாவோயிஸ்டாக இருந்தவர். வயதானதால் தீவிர செயல்பாடுகளில் இருந்து ஒதுங்கியுள்ளார். அவரது வீட்டில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில், மாவோயிஸ்ட் இயக்கத்தில் மாநில அளவில் உள்ள நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர். அவர்கள் பேசுகையில் “தமிழகத்தில் மாவோயிஸ்ட் இயககத்தை வழி நடத்திய விவேக் கைது செய்யப்பட்டார். அவருக்கு அடுத்த் நிலையில் தலைவராக யார் செயல்படுவார் என்பதை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும என காரசாரமாக பேசினார். ரகசிய



கூட்டம் நடந்தது குறித்தும், அதில் பங்கேற்றவர்கள் குறித்தும் கியூ பிரிவு போலீசார் ரகசியமாக கண்காணித்து வருகின்றனர். 6 மாத கண்காணிப்பு: சென்னையில் நடககும் திருமண விழாவில் மாவோயிஸ்ட் விவேக் பங்கேற்க வுள்ள தகவல் கியூ பிரிவு போலீசாருக்கு ஆறு மாதம் முன் கிடைத்தது. விவேக் பிளஸ் 2 படித்தபோது தேர்வுக் கான ஹால் டிக்கெட்டில் ஒட்டிய போட்டோ மட்டுமே கியூ பிரிவு போலீசாரிடம் இருந்தது. அதனால் விவேக்கின் தற்போதைய உருவம் குறித்த எந்த தகவலும் பொலிசாரிடம் இல்லை.

# பிரணாப்பை வழியனுப்பி வைத்தது காங்கிரஸ்

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரணாப்முகர்ஜி, காங்கிரஸ் கட்சிப் பணிகளி லிருந்து நேற்றுடன் பிரியா விடைபெற்றார்.

காங்கிரஸ் செயற்குழுவின் சிறப்புக் கூட்டம் அக்கட்சி யின் தலைவர் சோனியா காந்தி தலைமையில் புதுடெல்லியில் நடைபெற்றது. ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளராகப் போட்டியிடவுள்ள மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் பிரியாவிடை அளித்தனர்.

இக்கூட்டத்தில் பிரதமர் மன்மோகன்சிங் பேசியது: பிரணாப் அனைவராலும் மதிக்கப்படும் நபர். ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவதால் அமைச்சரவையில் இருந்து விலகும் அவரது வெற்றிடத்தை நாங்கள் எப்போதுமே உணருவோம் என்றார்.

சோனியா காந்தி புகழாரம்: குடியரசுத் தலைவர் தேர்த லில் பெரும்பான்மை பலத்துடன் பிரணாப் முகர்ஜி வெற்றி பெறுவார்.

நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக அவர் பொறுப் பேற்பார் என நம்புகிறேன்.

கூட்டணிக்கு வெளியிலும் அவருக்குக் கிடைக்கும் ஆதரவு ‘பிரணாபின் தகுதி, நற்பண்புகளுக்குக் கிடைத்த அங்கீகாரம் ஆகும். அவருக்கு காங்கிரஸ் சார்பில் வாழ்த்து தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

பிரணாப் முகர்ஜி: நான் எப்போதும் காங்கிரஸ்கார னாகவே இருந்திருக்கிறேன். என்னால் இயன்றதை இந்தக் கட்சிக்காகச் செய்துள் ளேன்.

இந்த வளர்ச்சிக்காக மறைந்த பாரதப் பிரதமர்கள் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி மற்றும் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருக்கு நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன் என்றார்.

காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின் மத்திய



நிதி அமைச் சகம் அமைந்துள்ள நார்த் பிளாக் பகுதிக்கு வந்த பிரணாப் முகர்ஜி செய்தியாளர்களிடம் பேசியது மத்திய அமைச்சர் என்ற முறையில் நான் உங்களுடன் அதிகார ப்பூர்வமாகப் பேசுவது இதுவே கடைசியாக இருக்கும்.

இனி நான் உங்களுடன் அரசியல் பேச முடியாது. தனிப்பட்ட கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள முடியாது. மத்திய அமைச்சர் பதவியை ராஜிநாமா செய்கிறேன்.

# மதுரை ஆதீன மடத்தில் பொலிஸார் சோதனை

நீதிமன்ற உத்தரவின் பேரில் மதுரை ஆதீன மடத்தில் பொலிசார் சோதனை நடத்தி வருகின்றனர். மதுரை இந்து மக்கள் கட்சித்தலைவர் சோலைக் கண்ணன் என்பவர், கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இதில் மதுரை ஆதீன மடத்தில் புலித்தோல், யானை தந்தங்கள் இருப்பதாகவும் சோதனை நடத்த வேண்டும் எனவும் கூறியிருந்தார்.

கோர்ட் உத்தரவின் பேரில் இன்று விளக்குத்தூண் பொலிசார் இன்ஸ்பெக்டர் கதிவேல் தலைமையில் 10 இற்கும் மேற்பட்ட பொலிசார் இன்று காலை 11



மணிக்கு மதுரை ஆதீனம் மடத்திற்கு வந்தனர். உடனடியாக மடம் உட்புறமாக பூட்டப்பட்டது. பின்னர் மடத்திற்குள் புலித்தோல், யானை தந்தம் ஆகியவை இருக்கிறதா என சோதனை நடத்தி வருகின்றனர்.

# இந்திய செய்திகள்

## இந்திய பொருளாதார மீட்பு நடவடிக்கையில் ரிசர்வ் வங்கி

ரிசர்வ் வங்கியானது மிகவும் சரிவடைந்த நிலையில் உள்ள இந்திய பொருளாதாரத்தை மீட்கும் நடவடிக்கையில் தற்போது இறங்கியுள்ளது.

இதற்காக வெளிநாடுகளிலிருந்து வாங்கப்படும் வணிக ரீதியான கடன் தொகையை ரிசர்வ் வங்கி 10 பில்லியன் டொலர் உயர்த்தியுள்ளது.

மேலும் பத்து புதிய திட்டங்களுக்காக கடன் தொகையை உயர்த்தி ரிசர்வ் வங்கி அறிவிப்பு வெளியிட்டுள்ளது. பங்கு சந்தையில் ரூபாயின் மதிப்பு தொடர்ந்து சரிவை சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரத்தில் டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு




வரலாறு காணாத அளவிற்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

இதனையடுத்து பொருளாதார மீட்பு நடவடிக்கைகள் இன்று அறிவிக்கப்படும், என்று நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



சேலம் ராஜகணபதி கோவில் உண்டியல் காணிக்கை எண்ணும் பணியில் ஈடுபட்ட மகளிர் சுய உதவி குழுவினரை படத்தில் காணலாம்.

## உதயநிதி மனைவி பெயரில் மோசடி:

### தி.மு.க நிர்வாகிகளுக்கு தொடர்பா?

நடிகர் உதயநிதியின் மனைவி கிருத்திகாவின் குரலில் பேசி, மோசடியில் ஈடுபட்ட தாக மேலும் ஒருவரை சென்னை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சென்னை புழல் பகுதியைச் சேர்ந்த குறும்பட இயக்குநர் குமரேசனிடம், தினேஸ்குமார் (வயது 21) என்பவர் உதயநி தியின் மனைவி கிருத்திகாவின் குரலில் பேசியுள்ளார். பேசும் போது, எனது கணவரின் ரெட் ஜெயண்ட் நிறுவனத்தில் இணை, இயக்குனராக வேண்டுமானால் ரூ.1 லட்சம் தரவேண்டும் என்றும், இதை எனது தம்பி, இன்பநிதியிடம் கொடுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். இதை நம்பிய குமரேசன் முன்பணமாக ரூ.50,000 ஆயிரத்தை தம்பியாக வந்த தினேஸ்குமாரிடம் கொடுத்துள்ளார். பின்னதாக, இதில் மோசடி, இருப்பது குமரேசனுக்கு தெரிய வர, இவரின் உதவியுடன் பொலிஸார் தினேஸை கைது செய்தனர்.



இந்நிலையில் தினேஸுடன் சேர்ந்து மோசடியில் ஈடுபட்டதாக திருச்சி ஸ்ரீரங்கம் ராஜவீதியைச் சேர்ந்த மாணிக்கம் மகன் மணியையும் (35) பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விசாரணையில், 2 ஆண்டுகளுக்கும் மேலாக திமுக அமைச்சர்கள், திரைப்பட நடிகர், நடிகைகள் ஆகியோரிடம் பல குரல்களில் பேசி தினேஸ் பண மோசடியில் ஈடுபட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

## மரத்தில் பஸ் மோதி 15 பேர் பரிதாப பலி

உத்தர பிரதேச மாநிலம் அம்ரோகா மாவட்டத்தில், அம்ரோகா - ஜோயா சாலையில், பஸ் ஒன்று மரத்தின் மீது மோதியதில், 15 பேர் பலியாகினர் 24 பேர் காயம் அடைந்தனர். பஸ்சானது ஹரித்துவாரில் இருந்து சம்பல் மாவட்டத்தில் உள்ள கமால்புரா கிராமத்திற்கு அதிக அளவில் பயணிகளை ஏற்றிச்சென்றபோது, அதிகாலை 2 மணி அளவில் இந்த விபத்து நிகழ்ந்தது. சம்பவ இடத்திலேயே 13 பேரும் இரண்டு பேர் மருத்துவமனையிலும் இறந்தனர். இறந்தவர்களில் பெரும் பகுதியினர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

ஹரித்துவாரில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று விட்டு திரும்பிய போது இந்த விபத்து நிகழ்ந்தது. காயமடைந்தவர்கள், அம்ரோகா மற்றும் மொரதாபாத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# வலிகாமம் வடமாகாண வலைப்பந்து சம்பியன் வென்றது அராலி சரஸ்வதி ம.வி.

15 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் 150ஆவது ஆண்டை அடுத்த மாதம் கொண்டாடவுள்ள நிலையில் முதல் தடவையாக அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் வட மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 15 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயமும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயமும் அரியாலை கனகரெட்னம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இன்று திங்கள் கிழமை மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் கடும் வேகத்துடனும் நுட்பத்துடனும் விளையாடியமை பாராட்டுக்குரியதாகும்.

ஏற்கனவே இரு அணிகளும் கோட்டம், வலயம், மாவட்டம் என மோதிய நிலையில் இரு அணிகளும் மிகவும் நிதானத்துடன் ஒரு அணியின் திறமையை மற்றை அணி புரிந்துகொண்டு விளையாடினார்கள்.




இரு அணிகளும் முதல் பாதி ஆட்டத்தில் மாறி மாறி புள்ளிகளைப் பெற்ற போதிலும் முதல் பாதி ஆட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் 7 இற்கு 5 புள்ளிகள் என்ற முன்னிலையில் நின்ற வேளையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம் வெற்றியை தனது பக்கம் கொண்டுவர வேண்டும் என்ற துடிப்புடனும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் அதனை தடுத்து வெற்றியை தன தாக்கிக் கொள்ள வேண்டும் என்ற துடிப்புடனும் விளையாடிய போதிலும் மீண்டும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலத்தின் கைகள் ஓங்கிய நிலையில் 4 இற்கு 1 புள்ளி என்ற நிலையில் இரண்டாம் பாதி ஆட்டமும் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் 11 இற்கு 6 புள்ளிகள் என்ற அடிப்படையில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் அணியை வெற்றிபெற்று மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

# வடமாகாணப் போட்டிகளில் "கராத்தே"யும் ஆரம்பம்

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் முதல் தடவையாக பாடசாலை அணிகளுக்கு இடையேயான கராத்தேப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. 15, 17, 19 வயதுப் பிதிவினர்களுக்கான போட்டிகள் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலை அணிகளின் விபரம் வருமாறு :

**15 வயதுப் பிரிவு**

யாழ் மாவட்டம் - யாழ்ப்பாணம் சென்.பற்றிக் கல்லூரி யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி வடமராட்சி யில் இருந்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வடம ராட்சி வேலாயுதம் மகா வித்தியாலயமும், மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியும், கிளி-நொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி கிளிநொச்சி மத்திய கல்லூரியும் கலந்துகொள் ளவுள்ளன.

**17 வயதுப் பிரிவு**

யாழ் மாவட்டத்தில் இருந்து ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியும் யாழ்ப்பாணத்திலிருந்து யாழ்ப்பாணம் சேன்ஜோன்ஸ் கல்லூரி யும் தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாசாலை மற்றும் பருத் தித்துறை ஹாட்லிக் கல்லூரியும்

மன்னார் சித்தி விநாயகர், இந்துக் கல்லூரியும் கிளி-நொச்சிமாவட்டம், கிளிநொச்சி இந்துக் கல்லூரியும், கிளி-நொச்சி மத்திய கல்லூரியும் கலந்துகொள்ளவுள்ளன.

**19 வயதுப் பிரிவு**

யாழ் மாவட்டம் - மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயமும் வடமராட்சி வேலாயுதம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாசாலையும் கோப்பாய் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும், மன்னார் மாவட்டம், மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி - கிளிநொச்சி மாவட்டம் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரியும் மோதவுள்ளன.

# வடமாகாணப் போட்டிகளில் ரென்னிஸ் அறிமுகம்

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் இந்தாண்டு முதல் தடவையாக அறிமுகம் இன்றும் நாளையும் செய்யப்பட்டுள்ள 19 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான ரென்னிஸ் போட்டிகள் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி ரென்னிஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. முதல் தடவையாக அறிமுகம் செய்யப்பட்ட இந்த ரென்னிஸ் போட்டிக்கு ஆண்கள் பிரிவ-ில் யாழ் மாவட்ட அணியை-யச் சேர்ந்த யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

முதல் சுற்றில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியும் மோதுகின்றன இதில் வெற்றி பெறும் அணியுடன் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி மோதவுள்ளது.

பெண்கள் பிரிவில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த உரும்பிராய் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியும் வவுனியா கல்வி வலயத்தைச் சேர்ந்த வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியும் கலந்து கொள்ளவுள்ளன.

முதல் சுற்றில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியும் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியும் மோதுகின்றன இதில் வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டியில் உரும்பிராய் இந்துக் கல்லூரியுடன் மோதவுள்ளது.




வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான உடற் பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி வடமாகாண சம்பினாக தெரிவு செய்யப்பட்டது. வெற்றி பெற்ற அணி வீரர்கள் கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியர்கள் வடமாகாண மாணவர் கல்வி அபிவிருத்தி பிரதிப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் ஆகியோருடன் காணப்படுவதைப் படத்தில் காணலாம்.

## டி.ஆர்.எஸ் முறை மீள்பரிசீலனையில்

கிரிக்கெட் போட்டியில் நடுவரின் முடிவை மறுபரிசீலனைக்கு உள்படுத்தும் (டி. ஆர்.எஸ்) முறையை கட்டாயமாக்க வேண்டுமென சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐசிசி) செயற்குழுக் கூட்டத்தில் 'வலியுறுத்தப் பட்டுள்ளது. ஆனால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) இதற்கு மீண்டும் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. பேஸ் டிராக்கிங் சிஸ்டம் ஹாட்ஸ் பாட் கேமரா ஆகிய தொழில் நுட்பங்களில் ஐசிசி-யின் செயற்குழு முழு நம்பிக்கை கொண்டுள்ளது. இதன் துல்லியத்தன்மை வல்லுநர்களால் ஆராயப்பட்டு விட்டது. எனவே அனைத்து டெஸ்ட் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலும் டிஆர்எஸ் முறையை அமுல்படுத்துவதை கட்டாயமாக்க வேண்டும் என்று ஐசிசி செயற்குழு பரிந்துரைத்துள்ளது.

இது தவிர டிஆர்எஸ் முறைப்படி, எல்பிடபிள்யூ முறையில் அவுட் ஆவதை முடிவு செய்வதில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. டெஸ்ட் போட்டியில் ஒரு இனிங்ஸில் இருமுறையும் ஒருநாள் போட்டியில் ஒரு முறையும் டிஆர்எஸ் முறைப்படி நடுவரின் முடிவை பரிசீலிக்க வீரர்கள் கோரிக்கை விடுக்க முடியும்.

இது தவிர பவர் பிளே முறையிலும் 30 யார்டு வட்டத்துக்குள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் வீரர்களை நிறுத்தும் முறையிலும் மாற்றம் கொண்டு வரவும். டெஸ்ட் போட்டிகளை பகல் இரவாக நடத்தவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் டிஆர் எஸ் முறையை ஏற்க முடியாது என்ற தனது நிலைப்பாட்டில் பிசிசிஐ உறுதியாக உள்ளது. இந்திய அணி பங்கேற்கும் போட்டிகளில் டிஆர்எஸ் முறை இருக்காது என்று பிசிசிஐ கூறியுள்ளது.

## விம்பிள்டன் ரென்னிஸ் வெளியேறினார் வீனஸ்

லண்டன் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் அமெரிக்காவின் முதல் நிலை வீராங்கணை வீனஸ் தோல்வியடைந்து வெளியேறினார்.

நேற்று முன்தினம் ஆரம்பமாகிய கிராண்டஸ்லம் விம்பிள்டன் தொடரின் முதல்நாள் ஆட்டத்தில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸை எதிர்த்து ரஷ்யாவின் எலினா வெஸ்னினா சந்தித்தார்.

# ஒலிம்பிக்கில் இனி சவுதிப் பெண்களும்

சவுதிப் பெண்கள் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டுள்ளது. இதனால் சவுதி அரேபியா பாலியல் பாகுபாடு காரணமாக ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படும் என்ற ஊடகங் களுக்கு முற்றுப் புள்ளி வைக் கப்பட்டுள் ளது.

சவுதி அரேபியாவில் பெண்கள் வெளிப்படையாக பங்குபெறுவதில் தடை இருந் தது. இம்முறை லண்டன் ஒலிம்பிக்கில் பங்கேற்க அனுமதி அளிக் கப்பட்டுள்ள போதிலும் அவர் களை சவுதி ஒலிம்பிக் அமைப்பு கண்காணிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஒலிம்பிக்கில் பங்கேற்க மன்னர் அப்துல்லா அனுமதியளித்துள்ள போதும் அவர்கள் தமது கண்ணியத்தைக் காக்கும் வகையில் 'ஹியாம்' ஆடையை அணிய வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.





லண்டன் ஒலிம்பிக்கில் பங் கேற்க தல்மாருஷ்டி மல்ஹார் குதிரையேற்றப் போட்டியில் பங்கேற்கவுள்ளார். தவிர பல பெண்கள் லண்டன் ஒலிம் பிக் போட்டிகளில் பங்கு பெறும் வாய்ப்பு உள்ளது என்று அந்நாட்டின் அதி காரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சவுதியின் அடிப்படை மதவாதிகள் எதிர்ப் புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்காக விசேடமா கத் தயாரிக்கப்பட்ட உடை ஹியாப் ஆகும். இந்த உடை முகத்தை மறைக்காமல் தலை முடியை மட்டும் மறைத துக்காட்டுவதுடன் உடலை ஒட்டியிருக்காத வகையில் அமைந்திருக்கும்.

# முன்னணி வீரர்கள் வெற்றி

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் நடப்பு சம்பியன் ஜெகோவிச், பெடரர் ஷெர போவா ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

ஜெகோவிச் வெற்றி

உலகின் முதல்நிலை வீர ரான சேர்பியாவின் நோவக் ஜெகோவிச்சை எதிர்த்து ஸ்பெயினின் ஜீயன் கார்லோஸ் பெரிரோவை சந்தித்தார்.

தனது திறமையை வெளிப்படுத்திய ஜெகோவிச் 6-3, 6-3, 6-1 எனும் நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

முதல்நாள் போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் முன்னிலை வீரர் ரோஜர் டெரர் ஸ்பெயினின் அல் பேர்ட் ரமோஸை எதிர்த்தாடினர்.

இதில் பெடரர் 6-1, 6-1, 6-1 எனும் நேர்செற் கணக்கில் இலகுவாக வெற்றிகொண்டு இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். பெண்கள் ஒற்றையர் பிரிவில் உலகின் முதல்நிலை வீராங்கணை மரிய ஷெரபோவா அவுஸ்திரேலியா அனஸ்டசிய நோடினோவை சந்தித்தார். இதில் ஷெரபோவா 6-2, 6-3 எனும் நேர் செற் கணக்கில் சுலபமாக வெற்றி கொண்டு அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 27.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

மேலும் , கறவைப்பசு ஒன்று இறந்திருக்கும் போது அதற்கு "மாட்டுக் கொள்ளை நோய்" ஏற்பட்டு இருப்பதற்கான நிகழ்தகவு யாது ?

(b) பின்வரும் வயது வகுப்புப் பரம்பலில் 2003 ம் ஆண்டுக்கான இலங்கையில் மதிப்பிடப்பட்ட மொத்த மக்கள் தொகை மில்லியனில் தரப்பட்டுள்ளது.

| வயது வகுப்பு (ஆண்டு) | மீடிறன் |
|---|---|
| 0 – 10 | 4.2 |
| 10 – 20 | 3.9 |
| 20 – 30 | 3.4 |
| 30 – 40 | 3.2 |
| 40 – 50 | 2.8 |
| 50 – 60 | 2.8 |
| 60 – 70 | 2.5 |
| 70 – 80 | 1.6 |
| 80 – 90 | 0.6 |

$a = 45$ ஆண்டுகள், $c = 10$ ஆண்டுகள் எனக் கொண்டு, மேற்குறித்த குறியீட்டைப் பயன்படுத்தி ஒவ்வொரு வகுப்பிற்கும் $Y, fy, fy^2$ என்பவற்றைக் கணிக்க.
இதிலிருந்து மக்கள் தொகையின் இடை வயதையும், நியம விலகலையும் ஆண்டுகளில் ஒரு தசம தானத்திற்குத் திருத்தமாக மதிப்பிடுக.
பரம்பலின் வடிவத்தை காரணத்துடன் கூறுக.

## அன்புசால் மாணவச் செல்வங்களே!

இன்று உங்கள் கரங்களில் தமிழ்நாதத்தின் இரண்டாவது "கல்வி ஒளி" தவழ்கிறது. உங்களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற உன்னத நோக்குடன் "கல்வி ஒளி" வெளிவருகிறது.

இலங்கையில் கல்வித் தரத்தில் உயர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள் என்ற நிலை மாறி இன்று துரதிஷ்டவசமாக யாழ் மாவட்டம் கல்வித் தரத்தில் மிகப் பின்தங்கும் நிலைக்கு வந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றி நாங்கள் கல்வியில் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிலைநாட்ட உங்களுடன் தமிழ்நாதம் கைகோர்க்கும் என்பதை தெரிவிப்பதில் உவகையடைகிறோம். உங்களின் ஆக்கபூர்வமான விமர்சனங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.

இங்கு பிரசுரிக்கப்படும் வினாத்தாள்களுக்கு விடைகளை எழுதி அனுப்பும் மாணவர்களில் அதிக மதிப்பெண் பெறுவோருக்கு பரிசில்கள் காத்திருக்கின்றன. விபரங்களுக்கு தொடர்ந்து "கல்வி ஒளியை" பாருங்கள்.

கல்வி ஒளி
தமிழ்நாதம்
இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் அன்புடன்,
உங்கள் ஆசிரியர்
என். கணேஷ்

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 27.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

27-06-2012

# கல்வி ஒளி

தமிழ்நாதம்

மாணவர் உலகின் கலங்கரைவிளக்கம் கல்வி - 01 ஒளி - 02

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எதிர்கொள்ளவிருக்கும் மாணவர்களுக்காக............

நேரம்: 1 மணி 15 நிமிடம் வினாத்தாள் : II ஆசிரியர்: திரு.ரு.வதன் (B.A.,)

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

01) பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

காற்றே காற்றே வீசாதே
கண்ணில் மண்ணைத் தூவாதே
சின்னஞ்சிறிய பாலகர் நாம்
பள்ளி செல்ல வேண்டுமல்லோ

ஏழைகள் வாழும் குடிசைகள்
வீணாய் உடைத்து தள்ளியதேன்
விளையும் உணவுப் பயிரையெல்லாம்
வீணே நாசம் செய்ததுமேன்

பாதையில் உள்ள மரங்களையே
பாழாய் நீயும் முறித்து விட்டாய்
பாதையில் செல்வோர் பயணத்தை
பாதியில் நீயும் நிறுத்திவிட்டாய்

புயலாய் நீயும் சீறாமல்
தென்றல் போல வீசிடுவாய்
இதமாய் நீயும் வீசிவிட்டால்
இனிதாய் நாமும் வாழ்ந்திடலாம்

01) "ஏழைகள்" என்பதன் ஒத்தபதம் யாது?
02) "குடிசைகள்" என்பதன் எதிர்ச்சொல் யாது?
03) பந்தியிலுள்ள அடுக்கிடுக்கு மொழி எது?
04) ஏழைகள் எங்கு வசிப்பதாகக் கூறப்படுகிறது?
05) பாடலில் உள்ள உயர்திணை, பன்மை, தன்மை, பெயர்ச்சொல்
06) சீற்றங்கொண்ட காற்று எவ்வாறு அழைக்கப்படும்?
07) பாடலில் உள்ள உவமைத்தொடர் எது?
08) பாடலில் உள்ள சினைப்பெயர் எது?
09) "மரங்களை" என்பதை ஒருமையில் எழுதுக.
10) "பயிரையெல்லாம்" என்பதை பிரித்தெழுதுக. (10 புள்ளிகள்)

02) பின்வரும் சொற்களை பிழைதிருத்தி எழுதுக.
01) தினைக்கழம் :
02) பாறாழுமன்றம் :
03) சவுக்கியம் : (3 புள்ளிகள்)

03) பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான நிறுத்தற் குறியீட்டினை இடுக.
01) பிள்ளைகளே அனைவரும் இங்கே கவனியுங்கள்
02) கண்ணன் நான் தான் பாட்டை எழுதினேன் எனக் கூறினான் (4 புள்ளிகள்)

04) பின்வரும் மரபுத்தொடர்களின் கருத்தினை எழுதுக.
01) காதைக்கடித்தல் :
02) தோள் கொடுத்தல் :
03) கண் திறத்தல் : (3 புள்ளிகள்)

05) பின்வரும் தொடர்மொழிக்கு தனிச்சொல்லை எழுதுக.
01) வழக்கு முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது
02) பிறருக்கு தீங்கு விளைவிக்காமை
03) ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த ஏனையோரால் வழங்கப்படும் உரை (3 புள்ளிகள்)

06) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.
01) This is a bus
02) Where are you going
03) Happy New year (6 புள்ளிகள்)

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை -2012
## இணைந்த கணிதம் - 11 (புதிய பாடத்திட்டம்)

(இணைந்த கணிதம் -1 கடந்த வார (20.06.2012) "கல்வி ஒளி"யில் வெளியாகியிருந்தது.
இவ்வாரம் இணைந்த கணிதம் - 11 வெளியாகிறது)

### Part - A

* எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

( இவ்வினாத்தாளில் g ஆனது ஈர்ப்பிலான ஆர்முடுகலை குறிப்பிடுகின்றது )

1. $O$ என்னும் புள்ளியிலிருந்து புவியீர்ப்பின் கீழ் $(3i+4j)ms^{-1}$ என்னும் வேகத்துடன் துணிக்கை ஒன்று எறியப்படுகின்றது. யாதுமொரு நேரம் $t$ யில்,
(1) துணிக்கையின் $O$ குறித்த தானக்காவியைக் காண்க.
(2) $O$ வினூடாக கிடைமட்டத்தை துணிக்கை அடைய எடுத்த நேரத்தைக் காண்க.

2. 

படத்தில் காட்டப்பட்டுள்ள கப்பித் தொகுதி ஓய்விலிருந்து இயங்கத்தொடங்குகின்றது. மேசைக்கும் துணிக்கைக்கும் இடையிலான உராய்வுக்குணகம் $\frac{1}{2}$ உம். கப்பி ஒப்பமானதும் ஆகும். $3m$ திணிவுடைய துணிக்கையின் ஆர்முடுகலைக் காண்க.

3. $8kg$ திணிவுடைய குற்றி ஒன்று கிடையுடன் $30°$ சாய்விலுள்ள கரடான சாய்தளம் வழியே தளத்திற்கு சமாந்தரமான இழை ஒன்றினால் மேல் நோக்கி இழுக்கப்படுகின்றது. குற்றியை $5m$ தூரம் சீரான கதியில் இழுக்க செய்யப்பட்ட வேலை $300J$ எனின், தளத்திற்கும் குற்றிக்கும் இடையிலான உராய்வுக்குணகத்தைக் காண்க.

4. $0.13kg$ திணிவுடைய கிரிக்கெட் பந்து ஒன்று கிடையாக இயங்கும் போது கிடையாக அடிக்கப்படுகின்றது. பந்து $30\,ms^{-1}$ கதியுடன் மட்டையை அணுகி $50\,ms^{-1}$ உடன் விலகிச் செல்கின்றது. மட்டையினால் பந்துக்கு கொடுக்கப்பட்ட கணத்தாக்கினைக் காண்க.

5. பூரண எளிமையிசை இயக்கத்தை ஆற்றும் துணிக்கையொன்று அலைவு மையத்திலிருக்கும் போது வேகம் $10cms^{-1}$ உம், அலைவு மையத்திலிருந்து $16cm$ தூரத்திலிருக்கும் போது அதன் ஆர்முடுகல் $4cms^{-2}$ உம் ஆயின், அலைவு காலத்தையும் வீச்சத்தையும் காண்க.

6. இரண்டு மெல்லிய சீரான $W_1, W_2$ நிறையுடைய கம்பிகள் $B$ யில் செங்குத்தாக இறுக்கமாக ஒட்டப்பட்டுள்ளன. இத்தொகுதி $A$ யிலிருந்து தொங்கவிடப்படின், $AB$ நிலைக்குத்துடன் ஆக்கும் கோணம் $\theta$ ஆனது $\tan\theta = \frac{W_2{}^2}{W_1{}^2+W_1.W_2}$ இனால் தரப்படும் எனக்காட்டுக.

7. 

உருவில் காட்டப்பட்டுள்ள நான்கு இலேசான கோல்கள் $AB, BC, CA, CD$ என்பன $A, B, C$ யில் ஒப்பமாக மூட்டப்பட்டு $A, D$ என்பன நிலைக்குத்து சுவருடன் இணைக்கப்பட்டுள்ளன. $B$ யில் $50N$நிறை இணைக்கப்பட்டுள்ளது. போவின் வரைபைப் பயன்படுத்தி கோல் $AC$ யில் இழுவையா உதைப்பா என எழுதி பெறுமானத்தைக்காண்க.

8. மாதிரிவெளி $S$ இல் $A, B$ என்பன சாரா நிகழ்ச்சிகள் ஆகவும், $P(A\cup B)=\frac{5}{8}, P\left(\frac{A}{B}\right)=\frac{7}{24}$ ஆகவும் இருப்பின்,$P(A), P(B)$ என்பவற்றைக் காண்க.

9. $4,6,12,4,10,12,3,x,y$ ஆகிய எண்களின் இடை 7 உம், ஆகாரம் 4 உம் ஆகும்.
(1) $x, y$ இன் பெறுமானங்களைக் காண்க.
(2) ஒன்பது எண்களினதும் இடையைக் காண்க.

10. $ABCD$ என்பது $a$ பக்கமுள்ள சதுர அடராகும். $AB$ இன் நடுப்புள்ளி $E$. சதுர அடரிலிருந்து $BCE$ என்ற முக்கோணி வெட்டி அகற்றப்படுகின்றது. எஞ்சிய பகுதியின் புவியீர்ப்பு மையத்தூரத்தை பக்கம் $AD$ யிலிருந்து காண்க.

### Part B

*ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக .

1 (a) புகைவண்டி $A$ ஆனது நிலையம் $X$ இல் ஓய்வில் இருந்து இயங்க ஆரம்பித்து $a$ எனும் சீரான ஆர்முடுகலுடன் இயங்கி $u$ எனும் வேகத்தைப் பெற்று அதன் பின்னர் மாறா வேகத்துடன் இயங்கி பின்னர் $\lambda a$ எனும் அமர்முடுகலுடன் இயங்கி நிலையம் $Y$ இல் ஓய்வுக்கு வருகிறது. $A$ இயங்கத்தொடங்கி $u/a$ நேரத்தின் பின் $\mu u$ வேகத்துடன் நிலையம் $X$ ஐக் கடக்கும் வண்டி $B$ ஆனது $\lambda a$ எனும் அமர்முடுகலுடன் இயங்கி நிலையம் $Y$ இல், $X$ ஆனது ஓய்வுக்கு வரும் அதே கணத்தில் ஓய்வுக்கு வருகிறது. இரு வண்டிகளினதும் இயக்கத்திற்கான $v-t$ வரைபை ஒரே படத்தில் வரைக இதிலிருந்து பின்வருவனவற்றைக் காட்டுக.
i. புகைவண்டி $A$ ஆனது மாறா வேகத்துடன் இயங்கிய நேரம் $\frac{(\mu-1)}{\lambda a}u$
ii. $\mu=\sqrt{\lambda}+1$

(b) ஒரு யுத்தக் கப்பல் $A$ வடக்கு நோக்கி, ஒரு சீர் வேகம் $u\,Km/h$ உடன் செல்கிறது. ஒருநள்ளிரவில் $A$ இற்கு நேர்கிழக்கே $d\,Km$ தூரத்தில் ஒரு எதிரிக் கப்பல் $B$ தோற்றப்பட்டது. $B$ வடக்குக்கு $\theta°$ மேற்குத் திசையில் $V$ $(V\cos\theta > u)$ யுடன் செல்கிறது $B$ இன் $A$ தொடர்பான வேகத்தைக் காண்க, $B$ இன் $A$ தொடர்பான பாதையை வரைக.

$A, B$ க்கு இடையே அதி குறைந்த தூரம் $l\,Km$ ஆயின் $l$ ஐக் காண்க. இது நிகழ எடுத்த நேரத்தையும் காண்க.

$A$ யிலிருக்கும் தொலைத்தொடர்புகள் $r\,Km$ $(d > r > l)$ தூரத்திற்கு மட்டும் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருப்பின் $A$ இன் தகவல்களை $B$ எவ்வளவு நேரத்திற்கு கேட்டறிய முடியும் எனக் காண்க.

2. 

21) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
01) 119 02) 1919 03) 1929

(a) M திணிவுடைய வண்டி ஒன்று ஒப்பமான கிடைப்பாதையின் மேல் அசையக்கூடியது. இலேசான ஒப்பமான

07) பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
01) கரும்பலகை
02) விளையாட்டு மைதானம்
03) வகுப்பறை **(6 புள்ளிகள்)**

08) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
01) கிரி சுது பாட்ட
02) அம்ப கஸ
03) ஹொந்தின் இன்னவா **(6 புள்ளிகள்)**

09) பின்வரும் படங்கள் குறிக்கும் விளையாட்டினை எழுதுக.


01) 02) 03) 04) 05)

**10-25 வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க.**

10) மின்சாரம் தாக்குகின்ற ஒருவரை காப்பாற்ற உடனடியாகச் செய்ய வேண்டியது
01) அவரை இழுத்து அப்பால் தள்ளுதல்
02) சத்தமாகக் கூக்குரலிட்டு உதவிக்கு அழைத்தல்
03) பிரதான ஆளியை அணைத்தல்

11) தேசியக் கொடியில் உள்ள மிருகம்
01) சிங்கம் 02) வாளேந்திய சிங்கம் 03) வலக்கையில் வாளேந்திய சிங்கம்

12) வெள்ளைப் பிரம்பினை பயன்படுத்துவோர்
01) காது கேட்டகாதவர் 02) கண் தெரியாதவர் 03) வாய் பேசாதவர்

13) நிறையுணவு என்பது
01) பாணும் முட்டையும் 02) பாலும் பழமும் 03) பாலும் முட்டையும்

14) இலங்கையின் அரச இலச்சினையில் நிறைகலசம் குறிப்பது
01) சௌபாக்கியம் 02) உலக ஒற்றுமை 03) தர்மமும் நீதியும்

15) இப்படம் குறிப்பது
01) இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சி சேவை
02) இலங்கை அஞ்சல் திணைக்களம்
03) தேசிய தொலைக்காட்சி சேவை

16) பின்வரும் உணவு வகைகளுள் உணவுக்கு சுவையூட்டியாகப் பயன்படாதது
01) உப்பு 02) மிளகாய் 03) ரம்பை

17) படத்தில் காணப்படும் இலங்கை கிரிக்கெட் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர்



01) முத்தையா முரளிதரன்
02) சனத் ஜெயசூரிய
03) அஜந்த மெண்டிஸ்

18) புவியீர்ப்பு விசையினைக் கண்டுபிடித்தவர்
01) தோமஸ் அல்வா எடிசன் 02) சேர்.ஐசாக் நியூட்டன் 03) அலெக்சாண்டர் கிரகம் பெல்

19) உடற்பயிற்சி செய்வதற்கு உகந்த நேரம்
01) காலை 02) மதியம் 03) இரவு

20) வேரின் மூலம் இனம் பெருக்கும் தாவரம்

5. (a) ஒவ்வொன்றும் $8w$ உம் நீளம் $5a$ உம் கொண்ட சமனான சீரான $AB, BC$ என்னும் இரு கோல்களும் $8w$ உம் நீளம் $5a$ உம் கொண்ட ஒரு சீரான மூன்றாம் கோல் $AC$ ஒன்று சுயாதீனமாக இணைக்கப்பட்டு $ABC$ என்னும் முக்கோணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. $A$ யில் இருக்கும் ஒப்பமான அச்சாணியிலிருந்து முக்கோணியானது ஓர் நிலைக்குத்துக் தளத்தில் தொங்குகின்றது. $AC$ கிடையாகவும் $B$ யானது $AC$ யிற்கு கீழாகவும் அமையும் வண்ணம் சமநிலையில் இருப்பதற்கு இணையொன்று கோல் $AC$ யில் பிரயோகிக்கப்படுகின்றது.
i. இணையின் திருப்பத்தைக் காண்க.
ii. ஒரு வரிப்படத்தில் அதன் போக்கைக் காட்டுக.
iii. $BC$ மீது $CA, AB$ என்பவற்றினால் உஞற்றப்படும் விசைகளின் கிடை , நிலைக்குத்துக் கூறுகளைக் காண்க.

(b) சமநீளமுள்ள 7 இலேசான கோல்கள் அவற்றின் முனைகளில் ஒப்பமாக மூட்டப்பட்டு பெறப்பட்ட சட்டப்படல் ஒன்று படத்தில் காட்டப்பட்டவாறு 4 கிடைவிசையினால் நிலைக்குத்து தளத்தில் நாப்பதில் வைத்திருக்கப்படுகிறது.
i. $P, Q$ விசைகளைக் காண்க
ii. தகைப்பு வரிப்படம் வரைவதன் மூலம் தகைப்புகளை கண்டு அவற்றை இனங்காண்க.




6. கிண்ணம் ஒன்று ஆரை $r$ ஐ உடைய மெல்லிய சீர்க் கோள ஓட்டின் மையத்திலிருந்து தூரம் $r\cos\alpha$ இல் உள்ள தளத்தில் இருக்கும் வட்ட ஓரத்தைக் கொண்ட அவ்வோட்டின் பெரும் பகுதியின் வடிவத்தில் அமைந்துள்ளது.
i. அலகுப் பரப்பளவிற்கான திணிவு $\sigma$ எனின் கிண்ணத்தின் திணிவு $2\pi r^2\sigma(1+\cos\alpha)$ எனக்காட்டுக.
ii. கிண்ணத்தின் திணிவு மையம் சமச்சீர் அச்சின் மீது, வட்ட ஓரத்தின் மையத்திலிருந்து தூரம் $\frac{r}{2}(1+\cos\alpha)$ இல் உள்ளது எனக் காட்டுக.
iii. மேலே (i), (ii) ஆகியவற்றின் பேறுகளைப் பயன்படுத்தி ஆரை $a$ யை உடைய சீர்த்திண்ம அரைக்கோளத்தின் திணிவு மையத்தின் தானத்தைக் காண்க.

7. விலங்கு பரிபாலன போதனாசிரியர் ஒருவரின் கருத்துப்படி கறவைப்பசுக்களிற்கு பலவிதமான நோய்கள் ஏற்படலாம் எனவும் இதில் முக்கியமான மூன்று நோய்கள் உண்டு எனவும் கூறினார் இதன் அடிப்படையில் , ஏற்படக்கூடிய முக்கியமான மூன்று நோய்களும் வருமாறு.
i. "கால்வாய் நோய்" இது வைரஸ் தாக்கத்தினால் ஏற்படும் எனவும் ,
ii. "மாட்டுக் கொள்ளை நோய்" இது பற்றீரியா வினால் ஏற்படும் எனவும் ,
iii. "அந்திரக்ஸ் நோய்" இதுவும் பற்றீரியா வினால் ஏற்படும் எனவும் கூறினார் .
இதன் அடிப்படையில் நோய் கவனிக்கப்படாவிட்டால் கறவைப்பசு இறக்க நேரிடலாம் எனவும் கூறினார்.

(a) மேலும் , இறக்க நேரிடும் ஒரு கறவைப்பசு முக்கியமான இம் மூன்று நோய்களில் ஏதாவது ஒன்றின் தாக்கத்திற்கு மட்டும் உட்பட்டிருக்கும் எனவும் கூறினார் . எழுமாறாகத் தெரியப்பட்ட கறவைப்பசு ஒன்றுக்கு முறையே முதலாம் , இரண்டாம் , மூன்றாம் நோய் ஏற்படுவதற்கான நிகழ்தகவுகள் $0.5, 0.4, 0.1$ எனவும் , முறையே இவற்றின் போது கறவைப்பசு இறப்பதற்கான நிகழ்தகவுகள் முறையே $0.7, 0.8, 0.9$ எனவும் கூறினார் . இதிலிருந்து ,
எழுமாறாகத் தெரியப்பட்ட நோய் உடைய கறவைப்பசு இறப்பதற்கான மொத்த நிகழ்தகவு யாது ?

(a) $M$ திணிவுடைய வண்டி ஒன்று ஒப்பமான கிடைப்பாதையின் மேல் அசையக்கூடியது. இலேசான ஒப்பமான கப்பி $C$ யையும் அதற்கு மேலாகச் செல்லும் நீளா இழையொன்றையும் வண்டி தாங்குகின்றது. இழையின் ஒரு முனை சுவரில் உள்ள $D$ இல் இருந்து $C$ வரைக்கும் உள்ள இழை கிடையானது. இழையின் மறுமுனை $m$ திணிவுடைய துணிக்கை ஒன்றிற்கு இணைக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு இழை இறுக்கமாக இருக்குமாறு ஓய்வில் இருந்து மென்மையாக விடப்பட்டது. தொடரியிரிவசைவிலே துணிக்கைக்கும் கப்பிக்கும் இடையில் உள்ள இழையின் பகுதி நிலைக்குத்துடன் $\theta$ எனும் ஒருமைக் கோணத்தை ஆக்கின் $\frac{\sin\theta}{(1-\sin\theta)^2} = \frac{m}{M}$ எனக் காட்டுக.

இழையில் உள்ள இழுவை $(\sec\theta - \tan\theta)mg$ எனவும் காட்டுக. வண்டிக்கும் பாதைக்கும் இடையில் உள்ள மறுதாக்கத்தையும் காண்க.

(b) பூரணமீள்தன்மையற்ற அழுத்தமான தளத்திலிருந்து $h$ உயரத்தில் உள்ள புள்ளி $A$ ஆகும். $l\,(> h)$ நீளமுள்ள மீளா இழையின் ஒருமுனைக்குக் கட்டப்பட்டு மறுமுனை ஒரு துணிக்கைக்கு இணைக்கப்பட்டுள்ளது. துணிக்கை $A$ இன் கிடை மட்டத்தில் இழை இறுக்கமாகப் பிடிக்கப்பட்டு ஓய்விலிருந்து விடப்படுகிறது. துணிக்கை அடுத்தாற்போல கணநேர ஓய்விற்கு வரும்போது அது தளத்திலிருந்து $\frac{h^5}{l^4}$ உயரத்தில் உள்ளது எனக் கட்டுக.

3. இயற்கை நீளம் $a$ உம் மீள்தன்மைமட்டு $mg$ உம் கொண்ட மீள்தன்மை இழை ஒன்றின் ஒரு முனை, ஒப்பான கிடை மேசையொன்றின் மீதுள்ள $O$ என்னும் புள்ளிக்கு இணைக்கப்பட்டிருப்பதோடு $O$ ஆனது மேசையின் விளிம்பிலிருந்து $2a$ தூரத்தில் காணப்படுகின்றது. இழையின் மற்றைய முனையில் $m$ திணிவுள்ள $P$ என்னும் துணிக்கை இணைக்கப்பட்டுள்ளது. துணிக்கை $P$ உடன் இணைக்கப்பட்ட மற்றுமொரு இலேசான நீளா இழை, மேசையின் முன்பு குறிப்பிட்ட விளிம்பின் மேலாகச் சென்று மற்றைய முனையில் $m$ திணிவுள்ள $Q$ என்னும் துணிக்கையொன்றைத் தாங்குகின்றது. துணிக்கை $P, O$ இலிருந்தும் விளிம்பிலிருந்தும் $a$ தூரத்தில் காணப்படும் வகையில் தொகுதியானது விளிம்பிற்குச் செங்குத்தான தளத்தில் காணப்படுமாறு ஓய்வில் பிடிக்கப்பட்டு விடுவிக்கப்படுகின்றது. மீள்தன்மை இழையின் நீளம் $x$ ஆகவிருக்கும் போது $x$ ஆனது,

$\ddot{x} + \frac{g}{2a}(x - 2a) = 0$ என்ற சமன்பாட்டைத் திருப்தி செய்யும் எனக் காட்டுக.

$x - 2a = A\cos\omega t + B\sin\omega t$ (இங்கு $\omega^2 = \frac{g}{2a}$ ) என எழுதுவதன் மூலம் $A, B$ என்ற ஒருமைகளைத் துணிந்து,

துணிக்கை P ஆனது $\pi\sqrt{\frac{a}{2g}}$ என்ற நேரத்தின் பின் மேசையின் விளிம்பை $\sqrt{\frac{ag}{2}}$ என்ற வேகத்துடன் அடையும் எனக் காட்டுக.

$0 < t < \pi\sqrt{\frac{a}{2g}}$ ஆகுமாறுள்ள t நேரத்தில் இழையில் காணப்படும் இழுவையைக் கணிக்க.

4. (a) $r\,cm$ ஆரையும் $W$ நியூட்டன் நிறையுமுள்ள சீரான கோளமொன்றின் மேற்பரப்பிலுள்ள புள்ளியொன்றுடன் இலேசான நீட்டமுடியாத இழையொன்று இணைக்கப்பட்டுள்ளது. இவ்விழையின் மற்றைய நுனியானது கரடான நிலைக்குச் சுவரொன்றின் மீதுள்ள ஒரு புள்ளியில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. நிலைத்த புள்ளிக்கு $3r\,cm$ கீழேயுள்ள ஒரு புள்ளியிற் சுவரைத் தொட்டுக்கொண்டு கோளம் நாப்பத்திலே (சமநிலையிலே) ஓய்வில் இருக்கிறது. கோளம் சுவரைத் தொடும் புள்ளி கீழ் நோக்கி நழுவும் தறுவாயிலும் கோளத்துக்கும் சுவருக்குமிடையே உள்ள உராய்வுக்குணகம் ¾ ஆகவும் இருக்குமெனின், நிலைக்குத்துடன் இழையின் சாய்வைக் காண்க. இழையிலுள்ள இழுவை $\frac{5W}{6}$ நியூட்டன் எனக் காட்டுக.

(b) படத்தில் காட்டப்பட்டவாறு $w$ நிறையும் $a$ ஆரையும் உடைய திண்ம அரைக்கோளம் $\alpha$ சாய்வுடைய சாய் தளத்தில் வைக்கப்பட்டுள்ளது. $a$ நீளமுடைய இலேசான இழை அரைக்கோளத்தின் விளிம்பு $A$ யுடனும், மற்றைய முனை சாய்தளத்திலிருந்து $a$ தூரத்திலுள்ள முளை $B$ யுடனும் இணைக்கப்பட்டுள்ளது. சமநிலையில் $\tan\theta = \frac{3\sin\alpha}{16\sin\alpha + 3\cos\alpha}$ எனக் காட்டுக.

இழை $OB$ யுடன் அமைக்கும் கோணம் $\theta$ எனின்,




21) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
01) 119 02) 1919 03) 1929

22) விலைக்கு வாங்கிய பால் பைக்கற் ஒன்றினை அருந்துவதற்கு முன்பாக அவதானிக்க வேண்டியது.
01) பால் பைக்கற்றின் உற்பத்தி திகதி
02) பால் பைக்கற்றில் அடங்கியுள்ளவை
03) பால் பைக்கற் காலாவதியாகும் திகதி

23) அருகில் உள்ள தையல் முறை எது?



01) கம்பளித் தையல்
02) சங்கிலித் தையல்
03) வெட்டுக்குத்து தையல்

24) தச்சன் குருவி என அழைக்கப்படும் பறவை எது?
01) தும்பி 02) மரங்கொத்தி 03) கிளி

25) "நாளை மழை பெய்யும்" என்ற கூற்று
01) எப்பொழுதும் உண்மை 02) எப்பொழுதும் பொய் 03) சிலவேளை உண்மை **(16 புள்ளிகள்)**

**பின்வரும் கணித வினாக்களுக்கான விடைகளை எழுதுக.**

26) ராஜா காலையில் நடந்து செல்லும்போது அவனது நிழல் தனக்குப் பின்னால் விழுந்ததாக கூறினான் எனின் அவன் சென்ற திசை என்ன?

27) சுரபி தனது பிறந்த தினம் 2012.06.19 எனக் கூறினாள் எனின் பிறந்த ஆண்டு மாதம் திகதி யாது?

28) 4 பெரிய பூக்கள் வரையக்கூடிய தாள் ஒன்றில் 12 சிறிய பூக்கள் வரைய முடியும் எனின், 36 சிறிய பூக்கள் வரையக் கூடிய தாளில் எத்தனை பெரிய பூக்கள் வரைய முடியும்?

29) குழந்தை ஒன்றுக்கு ஒரு தடவைக்கு 3 பிஸ்கட்டுக்கள் வீதம் நாளொன்றுக்கு மூன்று தடவை வழங்குவதற்கு 50 பிஸ்கட்டுக்கள் எத்தனை நாட்களுக்கு போதுமானது?

30) தந்தை ஒருவர் தன்னிடம் இருந்த பணத்தில் அரைவாசியை உணவுக்கும், மீதியில் அரைவாசியை உடைவாங்கவும் எஞ்சிய பணத்தில் அரைவாசியை சேமிப்புக்கும் இட்டார் எனின், தந்தையிடம் ஆரம்பத்தில் இருந்த பணம் எவ்வளவு?

31) கடைக்குச் சென்ற அபிர்தன் ரூபா 27.50 வீதம் 3 கொப்பிகளும், ரூபா 15 வீதம் இரண்டு பேனாக்களும் வாங்கிவிட்டு கடைக்காரனிடம் 100 ரூபா கொடுத்தான் எனின், இன்னும் எவ்வளவு பணம் கடைக்காரனுக்கு அவன் கொடுக்க வேண்டும்?

32) ஆற்று நீர் மணிக்கு 45Km வேகத்தில் பாய்கின்றது. அதற்கு எதிராக கப்பல் ஒன்று மணிக்கு 80Km வேகத்தில் பயணிக்கிறது எனின் கப்பல் பயணிக்கும் வேகம் என்ன?

33) சிறுவன் ஒருவன் புத்தகம் ஒன்றில் 107 ஆம் பக்கம் தொடக்கம் 168 ஆம் பக்கம் வரை வாசித்தான் எனின், அவன் வாசித்த மொத்த பக்கங்கள் எத்தனை?

34) உருவின் சுற்றளவு யாது? **(18 புள்ளிகள்)**

